Koviloor Digital Library

ஸ்ரீ காஞ்சி மாமுனிவர் அந்தாதி

2846
Q1:332ப

[illegible]
சுப்பிரமணியன்

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-5

ஸ்ரீகாஞ்சி மாமுனிவர் அந்தாதி

2846

ஆசிரியர்

கவிஞர் கரூர் எல். சுப்பிரமணியன்

கோவிலூர் ஆதீனம்
2846
031,1
கோவிலூர்-630 307

வெளியீடு

கவிஞர் நெல்லைபாலு
கோமதி சுந்தரம் பதிப்பகம்
10, கூடலூரர், மறைமலைநகர்
கருநிலம் அஞ்சல்
செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்.மாவட்டம், 603 204.

1995 — 30/-

Koviloor Digital Library

கோமதி சுந்தர பதிப்பக வெளியீடு : 16

உரிமை : பதிப்பாளருக்கு

பதிப்பு : ஜூன் 1995

பக்கம் : 160

விலை : ரூ.30-00

அச்சிட்டோர் : ஆல்பா லேசர் பிரிண்டிங்,
சென்னை -5, போன். 830755.

நானிலத்தில் நடமாடும்
தெய்வமாய் விளங்கி
அருள்பாலித்து வந்து
சித்தியடைந்த ஜகத்குரு
பரமாச்சாரியார் சுவாமிகளின்
திருவடி மலர்களில் இந்நூலை
காணிக்கையாக்குகிறோம்

Koviloor Digital Library

4-5

வாழ்த்துப்பாமலர்!

மாந்தர் குலமெனும் மாநதிக்கெல்லாம்
சாந்த மதூட்டும் சாத்விகக் கடலை,
அழியாதலைக்கும் அகத்திருள் தன்னை
விழியால் ஒழிக்கும் வித்தகச் சுடரை

பூவுலகத்துப் புண்ணிய மெல்லாம்
பொருந்திய வடிவாய்ப் பூத்தசத் குருவை
வந்தனையொடு பிற மதத்தரும் போற்றும்
சந்திர சேகர ஜகத்குரு மூர்த்தியை

சிந்தையில் என்றும் சிவமாய்வைத்து
ஜீவித்திருப்போன் செந்தமிழ்க்கவிஞன்.
கருவூர் வாழ்குவோன், கவிதை உணர்வு
கருவூர் முதலே கைவரப்பெற்றோன்

சுப்பிரமணியெனும் சுந்தரப் பெயரோன்
இப்பிறவிதனைஎடுத்ததன் பயனாய்க்
கவிமலர் கொண்டு காஞ்சிப் பெரியவர்
அடிமலர்தம்மை அருச்சித் தேத்தி

அந்தா தியெனும் அன்புமாலையைத்
தந்தான் வாழ்க. தமிழ்க்கவி மாலையும்
நந்தாவிளக்காய் நல்லொளி பரப்பி
வாழ்க குருவருளாலே
வாழ்க வையகம், வாழ்க பல்லாண்டு.

காஞ்சிபுரம்
17.1.1993

அன்புடன்
மா. வேங்கடேசன்

Koviloor Digital Library



பதிப்பாளர் பக்கம்

நடமாடும் தெய்வமாய் விளங்கி நானிலத்தில் உள்ளவர்களுக்கு நல்உரை வழங்கி முக்தியடைந்த காஞ்சி காமகோடி பீடாதிபதிஸ்ரீமஹா ஸ்வாமிகளின் 102வது ஜெயந்தி விழா மற்றும் ஸ்ரீகாமாட்சி அம்மன் ஸ்வர்ண விமான கும்பாபிஷேக விழாவை ஒட்டி இந்நூல் வெளிவருகிறது. "காஞ்சி மாமுனிவர் அந்தாதி" என்றஇந்நூலை படைத்த கவிஞர் கரூர் லெ.சுப்பிரமணியன் மஹாஸ்வாமிகளின் தீவிர பக்தர்.. "தெய்வத்தின் குரலை" தன்வாழ்க்கையில் பிரதிபலிப்பவர்... ஜனக்கல்யாண் இயக்கம் தந்த ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் திருக்கரங்களால் இந்நூல் வெளியிடப்படுகிறது. ஸ்வாமிகளுக்கு ஆத்மார்த்த வந்தனங்களை சமர்ப்பிக்கிறேன்.

இந்நூல் வெளிவர காரணமாயிருந்த அனைவருக்கும், குறிப்பாகவாழ்த்துரை வழங்கி இந்நூலின் முதல் பிரதியைப் பெற்ற கனராவங்கியின் உதவி பொது மேலாளர் திரு K. சேகர் அவர்களுக்கும்,மவுண்ட்ரோடு கனரா வங்கி சீனியர் மேலாளர் S.பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் உற்றுழி உதவி செய்தகாட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு K.சங்கரன் அவர்களுக்கும் மிக்க நன்றி....

இந்நூலில் வாழ்த்தி கவிதை மற்றும் அணிந்துரை நல்கிய அன்புஉள்ளங்கள் கவிஞர் முத்து. இராமமூர்த்தி புலவர் மா.வேங்கடேசன் மற்றும் குறுகிய காலத்தில் அச்சிட்டுத் தந்த மகேந்திரா கிராபிக்ஸ் திரு. மாரியப்பன் ஆல்பா லேசர் திரு.R. ராமச்சந்திரன் மற்றும்

Koviloor Digital Library

கவிவலவர் உயர்க! வாழ்க!!

(பைந்தமிழ்ப்பாமணி திரு முத்து இராமமூர்த்தி, காஞ்சிபுரம்)

உலகத்தின் உயிர்யாவும் உய்தற்காக
உயர்தவத்தைத் தினம் செய்த உயர்ந்த ஞானி
கலகத்தைத் தரையெங்கும் காணாவண்ணம்
கருணையினால்அருள் செய்த காஞ்சித்தேவர்
நலமெங்கும் விதைத்திடவே நடந்த தெய்வம்
நற்பார்வை ஒளியாலேஞாலம் வாழ
புலமெங்கும் ஞானத்தைப் பொழிந்த மேகம்
புவி வணங்கும் ஜகத்குருவும் பரமாச்சார்யார்
நற்பெருமை வரலாற்றை நாமும் போற்ற
நற்றமிழில் அந்தாதி நயந்து செய்து
கற்றவரும் போற்றிடவே கவிதை தந்த
கரூர் நகர சுப்ரமணிய கவிதை வாணர்
பெற்றருளும் பேறென்ன? பெரியவர்கள்
பேராசி கொண்டிட்டார்! பெருமை யோடே
உற்ற அரும்புலமையினால் உலகோர் போற்ற
உயர் தமிழால் கவிவலவர் உயர்க! வாழ்க!!

Koviloor Digital Library

பரமாச்சாரியார் ஸ்வாமிகளின் பரம அனுக்ரஹம்....

K.சேகர்

(Assistant General Manager, Canara Bank, Madras)

ஸ்ரீ காஞ்சி மாமுனிவர் அந்தாதி என்ற பக்தி நூலை எமது வங்கிஅலுவலர் திரு. லெ.சுப்பிரமணியன் என்பவர் இயற்றி வெளியிடுவது குறித்து மிக மகிழ்வுற்றேன். ஸ்ரீ மஹா பெரியவர்களை என்றும்மனதிலே தெய்வமாக ஆராதிக்கும் எளியேன் அந்தமகானுபாவரின் பேரில் இயற்றிய அந்தாதி என்னைப்போலவே இந்நூலினைக் கண்ணுறும் அன்பர்கள் அனைவருக்கும் மகிழ்வையும்பரமாசார்யாரின் பரம அனுக்ரஹத்தையும் பெற்றுத் தரும்என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ பரமாசார்யாரின் பதமலரைப் போற்றிப்பணிவோம்.

Koviloor Digital Library

ஆசிரியர் முகவுரை

காஞ்சி மஹா ஸ்வாமிகளின் பெருமை அளவிடற்கரியது. பெரியவர்என்ற சொல்லிற்கு முற்றும் பொருத்தமான முற்றுந் துறந்த முழு ஞானச் செம்மல், ஜீவன்முக்தராய், அத்வைத சித்தி பெற்றஅருளாளராய், கருணைக்கடலாய், கோடானுகோடி ஜீவர்களை உய்விக்க வந்த அவதார புருஷராய் அனைவர் உள்ளங்களிலும் அருளாட்சி செய்த தவசீலர். எளிமையின் இருப்பிடமாய் நமையெல்லாம் வாழ்விக்க தாம் நூறாண்டு வாழ்ந்த அந்தஉத்தமர் யாக்கையை விடுத்து அண்ண மயில் மஹா சமாதிஎய்திவிட்டார்கள்.

என் உள்ளம்நிறைந்த அப்பெருமானிடத்தே முன்தவப் பயனால்பக்திபூண்ட யான் சமீபத்தில் ஸ்வாமிகளின் ஷஷ்டி பூர்த்தியை ஒட்டிஓர் அன்பரால் வெளியிடப்பட்டிருந்த புனித

Koviloor Digital Library

வரலாற்று நூலைப்படிக்கும் பாக்கியம் பெற்றேன். அதைப் படித்தது முதல் அவர்தவ வாழ்வை ஓர் அந்தாதியாகப் பாடவேண்டுமென்ற பேரவாஎன்னுள் எழுந்தது. அந்த அவா பூர்த்தியான தருணம் மஹாஸ்வாமிகளின் மஹா சமாதியும்நிகழ்ந்தது.

ஆதிநாளை (அனுஷம்) அந்தமும் ஆக்கிச் சென்ற அருளாளரின்அந்தாதியை பைந்தமிழ்ப்பாமணி முத்து இராமமூர்த்தியின் அறிமுகத்தோடு ஸ்ரீ பால பெரியவர்கள் சன்னதியில் சமர்ப்பித்தேன். பெரியவர்களும் காஞ்சி முனிவர் அந்ததயை நூலாக வெளியிட விருப்பம் தெரிவித்து ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் செஞ்சொற் கவிமணி புலவர் மா.வேங்கடேசன் அவர்களிடம் ஓர் அணிந்துரை பெற்றுத் தந்துஅருளினார்கள். அந்தாதி உருவாவதில் பெரிதும் ஊக்கம் தந்தகவிஞர் முத்து இராமமூர்த்தி அவர்கள், அந்தாதியை நூலாகவெளியிட மிகவும்ஊக்கி அணிந்துரையும் நல்கி உதவினார்கள்.

ஸ்ரீ மடம் கைங்கரியத்தில் மிக்க ஆர்வமுடன் ஈடுபட்டு அண்மையில்ஸ்ரீ மஹா பெரியவர்கள் அஞ்சலியாக தெய்வ தரிசனம் என்ற தெய்வீகத் தொகுப்பு நூலைப் பதிப்பித்த கவிஞர் நெல்லைபாலு அவர்களின் சீரிய முயற்சியில் மேற் பார்வையில் இந்நூல்பதிப்பிக்கப்படுவதில் பெரிதும் மகிழ்கிறேன். அதுவும் காஞ்சிஸ்வாமிகளின் திருக்கரங்களா லேயே அன்னை காமாட்சி அம்மன்ஸ்வர்ண விமான கும்பா பிஷேக விழாவில் வெளியிடுவது எனக்குப் பெரும்பாக்கியம்.

அகில உலகமும் அறிந்த மகானின் பெருமையை யான் சொல்லி விளக்கத் தேவை இல்லைதான். தவிர அவர்கள் மகிமையை உள்ளபடி உணர்ந்திடவோ, உரைத்திடவோ போதிய அருகதைஎனக்கு இல்லைதான்; ஆனாலும் அணிலும் மணல் சுமந்து ஸ்ரீராமகைங்கரியத்தில் ஈடுபட்டது போலவும், சர்க்கரை மலையில் சிறு எறும்பு ஒரு துகளைக்கொண்டு

Koviloor Digital Library

செல்வது போலவும் என் ஆத்மதிருப்திக்கு இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என மாணிக்க வாசகப்பெருமான் உரைத்தபடி மஹாஸ்வாமிகள் உள்நின்று அருள இவ்வந்தாதி உருப்பெற்றுள்ளதுஎன்பதே என் முடிபு. இப்பணியில் உதவிய அனைவருக்கும் எனது வந்தனமும், நன்றியையும் உரித்தாக்குகிறேன்.

மஹா பெரியவர்களின் மலர்ப்பதங்களின் இந்நூலை காணிக்கையாக்கி என் அஞ்சலியை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

நூலில் வாழ்த்துரை வழங்கிய திரு K. சேகர், (Asst General Manager- Canara Bank - Madras) அவர்களுக்கும், சென்னை கனரா வங்கி சீனியர் மேலாளர் திரு. S. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் மிக்க நன்றி.

ஸ்ரீஸ்வாமிகளின் மலரடி தொழும்

அன்பன்

கரூர். லெ. சுப்பிரமணியன்

"பொருட்களால் இறைவன் உபசாரம் செய்வதைக் காட்டிலும் வேதங்கள் விதித்துள்ள கர்மாக்களைச் செய்து இறைவனுக்கு அர்ப்பணம் செய்து கடவுள் ஆராதனை செய்வது மிகவும் உயர்ந்தது"

- ஸ்ரீ பரமாச்சார்யார்

Koviloor Digital Library

கல்லாலின் கீழ் அமர்ந்து

பாலகுமாரன்

எனது ஊர் அதாவது பூர்வீகம் பழமார்நேரி. தஞ்சை ஜில்லா திருக்காட்டுப்பள்ளிக்கு அருகே உள்ள காவிரிக்கரை கிராமம் எங்கள்இனம் பழமார்நேரி பிரஹசரணம். அந்த இனத்துக்கு குருமடம்காமகோடி பீடம். இரண்டு தலைமுறைகளுக்கு முன்பு இந்தமடம்கும்பகோணத்தைத் தலைமையாய்க் கொண்டு இயங்கி வந்ததாய்சொல்வார்கள்.

பிறகு ஸ்ரீ பரமாச்சாரியாள் அவர்கள் காலத்தில் காஞ்சிக்குமாற்றியதாய்க் கேள்விப்பட்டிருக்கிறேன். பிழைப்பின் பொருட்டு என்தாயாரின் தகப்பனார், பழமார்நேரி சுப்ரமணிய ஐயர்காஞ்சிபுரத்தில் வசிக்க இந்த இட மாற்றத்தை மிகவும்விரும்பியதாய்க் கேள்விப்பட்டிருந்தேன்.

பழமார்நேரி சுப்ரமணிய ஐயர், அதாவது என் பாட்டனார்கம்பவுண்டர், அவரை ஸ்ரீ பரமாச்சாரியாள் அவர்கள் தூயதமிழில் மருந்து கலப்பவர் என்றுதான் அழைப்பார்களாம்.

சுப்ரமணியன் என்பது பழமார்நேரியின் வெகுஜனப்பெயர். மருந்துகலக்கற சுப்ரமணியன் தனிப்பெயர். தொழிலாகுபெயர் பல்வேறு நல்ல காரியங்களில் மிகுந்த பணிவோடும்,பக்தியோடும் என் தாய்வழிப் பாட்டானார் ஸ்ரீ பரமாச்சாரியாரின் கட்டளைகளை சிரமேற்றுப் பங்கேற்றிருக்கிறார்கள்.

ஆனால் என் தகப்பனார் காலக்கோளாறால் எதிலும் ஆழ்ந்த நம்பிக்கையில்லாதவராய் இருந்தவர். ஹே பகவான் என்றுகோயில் சன்னதியில் இரண்டு கைகளையும் அறைந்து கூப்பிஉள்ளுணர்வு விழிப்பில்லாது இரண்டு வேளை மோர் சாதத்துக்கு வழிதேடும் குமாஸ்தாவாய் இரு அது போதும்... இதுவே மிகவும் முக்கியம் என்கிற சூழ்நிலைக்குஅவர் தள்ளப்பட்டது விதியின் செயல். அவ்விதமே அவர் என்னைத் தள்ளியதும் விதியின் தொடர்ச்சி. ஆனால் இதில் பெரும் இழப்பு எனக்குத்தான்.

மடம், கோயில், உற்சவம், பூஜை யாகம், பாராயணம்,

Koviloor Digital Library

உபந்யாசம், தத்துவம்,யோகம், சத்சங்கம் போன்ற தொடர்பின்றி கலம்கஹாங்ஹை, கலம் மேஜ் பர்ஹை என்கிற குருட்டு இந்திப்பாடமும், ஐ வாண்டர்டு லோன்லி அஸ் எ க்ளவுட் என்றுவேர்ட்ஸ்வொர்த்தின் ஆங்கிலக் கனவுமாய் வளர்ந்தேன்.

இதினின்றும் அம்மா என்னை காப்பாற்றினாள்

"தொந்தி சரிய, மயிரே வெளிர நிரை

தந்தமசைய முதுகே வளைய"

என்று தமிழ்ப்பண்டிதையான அம்மா திருப்புகழ் சொல்லிக்கொடுத்தாள்.

என் ஏழு வயதில் பார் பார் இந்த மஹானைப் பார் என்றுஸ்ரீபரமாச்சாரியார் முன்னால் கொண்டுபோய் நிறுத்தினாள். அந்த நாள் கனவு மேகம் மாதிரி நினைவு இருக்கிறது இன்னமும்.

கூட்டம் அதிகமில்லாத நேரம் அது. கமலா ஆரஞ்சு கையில்விழுந்தது. வணங்கி எழுந்தேன்

பாலகுமாரா உன்னை ரொம்ப கனிவாய் வாஞ்சாயையாய் பார்த்து சிரித்தார். உள்ளங்கை விரித்து உயர்த்தி ஆசிர்வாதம் செய்தார். அங்கே பக்கத்தில் ஒரு சமஸ்கிருத பண்டிதர் அம்மா விழிவிரிய பேசினாள். உன் குழந்தை ஓஹோன்னு வருவான் தாயே பெயரிவா மனப்பூர்வமா ஆசிர்வாதம் பண்ணியிருக்கா உன்குழந்தையைன்னு சொன்னார்.

இன்னிக்கு நீ நன்னா இருக்கக் காரணம் பெரியவாதான். பரமாச்சாரியார்தான். என் நாற்பது வயதில் அம்மா இதைஎனக்கு நினைவூட்டிப் பேச மறுபடி அவரை மனதில் வணங்கினேன்.

பிறகு பத்தொன்பது வயதில் ராயப்பேட்டை அம்மையப்ப முதலிதெருவில் எங்கள் குடித்தன வீட்டு வாசலுக்கு வர ஆபீஸுக்கு லீவுபோட்டு அவரை வரவேற்றேன். அப்போது நான் டி.வி.எஸ்.ஸில்குமாஸ்தா. குமாஸ்தாவாக மாறத்தானே படித்தேன். இரண்டுவேளை மோர் சாதம் தானே வாழ்வு லட்சியம். வீட்டு வாசலுக்கு வந்த பரமாச்சாரியாரை பெரியவா என்று நமஸ்கரித்தேனே தவிர, இவர் குல குரு, இவரை

Koviloor Digital Library

அண்டி நான் தெரிந்துகொள்ளவேண்டியது ஆனந்தம் என்று தெரியவில்லை. உணரும்படிசொல்லித் தரவில்லை. உள்நெகிழ்ந்து வணங்கும் பணிவு இல்லை. வெட்டின மரமாய் விழுந்து எழுவதுதான் எண்ணமாய் இருந்தது.

சகலமும் தெரிந்த கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்ட என் இயல்பான இருபது வயசை கம்யூனிசம் கௌவிக் கொண்டது. அக்கம்யூனிஸக் குறை உணர்ந்து உதற பத்து வருடங்களாயிற்று.

பிறகு பல்வேறு வகை மேலைத்தத்துவங்கள் சூழ்ந்து கொண்டன.புத்தகப்படிப்பு கர்வம் வளர்ந்தது. மனசு இனனமும் குறுகலாயிற்று. எக்ஸிஸ்டென்ஷியலிஸம் பாதி புரிந்தது. அயர்ன்ராண்ட் சுயநலத்துவம் முக்கால் புரிந்தது. உள்ளே அமைதியில்லை. ஆரவாரம் ஏராளம். எல்லாம் தெரியும் என்கிற வெளிப்பகட்டும்உள்ளே ஒன்றுமே தெரியவில்லையே என்கிற அழுகையும் என்னைஇரண்டுபடுத்தின.

இம்முறை அம்மா கூட்டுப் போகவில்லை. ஸ்ரீபரமாச்சாரியார்வீடு தேடி வரவில்லை. நானாய் தேடிப் போனேன். எதற்குகாஞ்சிபுரம் போறாம் என்று தெரியாமல் எந்த எதிர்பார்ப்பும் இல்லாது போனேன். வயது நாற்பது. நாற்பதில் தான்நானாய் போக முடிந்தது. தானாய் சிந்திக்க முடிந்தது. இது இந்ததேசத்து இன்றைய இளைஞனுக்கு உண்டான சாபம். என்னை நீநீயாய் என்று உணர்த்தியது ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி. இதுவே என்னைகாஞ்சிபுரம் துரத்தியது.

தொலைவிலிருந்து வணங்கி, தொலைவிலிருந்தபடியே அவரை உற்றுப் பார்த்தது அற்புதமான அனுபவம். தேககாந்தி என்பதை அங்கே தெரிந்தேன். அவர் சிரிப்பில் பொங்கிய ஸ்நேகம் புரிந்தேன். கண்ணில் வழியும் கருணையை அனுபவித்தேன். அவர்கண்ணோடு கண் நோக்க தடுமாறினேன். தலை குனிந்தேன். மறுபடி தொலைவாகி யார்....யார்...யார் இவர் என்று உற்றுப்பார்த்தேன். இந்த முறையும் எனக்கு ஆரஞ்சுப்பழம் கிடைத்தது. கையில் தரப்படவில்லை. உருட்டி விடப்பட்டது. இவர் அன்புக்குப் பாத்திரமாக வேண்டும் என்கிற தாபம் வந்தது. இது இயலுமோ என்கிற கேள்வி வந்தது. மறுபடி, மறுபடி, என்று நான்கு, ஐந்துமுறை போனேன். அருகே போய் ஒரு நமஸ்காரம். தொலைவிலிருந்தபடியே நெடுநேர தரிசனம். சிதம்பரத்திலிருந்து வந்து பிரசாதம் தலையிலிருந்திய சிவகோலம். ஜவ்வந்திமாலையை

Koviloor Digital Library
அணிந்தபடியான கிருஷ்ண ரூபம். கண்மூடி ஆழ்ந்து யோசித்துக்கொண்டிருக்கிற யோகநிலை. விரும்பியவரைக் கண்டதும் முகம்மலர்ந்த பரவசம். கோவில் விவரம் கேட்டதும் கூர்மையாய்கேள்விகள் கொடுத்த பாங்கு. வேண்டாம் அப்படி செய்யவேண்டாம் என்று அவர் கட்டளையிடுகிற நேரத்திலும் கனிவு.

அவரோடு எனக்குப் பேச ஆசை. பேசமுடியவில்லை. வெட்கம்,பேச எனக்கு என்ன தெரியும். எது பற்றி முழுமை என்னிடம். நான்உயர்ந்ததொரு அரைகுறை என்கிற வெட்கம்.

"தொந்தி சரிய மயிரே வெளிர நிரை

தந்தம் அசைய முதுகே வளைய"

மறுபடி ஏழு வயதில் பாடிய திருப்புகழ் பாடலாமா?சிரிப்பாரோ. உண்மையாகவே முடி நரைத்து பல் அசைந்துவிழுந்து முதுகில் வலிவு குறையும் நேரத்தில் இது நகைப்பாகுமோ...பாடினேன். வெட்கம் அதனால் மனகள் பாடினே.

எந்தை வருக ரகு நாயக வருக

மைந்த வருக மகனே இனி வருக

இங்கு வருக எனதாருயிர் வருக

என்று பாடினேன். கமல முகம் என்னை நோக்கி திரும்பியது...சிரித்தது. கைகள் உயர்த்தி கேட்காமல் வரம் கொடுத்தது.குப்பென்று கண்ணில் நீர் பொங்கியது. கன்னம் வழிந்தது. அந்தச்சிரிப்பு, மலர்ந்த தாமரை என்பதாய் மனசுள் உருவம் ஆயிற்று.தாமரை, தாமரை என்கிற வார்த்தையே உள்ளே புரண்டது.ஆயினும் பேசவில்லை. அருகே போகவில்லை.

சென்னை வந்த அவரை மையமாக்கி அவருக்கு தாமரை என்றுபெயர் கொடுத்து அவரால் உயர்வான குடும்பம் உருவகித்து ஒருநாவல் எழுதினேன். அது தலையணைப் பூக்கள்.

"என்னமா எழுதியிருக்கே..." பாராட்டினார்கள். "ரொம்பநன்னா தெரியுமா அவரை?" கேட்டார்கள். நான் பேசித்தெரிந்து கொள்ளவில்லை. பேசாது கொஞ்சம் புரிந்து கொண்டேன். ஜோதி ரூபம் என்று மனசுள் உணர்ந்தது எழுதினே. உணர்த்தப்பட்டேன். அவனருளாலே அவன் தாள் வணங்கி...இதுதான் நடந்தது. குல குருவின் பார்வை பதிந்த

Koviloor Digital Library
பேறு பெற்றதால் திருவண்ணாமலை மஹான் யோகி ராம்சுரத்குமார் அவர்களின்அன்பு கிடைத்தது. பேசிப் பழகி தெரிய முடிந்தது. உடம்பும், மனசும் மலர்ந்தன. உள்ளே உறங்கிக்கொண்டிருந்த நற்சக்திகள் உலுக்கி எழுப்பட்டன. வாழ்வு மாறியது.

"பரமாச்சார்யாரை தரிசனம் செய்திருக்கிறாயா, பாலகுமாரா?"

திருவண்ணாமலை, மஹான் யோகிராம் சுரத்குமார்கேட்டார்.

"செய்திருக்கிறேன் ஸ்வாமிஜி...அவர் என் குல குரு".

"ஒரு முறை இந்த பிச்சைக்காரன் போய் பெயர் சொன்னதும் உற்றுப்பார்த்து விட்டு நீ சூரியவம்சமா என்று கேட்டார். எவருக்கும் தெரியாத என் விஷயம் விநாடி நேரத்தில் அறிந்தார். இந்தப்பிச்சைக்காரன் மீது ரொம்ப அன்பு ஸ்ரீபரமாச்சாரியாருக்கு" பரவசமாய் யோகி பேசினார்.

அன்றே திருவண்ணாமலையிலிருந்து காஞ்சி குடும்பத்துடன் போனேன்.

மடத்தில் நல்ல கூட்டம். என் பெயரை பரமாச்சார்யாளிடம் உரக்கச் சொன்னார்கள்.

கம்பி தாண்டி இன்னும் அருகே வரச் சொன்னார். குடும்பத்துடன் அருகே போனோம்.

"யாரு.." மறுபடி கேட்டார்.

பெயர் உரக்கச் சொன்னேன். இன்னும் உரக்க அவருக்குச் சொல்லப்பட்டது. மெல்ல ஒரு மலர்ச்சி. மந்தகாசம், சிரிப்பு விரிந்தது. கை தூக்கி ஆசிர்வதித்தார்கள். கல்கண்டு பொட்டலம் பிரித்து அவரிடம் யாரோ தர, அவர் உள்ளங்கையில் பொதிந்த கல்கண்டு சில நிமிடத்தில் என் கைக்கு வந்தது. என்வீடு நமஸ்கரித்தது. மீண்டும் இனிய சிரிப்பு ஆசி.

இதுவே நாற்பத்தி ஐந்து வயதில் எனக்குக் கிடைத்த அண்மை.பேச்சு பரிமாற்றம். உள்ளே உவகை பொங்கியது. மனசு நிறைவில்மிதந்தது. நான் வெளிவர கதவுகள் மூடப்பட்டன. என்னைக்கனிவுடன் நோக்கவே அக்கதவுகள் திறந்திருந்தன என்பதாய் ஒருஎண்ணம் எனக்கு. அன்று மடத்து வாசலில் தெய்வத்தின் குரல் முதல்பாகம் வாங்கினேன். பிறகு மீதி

Koviloor Digital Library

நாலுபாகமும் வானதியில்வாங்கினேன்.

கிட்டத்தட்ட தினமும் ஏதேனும் ஒரு பாகம் ஏதேனும் ஒரு அத்தியாயம் படித்துக் கொண்டிருக்கிறேன். இல்லை பேசிக்கொண்டிருக்கிறேன். அவரோடு புத்தக ரூபத்தில் பேசிக்கொண்டிருக்கிறேன்.

குரு யார்....பதில் சொல்கிறார். உருவ வழிபாடு எதனால்...பதில் சொல்கிறார். வேதம் என்ன சொல்கிறது. பதில் சொல்கிறார். வாமாச்சாரம் நல்லதா பதில் சொல்கிறார்.கதை சொல்கிறார். கதைக்கு புதிய அர்த்தம் சொல்கிறார்.மனசு, உடம்பு, ஆன்மா விளக்கம் காட்டுகிறார். புராணங்களில் உள்ள சௌகர்யம் சொல்கிறார். என் மனதில் உள்ள கேள்விக்கெல்லாம் தெய்வத்தின் குரல் பதில் சொல்கிறது. சரித்திரம் கற்பிக்கிறது. சாஸ்திரம் சொல்லித் தருகிறது. அமைதி தருகிறது.

இந்தப் படிப்பு உள்ளே புதிய ஒளியை வீசுகிறது. அந்த ஒளியில் வாழ்வில் நோக்கம் தெளிவாகிறது.

இதுதான் சொல்லாமற் சொல்வது என்பது புரிகிறது. உருவம் மனக்கண்ணில், பேச்சு புத்தகத்தில். எனக்கிது போதும்.

கீதை அவருக்கு பேச்சுமட்டுமில்லை. அதுவே வாழ்வு, யோகமே வாழ்க்கை. ஒவ்வொரு நாளும் தவம். இடையறாத தவம். இந்த வாழ்வின் ஒரு சாயல் என்னைத் தாக்கினாலும் போதும் நான் புனிதமடைவேன்.

அவ்வப்போது மடத்துக்குப் போக ஸ்ரீ ஜயேந்திரரின் அன்புக்கும் பாத்திரமானேன். இரு பேசலாம் என்று தனியே அமர்த்தி விசாரிக்கும் அன்பு அவருடையது. இன்னாரிடம் போய் இதைக் கற்றுக்கொள். இதை இவ்விதம் செய் என்கிற அக்கறை கொண்டகருணை அவர் உடையது.

உலகைக் காக்கும் மூன்று அம்சங்களைப் போல் காமகோடி பீடத்தின் மூன்று குருமார்களும் நம்மிடையே இருந்து நல்வழிப்படுத்துவது நாம் பெற்ற பேறு. தினசரி வாழ்வின் உஷ்ணம் தீர்த்து ஆறுதல்தரும் குளிர் தருக்கள் இவர்கள்.

இம்மூவரின் பாதங்களிலும் அந்தகரண சுத்தியுடன் நமஸ்கரிக்கிறேன். உலகம் புத்துணர்வு பெற இவர்கள் ஆசி வழங்கட்டும் .

Koviloor Digital Library

Koviloor Digital Library

அவரே நம்மை வழிநடத்துகிறார்....

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

சாட்சாத் கைலாசவாசியான பரமேஸ்வரனுடைய அவதாரமாக ஆதிகுரு சங்கராச்சாரியார் அவர்கள் கேரள நாட்டில் காலடியில் அவதரித்தார். அவர் தன்னுடைய வாழ்க்கை முழுவதும் பாரத நாட்டில் இந்து தர்மத்தை, வைதீக தர்மத்தை திரும்பவும் நிலை நாட்டினார். அவர் செய்த பணிகள் அளவிடற்கடங்காதது.

உலகம் முழுவதும் ஒன்று என்பதற்கு எடுத்துக்காட்டாக அத்வைதஸத்யம், பிரம்மேஹ சத்யம் என்றெல்லாம் சொல்லி அதற்கு வழியாக, அறுவகைச் சமய வழிபாட்டையும் பல வேதாந்த நூல்களையும் தந்தார். பல கோயில்களை திருப்பணி செய்தும், யந்திரங்கள் பிரதிஷ்டை செய்தும் அருள்பாலித்தார். அவருடைய பணிகள் தொடர்ந்து நடைபெறுவதற்காக பல பீடங்களை ஏற்படுத்தினார். அந்த பாரம்பரியத்திலே வரக்கூடியது காஞ்சி காமகோடி பீடமும் ஒன்று. காஞ்சியிலே வந்து கடைசியாக அவர் சித்தி அடைந்தார்.

அந்த பீடத்திலே அநேக மகாபுருஷர்கள், ஞானிகள், பெரியோர்கள் எல்லாம் இருந்தார்கள். தற்போது 63-வது ஆச்சாரிய சுவாமிகளாக ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் நூறு வயது வரை இந்தப் பீடத்தில் தவ ஆட்சி செலுத்தி வந்தார்.

சமீப காலத்தில் அவரது நூற்றாண்டு விழாவை ஒட்டி உலகளாவிய கனகாபிஷேக விழாவும், நூற்றாண்டு விழாவும் விசேஷமாக நடைபெற்றது. அதனால் அந்த ஆண்டு ஒரு நல்ல பொன்னான ஆண்டு என்று இதுவரை சொல்லி வந்தோம். அதே ஆண்டு பொல்லாத ஆண்டாகவும் ஆகி, அவரை ஜோதி வடிவமாக இருக்கும்படியும் செய்துவிட்டது.

என்னைப் பொருத்தவரையும் 40 ஆண்டுகள் அவருடன்

Kovilpoor Digital Library

இருந்து வருவதனால் இந்த இரண்டு நாட்கள் என்னால் கொஞ்சமும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத சூழ்நிலையில் இருந்தேன். பொதுமக்கள் பலரும் கூட அதே நிலையைத்தான் அடைந்திருக்கிறார்கள். பொதுமக்கள் தனிப்பட்ட முறையில் அவர் அருள் பெற்று பல நன்மைகளை அடைந்ததினால் அவரிடம் ஈடுபாடு வந்து, அந்த ஈடுபாட்டின் பயனாக அவர்களுக்கு பக்தியும் அந்தத் துன்பமும் ஏற்பட்டது என்றுதான் சொல்வேன். ஆனால் எந்தவித சுயநலமும் எதிர்பார்ப்பும் இல்லாமல் அவர் அழைத்து நான் இந்த பீடத்திலே இருந்து அவர் செய்த அத்தனை அருளையும் பெற்று அந்த பீடத்திற்கு மேலும் மேலும் நல்லது சேர்க்கவேண்டும் என்ற ஆவலோடு அவரோடு இணைந்து இருந்ததினால் அவர் அந்த ஞான ஒளியாகத் திகழும்போது நம்மால் தனித்திருப்பது எப்படி முடியும் என்ற ஒரு ஏக்கமும் துன்பமும் ஒரு கவலையும் கட்டுக்கடங்காத ஒரு நிலையும் கூட மனதிற்கும் கண்ணுக்கும் கண்ணீருக்கும் வந்துவிட்டது.

1954-ல் இதே காஞ்சி சர்வதீர்த்த கரையில் எனக்கு சந்நியாசம் கொடுக்கும்போது சாலிக்கிராமத்தை வைத்து அபிஷேகம் செய்தார். நான் இப்போது அதே போன்று ஒரு சாலிக்கிராமத்தை வைத்து அவருக்கு வைத்து அபிஷேகம் செய்ய வேண்டிய நிலை வந்தபோது மிக வருத்தமாக இருந்தது. எப்படி இருந்தாலும் மற்றவர்களுக்கு ஆறுதல் சொல்லவேண்டிய நிலையிலே நான் இன்றைக்கு வந்துவிட்டேன். அவர்களுக்கெல்லாம் ஏதோ ஒருவகையில் ஆறுதல் ஏற்படுத்துவதற்காகத்தான் பீடம் ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்தப் பீடப் பாரம்பரித்திலே நாம் உட்கார்ந்திருப்பதனால் அந்தப் பொறுப்பும் நம்மிடையே வந்திருப்பதனால் கொஞ்சம் மனத்தை சரிப்படுத்திக் கொண்டு மற்றவர்களுக்கு ஆறுதல் கூறும் வகையில் இன்றைக்கு நாமிருக்கிறோம்.

எத்தனை ஆறுதல் கூறி, நாம் முயன்றாலும் மக்கள் ஆறுதல் அடைவது என்பது நம்மாலும், மற்ற யாராலும் ஆறுதல் சொல்ல முடியாது. அந்த வகையிலே பரஸ்பரம்,

Koviloor Digital Library

Koviloor Digital Library

நமக்கும் நம் குருநாதருக்கும் பொது மக்களுக்கும் நம் குருநாதருக்கும் உள்ள ஈடுபாடு அப்படி வந்துவிட்டது.

நமது ஸ்ரீ மடத்தின் அத்யந்த பக்தராக விளங்கி பல தானதர்மங்களை எல்லாம் செய்துகொண்டு, மடத்தினுடைய வளர்ச்சியிலே முக்கிய தூணாக விளங்கிக் கொண்டிருக்கும் பிர்லா அவர்கள் மடத்தைப் பெரியதாக் புதிதாக கட்டவேண்டுமென்று ஆசையோடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர் கட்டிய இந்த இடத்திலே தான் முதன் முதலாக கனகாபிஷேகத்துக்குப் பெரியவர்களை அழைத்து வந்து உட்கார வைத்தோம். அவருடைய பிறந்தநாள் அன்றும் அங்கேதான் அவரிடம் அனைவரும் ஆசி பெற்றோம். ஆகவே அங்கேயே அவருடைய ஞானஒளி திகழவேண்டுமென்ற நோக்கத்தோடு நமது மடத்திலேயே அந்த ஞானஒளியை பிரகாசிக்கச் செய்து கொண்டிருக்கிறோம்.

அவருடைய குருநாதர், பரம குருநாதர் இருவரும் கலவையிலே இதேபோல் ஜோதி வடிவத்தில் அருள்பாலித்து வருகிறார்கள். அங்கே எப்படி பிருந்தாவனம் அமைந்திருக்கிறதோ அப்படி இங்கேயும் அமைத்து அதற்கும் விசேஷ பூஜைகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன ஏகாதசி, துவாதசி திதிகள் மிகவும் முக்கியமானது. அவர் பிறந்த நட்சத்திரமும், ஜோதி அடைந்த நட்சத்திரமும் இரண்டும் அனுஷம். இதெல்லாம் மிகவும் அபூர்வமாக வாய்க்கக்கூடியது.

மார்கழி மாதம் ஐந்து ஆறு தேதிகளிலேயே சாய சாந்திரமான பிரகாரம் உத்தராயணம் பிறந்துவிட்டது. மகரசங்கராந்தி என்றால் தை பிறப்பது என்பார்கள். ஆனால் உத்தராயணம் என்பது சந்திரனுடைய கதிப்படி சாயனப்படி முன்பே பிறந்துவிட்டது. பெருமாள் நாராயணனுக்கு உகந்தது சனிக்கிழமை. அதுவும் சில பஞ்சாங்கங்களில் சர்வ ஏகாதசி என்று போட்டிருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமை பெரியவர் தோன்றின நாள். துவாதசி அதிஷ்டானத்திலே வைத்து அந்த ஜோதி

Koviloor Digital Library

தொடர்ந்து பிரகாசிக்கும் போது.... பிரதோஷமயம், சிவமயமாக சிவஜோதியாக விளங்கினார். இப்படிப் பல வகையிலும் அவருடைய ஞானத்திற்கும் தவத்திற்கும் மேன் மேலும் மெருகூட்டும் வகையில் இங்கே பிருந்தாவனம் அமைந்திருப்பது அவருடைய சங்கல்பம் அவரருளாலே அவர்தம் தாள் வணங்கி என்று தமிழிலே சொல்வார்கள். அதுபோலவே அவர் அருளாலேயே அவரது பணிகள் நம்மை ஒரு கருவியாகக் கொண்டு அத்தனையையும் நடத்திக் கொண்டிருக்கிறார். நான் பல காலமாகச் சொல்லி வருகிறேன். அவர் ஒரு இச்சாசக்தி நான் கிரியா சக்தி என்று. பெரியவர்கள் சங்கல்பம் செய்வார்கள். நான் அதைச் செய்து முடித்திருக்கிறேன். பல பணிகள்... எதிர்பாராத பெரும்பணிகள் செய்திருக்கிறோம். அவரும் அதிசயப்படுவார். நம் சங்கல்பம் பலமாக இருந்ததினால் பணியை அப்படி நடத்தி இருக்கிறோம்.

இப்போதும் அவர் சங்கல்பித்த பணியை பூர்த்தி செய்துகொண்டே இருக்கிறோம். மேலும் மேலும் அவர் என்னென்ன சங்கல்பம் செய்தார்களோ, சங்கல்பம் செய்து தொடங்கி வைத்தார்களோ, அந்தப் பணிகள் எல்லாம் தொடர்ந்து நடைபெறுவதற்கு அவருடைய அருள் பரிபூரணமாக நம்மிடையே உண்டு.

அந்த ஜோதி வடிவத்தை நாமும் சரணடைந்து அந்த ஜோதி நம்மையெல்லாம் எப்படி வழி நடத்திச் செல்லுமோ, அந்த வழியிலேயே நாம் நிற்போம். தர்மோ ரக்ஷதி, ரக்ஷதி என்ற கொள்கையை அவர் வாழ்நாளில் உறுதியாகக் கொண்டிருந்தார். தர்மத்தைக் காப்பதில்தான் உறுதியாக இருந்தார். அப்படிப்பட்ட தார்மீக தர்மப்பணிகள் தொடர்ந்து நடைபெற அவரது பரிபூரண அருள் நம்மைச் சுற்றியே நம்மிடையே இருந்துகொண்டு நன்றாக வழிகாட்டும் என்று அந்த ஞானஜோதியைப் பிரார்த்தித்து உங்கள் அனைவரையும் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம்.

Koviloor Digital Library

SRI SADGURU DASAKAM

By Sri Sankara Vijayendra Saraswathi Swaigal

(Translation into English)

1. For the purification of the mind I offer obeisance to the Guru who is steepted in the Dharma propounded in the Vedas, in the Smrtis, and in the Purnans, obeisance to the One who tells what is good for devotees.

2. Saluations to One merged in the bliss of Advaita, who is intent upon assisting good people, to the One who is well versed in the Sastras and ever emaining in peace.

3. I bow to the Guru who is the propagator of Karma Bhak tu and Jnana Margas (the paths of action, devotion and knowledge) I bow to him who sheds grace.

4. May the grace of the Guru, Sri chandrasekhara, whose mind is engrossed in the lotus feet of the Bhagavatpada, be showered on me.

5. Let the Great Chandrasekhara who knows very well the particular of ali sacred places (kshetras) and holy rivers (teerthas), get imprinted in my heart.

6. I bow to Guru Chandrasekhara whose thoughts are turned, day and night, towards the protection of the Vedas and the Sastras, and who is much interested in pilgrimages to sacred places.

7. Obesiance to Sri Chandrasekhara Guru who has taken efforts to produce Veda pandits and scholars in Veda Bhashya and whose preceptor was Mahadeva.

8. I bow to Sri Chandrasekhara Guru who has instilled and grown devotion to God in the minds of the young by makings them get by heart the hymns of Manikkavcaka and Goda (Andal)

Koviloor Digital Library

9. I pay my respects to the Jagadguru who is able to get rid of antheism by his simple teachings, who has a smiling face and who is peaceful.

10. Oh Guru! I pray to you, in all humanity, to impart learning to me. I do not know of any other way, I take refuge in Thee!

Koviloor Digital Library

ஆதிசங்கரரின் மறுபிறவி

R. வெங்கட்ராமன், முன்னாள் ஜனாதிபதி

கண்கண்ட தெய்வம் என்று நாம் கொண்டாடி வந்த காஞ்சி காமகோடி மகாஸ்வாமிகள் நமது கண்களிலிருந்து மறைந்துவிட்டார். இந்நாட்டிலும் அயல் நாடுகளிலும் வசிக்கின்ற கோடிக்கணக்கான மக்கள் துயரத்தில் ஆழ்ந்துள்ளனர். மத வேற்றுமையின்றி இந்துக்களும், இஸ்லாமியர்களும் கிறிஸ்துவர்களும் பிறபட்ட சமூகத்தினரும் மகாஸ்வாமிகளுக்கு அஞ்சலி செலுத்தியது கண்கொள்ளாக் காட்சி. மக்கள் துயர் துடைத்த மகான். தர்மத்தை நிலைநிறுத்துவதற்காக உலகத்தில் நான் அவ்வப்பொழுது அவதரிக்கிறேன் என்று பகவத்கீதையில் பகவான் சொன்னதை மெய்ப்பிப்பதற்காக மனித உருவத்தில் மகாஸ்வாமிகள் தோன்றியதாகவே நம்புகிறோம். சிவபிரானுடைய அவதாரம் ஆதிசங்கரர், ஆதிசங்கரரின் மறுபிறவி காஞ்சி காமகோடி மகாஸ்வாமிகள் எல்லா உயிர்களிலும் நானே இருக்கின்றேன் என்று பகவான் கீதையில் உரைத்த வேதத்தின் உட்பொருளை மகாஸ்வாமிகள் எண்பது ஆண்டுகளுக்கு மேலாக மக்களிடத்திலே பரப்பி வந்துள்ளார்கள். சுவாமிகள் ஆற்றிய உரைகள் சமுதாயத்துக்கும் மனித வர்க்கத்துக்கும் கிடைத்த மாபெரும் செல்வம்.

Koviloor Digital Library

இன்னுமோர் நூறியாண்டு வாழ்க

கவியரசு கண்ணதாசன்

வடவரை இமயம் நோக்கி
மனதையே பாதம் ஆக்கி
கடும்பனி வெயிலைத் தாங்கி
கால்நடையாகச் செல்லும்
திடமிகும் முனிவன் காஞ்சி
திருவுடைப் பெரியோன் தன்னை
வடிவுடன் மீண்டும் எம்பால்
வழங்குவாய் செல்வத்தாயே!
தன்னையோர் பொருளாய் வைத்து
தத்துவம் அதிலே ஊன்றி
பொன்பொருள் நினைவில்லாது
புகழுடல் அமைத்த சுவாமி
இன்னுமோர் நூறியாண்டு
எம்முடன் வாழ்தல் வேண்டும்
அன்னையே காஞ்சித்தாயே
அவனுடன் செல்வாய் நீயே
ஓர்பிடி அவலில் வாழ்வான்
உலகையே அளந்து செல்வான்
ஊர்புகழ் வாழ்க்கை கொண்டான்
உத்தமன் என்பதெல்லாம்
சீர்களில் குறைந்த சீரே
தெய்வமே அவன்தான் என்பேன்
கார்குழல் கமலச்செல்வி
கனிவுடன் காப்பாய் நீயே!

Koviloor Digital Library

பூவுலகில் காஞ்சி ஜகத்குருவின் திக்விஜயம்

1894 மே மாதம் 20 தேதி (1817 ஜய வருடம் வைகாசி மாதம் 8ஆம்தேதி) ஞாயிற்றுக்கிழமை விழுப்புரம் சுப்பிரமணிய சாஸ்திரி மகாலெட்சுமி தம்பதியருக்கு இரண்டாவது மகனாக சுவாமிநாதன் பிறந்தார். சிதம்பரத்தில் பால பாடம் நடந்தது.

1905-ல் உபநயனம் நடந்தது. சிறு வயதிலேயே புராணங்களை அவரது தாயார் சொல்லித் தந்தார். அவற்றை எளிதில் புரிந்து கொண்டு ஞானக் குழந்தையாக வளர்ந்தார் சுவாமிநாதன்.

திண்டிவனம் அமெரிக்கன் மிஷன்ஸ்கூலில் ஆரம்பக்கல்வி பயின்றார். அப்போது கிறிஸ்தவர்களின் வேத நூலான பைபிளை படித்து சிறப்பாக ஒப்புவித்து பரிசு பெற்றார்.

1907 பிப்ரவரி 13-ம் தேதி காஞ்சி காமகோடி பீடத்தின் 68-வது குருவாக நியமிக்கப்பட்டு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆனார்.

மேமாதம் 9ம் தேதி கும்பகோணம் மடத்தில் கோலாகல பட்டாபிஷேகம் நடந்து ஜகத்குரு ஆனார்.

1908 திருவானைக்காவல் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரிக்குக் காஞ்சி சுவாமிகள் தாடங்க பிரதிஷ்டை செய்து வைத்தார்.

1909 கும்பகோணம் ஸ்ரீ மடத்தில் சமஸ்கிருதக் கல்வி, நாடகம், இசை முதலிய கலைகளைக் கற்று தேர்ச்சிப் பெற்றார்.

1911 முதல் 1914 வரை மகேந்திர மங்கலம் கிராமத்தில் வேத, இதிகாச, ஆகம புராணங்களில் பூரண பயிற்சி பெற்று சர்வகலா விற்பன்னர் ஆனார்.

Koviloor Digital Library

1915 இருபத்தைந்து வயது பூர்த்தியான சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஸ்ரீ மடத்து நிர்வாகத்தை அதிகாரப் பூர்வமாக ஏற்றார்.

கோவில் சீரமைப்பு, திருக்குளப் பராமரிப்பு போன்ற திருப்பணிகளை தஞ்சை மாவட்டம் முழுவதும் பரவலாக்கினார்.

1940 முதல் 1942 வரை ஜகத்குருவின் நேரடி ஈடுபாட்டில் முத்ராதிகாரி திட்டம் பற்பல சாதனைகளைப் புரிந்தது.

1943 காவிரி கரையோரப் புனித இடங்களுக்கு யாத்திரை சென்றார்.

1944 பிப்ரவரி மாதம் காமாட்சி கோவில் கும்பாபிஷேகம் முடித்து வேத தர்மசாஸ்திர பரிபாலனை சபையை நிறுவினார்.

1945 அறுபத்தி ஆறாவது பீடாபதிபதி தொடங்கிய அத்வைத சபையின் பொன்விழாவை விமரிசையாக நடத்தினார்.

1946 நாட்டுப் பிரிவினைக்கான மோதல்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஸ்ரீ மடத்தில் இருந்து உதவிகளை வழங்கினார்.

ஜீவாத்ம கைங்கரிய சபையை தொடங்கிய அநாதைப் பிணங்களை உரிய முறையில் அடக்கம் செய்வது என்பதே அதன் பிரதானப்பணி என்றார்.

1947 "நாடு சுதந்திரம் அடைந்தது போல நாம் விடுதலை பெறவேண்டும்" என்று சுதந்திரதினச் செய்தி விடுத்தார்.

1949 நாட்டில் வளமும் நலமும் தழைக்க திருவிடைமருதூரில் அதிருத்ர ஹோமத்தை நடத்தினார். கல்வைத்த வாரம் என்ற வேத ஆராய்ச்சிப் பணியை நிறைவேற்றினார்.

Koviloor Digital Library

1950 டிசம்பர் 25ல் சைவ, வைணவ பேதங்களை அறவே நீக்குவதற்காக திருவிடை மருதூரில் திருப்பாவை திருவெம்பாவை ஆறங்க மாநாட்டை நடத்தினார்.

1951 நாடு முழுவதும் வ்ார வழிபாட்டுசமய மன்றங்களை நிறுவி, தேவார திருவாசக, திவ்ய பிரபந்தம் முதலான வழிபாட்டு பாசுரங்களை லட்சோப லட்சமாக அச்சிட்டு இந்தியாவிலும், வெளிநாட்டிலும் வழங்க ஏற்பாடு செய்தார்.

1953 விஷ்ணு காஞ்சியில் உள்ள ஸ்ரீ மடத்தில் நான்கு மாதம் தீவிர மவுன விரதம் மேற்கொண்டார்.

1954 மார்ச் 19ம் தேதி இளைய சுவாமியாக ஸ்ரீ ஜெயேந்திரரை நிமித்தார்.

"ஓரிக்கை" என்னும் இடத்தில் ஜகத்குருவின் 60வது ஜெயந்தி கனகாபிஷேகம் நடைபெற்றது.

1956 வினோபாஜியுடன் சந்திப்பு நடந்தது. உலக நலத்திற்கு கூட்டுப் பிரார்த்தனை நடத்தினார்.

1957 ஜகத்குரு பீடம் ஏறிய 50-வது ஆண்டு நிறைவு விழா கலவையில் நடந்தது. சர். சி.பி. ராமசாமி ஐயர், ராஜாஜி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஏழைப்பெண்களின் திருமண உதவிக்காக கன்னிகாதான டிரஸ்ட் தொடங்கினார். சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஏராளமான இடங்களில் முகாமிட்டார். இடைவிடாமல் உபன்யாசம் செய்தார். 534 நாட்கள் சென்னைப் பகுதிகளில் தரிசனம் கொடுத்த ஜகத்குருவுக்கும், இளைய சுவாமி ஜயேந்திரருக்கும் 1959 மார்ச் 15ம் தேதி மாநகராட்சி வழியனுப்பு விழா நடத்தியது.

1960 திருச்சி நேஷனல் உயர்நிலைப்பள்ளியில் நீண்ட நாள் தங்கினார்.

1962 ராகு தவிர மற்ற 8 கிரகங்கள் ஒருங்கிணைந்த சேர்க்கை நாட்டிற்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்பதால்

அதைத் தவிர்க்க நாடு முழுவதும் ஹோமங்கள் நடத்த ஏற்பாடு செய்தார்.

Koviloor Digital Library

1963 தஞ்சையில் நவராத்திரி விழா நடத்தினார்.

ஏப்ரல் 28-ம் தேதி மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை நடத்தினார்.

ஸ்ரீரங்கம் சென்ற ஜகத்குரு அங்கு மொட்டை கோபுரம் பூர்த்தியாக வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

1964 காஞ்சி அருகே உள்ள அம்பியில் மூன்று மாதம் ஏகாந்த தவம் இருந்தார்.

ராமேஸ்வரத்தில் ஏற்பட்ட கடும்புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகளை அனுப்பி ஆறுதல் கூறினார்.

1966 பிப்ரவரி 6-ம் தேதி சென்னையில் அனைத்து மடாதிபதிகளின் மாநாட்டைக் கூட்டினார். ஆலய குறைபாடு, சமய வளர்ச்சியில் தடை ஆகியவற்றை விரிவாக ஆராய்ந்து அவற்றை ஒழுங்குபடுத்த இந்து சமயப் பேரவையைத் தொடங்கினார்.

மார்ச் 10ல் சென்னை சிவா விஷ்ணு ஆலயத்தில் பிடியரிசி திட்டத்தைத் தொடங்கி பசுவதை மற்றும் வரதட்சணை வாங்குவதை தடைசெய்ய வலியுறுத்தினார். ஆடம்பர திருமணங்கள் பட்டாடை முதலான டாம்பீகங்களை அறவே தவிர்க்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

திருப்பதி திருமலையில் ஏழுமலையானுக்கு கலசாபிஷேகம் செய்தார்.

காளகஸ்தி மலைமேல் புராதன குகை கோவிலை கண்டுபிடித்து அந்த இடத்திற்கு நடராஜ ரங்கஸ்தலம் என்று பெயரிட்டார்.

1967 மே 9ம் தேதி திருப்பதி திருமலை பெருமாளுக்கு பிரம்மோத்ஸவம் செய்துவிட்டு, இந்து தர்ம

Koviloor Digital Library

பிரதிஷ்டானம் என் [illegible] பையைத் தொடங்கி புதிய சங்கர மடம் ஒன்றை பெங்களூரில் ஏற்படுத்த அனுக்கிரகித்தார்.

1973 முதல் நீண்ட அருளுரைகளைத் தவிர்த்துக் கொண்டார். அவ்வப்போது இருந்த மவுன நிலை மாறி எப்போதோ மட்டும் பேசுகிற ஆழ்ந்த தியான நிலையை மேற்கொண்டார். காஷ்ட மவுனர் என்ற சலனமே இல்லாத கடுமையான நீண்டநாள் மவுன விரதங்களையும் கடைப்பிடிக்கத் தொடங்கினார்.

1976 தேனம்பாக்க சிவாஸ்தானத்தில் மவுன விரதம் இருந்தபோது பிரதமர் இந்திரா காந்தி வந்திருந்து 30 நிமிடம் ஜகத்குருவின் முன் அமர்ந்து சென்றார்.

1978 தேனம்பாக்கத்தில் இருந்து ஆந்திர விஜயத்தை மேற்கொண்டார். தொடர்ந்து வடநாட்டு யாத்திரை களையும் மேற்கொண்டார். கர்நாடக மாநிலம் ஹக்ரி என்ற இடத்தில் 5 மாதம் தங்கியிருந்தார். அப்போது அவரை பிரதமர் மொரார்ஜி தேசாய் வந்து தரிசித்தார். ஜனாதிபதி சஞ்சீவ ரெட்டியும் அங்கு வந்து ஆசி பெற்றார்.

1982 மகாராஷ்டிரா சென்ற ஜகத்குரு அங்கிருந்து ஆந்திரா வந்தார். அங்கு நெடுநாள் தங்கியிருக்க வேண்டும் என்று ஆந்திர முதல்வர் என்.டி. ராமராவ் ஜகத்குருவைக் கேட்டுக்கொண்டார். அங்கு பல புண்ணிய இடங்களுக்கு ஜகத்குருசென்றார்.

1983 பொன்னேரியில் ஐந்தாண்டுகளுக்கு முன் கண்ட சங்கரனை ஸ்ரீமடத்து 70வது சுவாமிகளாக நியமனம் செய்ய ஜகத்குரு கட்டளையிட்டார்.

பாலசுவாமி விஜயேந்திரரும், இளைய சுவாமி ஜயேந்திரரும், பெரிய சுவாமியை கர்நூலில் சென்று தரிசித்தனர். காஞ்சிக்கு திரும்பும்படி அவரிடம் வேண்டினர்.

1984 தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். குடும்பத்துடன் காஞ்சி சென்றுபெரியவர், இளையவர், பால பெரியவர்

Koviloor Digital Library

மூவரையும் தரிசித்து ஆசிபெற்றார்.

1986 பிரதமர் ராஜீவ் காந்தி ஜகத்குருவைச் சந்தித்து ஆசி பெற்றார்.

1987 ஜயேந்திரர் ஏகாந்த தவ நிலையை மேற்கொண்டிருந்ததால் விஜயேந்திரரை உடன் வைத்தபடி ஸ்ரீ மடத்து பூஜாவிதானத்தில் நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்திர மௌலீஸ்வரர் பூஜையை நடத்தி தீர்த்தப் பிரசாதம் வழங்கினார்.

தவநிலை நீங்கி ஜயேந்திரர் திரும்பியதும் தன்னை முற்றிலுமாக தனிமைப்படுத்தி கொண்டார்.

1988 கங்கை கொண்ட சோழபுரத்து மூலவருக்கு (20 அடி உயர லிங்கம்) 108 மூடை அரிசியால் அன்னாபிஷேகம் செய்யவும் அது ஆண்டுதோறும் தொடரவும் ஏற்பாடு செய்தார்.

1991 பிப்ரவரி 9ம் தேதி திருப்பணி தொடங்கியது. ஜனாதிபதி வெங்கட்ராமன் தலைமையில் மகா சுவாமிகளின் சதாப்தி மகோத்ஸவ கமிட்டி அமைக்கப்பட்டது.

1993 ஏப்ரல் 24ம் தேதி ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா ஜகத்குருவைத் தரிசித்தார்.

ஏப்ரல் 25ம் தேதி ஜகத்குருவுக்கு கனகாபிஷேகம் நடந்தது.

ஏப்ரல் 26ம் தேதி பிர்லா பவுண்டேஷன் பல கோடி செலவில் அமைத்துக் கொடுத்த பொலிவு மிக்க திருமடப் பகுதியில் விழாவைத் தொடங்கி வைத்தார்.

மே 7ம் தேதி பிரதமர் நரசிம்மராவ் ஜகத்குருவின் நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைத்தார்.

1994 ஜனவரி 8ம் தேதி காஞ்சியில் தனது 100வது வயதில் தன் பூவுடலைத் துறந்து இறைவனோடு ஐக்கியமானார்.

Koviloor Digital Library

ஸ்ரீ சங்கர சற்குரு

முக்கண்ணும் கங்கையதும் முடிதனிலே பிறைநிலவும்
எக்கணமும் தூக்கியசீர் இடப்பதமும் மழுமானும்
கரியுரியும் விரிசடையும் கழுத்தினிலே அரவணியும்
மேனியெலாம் ஒளிவீசும் ஞானமருள் வெண்ணீறும்
முயலகனின் முடிபதிந்த நயமிகுந்த வலப்பதமும்
இடப்புறத்தே உமையிலங்க எழில் தவழும் ஈசனவன்
கருணையுடன் அம்பலத்தே கலிநடனம் ஆடுபவன்.
தென்னாடு மகிழ்ந்துரைத்து தென்மதுரை தனிலாடி
எந்நாடும் ஏற்றுகின்ற இறைமௌன குருமூர்த்தி
திருச்சூரில் திருக்கோயில் திகழ்கின்ற பரமனவன்
மலர்ப்பதமே தலைசூடி மனமொன்றித் தவமிருந்து
நலமிகுந்த புத்திரனை நல்கிடவே வேண்டினராம்
சிவ நெறியில் தலைநின்ற சிவகுரு ஆர் யாம்பாளாம்
தவமதனைச் சோதித்துத் தகுதிதனை நிர்ணயித்து
உவப்புடனே உலகுய்ய உத்தமநற் புத்திரனாய்
சிவநாமம் தனிலுயர்ந்த சங்கரனாம் நாமமுற
அவதரித்து வயதெட்டில் அரிய பெருந்துறவேற்று
எண்பிராயம் எனவிருந்த இசையிரட்டி ஈரெட்டு
தன்பிராயந் தானாக துறவதனால் சங்கரரும்
அத்வைத சாகரத்தை அவனிக்கு அளித்தருள
இமயமுதல் குமரிவரை இசைபடவே வலம்வந்து
வாதங்கள் பல புரிந்து வாகையது தான் சூடி
வேதத்தை உலகினுக்கு தொகுத்தளித்த வியாசமுனி
பாதிமதிப் பரமனுக்கு பதினாறு வயதளிக்க

Koviloor Digital Library

ஞானத்தின் பெருமைதனை ஞாலமதில் தான்பரப்பி
பக்திரசம் கனிகின்ற பாமாலை பல புனைந்து
ஷண்மதமே ஸ்தாபித்து சத்துவமே போதித்துக்
கண்மலரால் உலகத்தைக் காத்தருளும் காமாக்ஷி
தண்ணருள்சேர் காஞ்சிதனில் தன்னிகரில் சர்வஞ்ஞ
பீடமதில் தானமர்ந்து பெருமைமிகு ஜகத்குருவாய்
நாலெட்டு பிராயத்துள் நானிலமும் போற்றிடவே
காலடியில் அவதரித்தார் கழல்மலரைப் பணிந்திடுவா

Koviloor Digital Library

ஸ்ரீ காஞ்சி முனிவர் அந்தாதி

விநாயகர் காப்பு

ஆனை முகங்கொண்ட ஞான முதலோனே
பானை வயிற்றுள்ளே பாரைக் காப்போனே
ஞான குருசரிதம் பாட முனைகின்றேன்
தேனாய்ப் பெருகிடவே தேவே அருள்வீரே!

ஞானகுரு புகழ்த்தோற்றம்

கலியவன் கைவரிசை காட்ட முனைந்திடவும்
பொலிவது தானிழந்து பொய்மை தலைக்கேறி
நலிவுற வேதமெலாம் நல்லோர் துயருற்றார்
கலிபுரி யுங்கொடுமை கடியவு ளங்கொண்டார் 1.

கொண்ட பெருங்கருணை ஊற்றாய்ப் பெருகியெழக்
கண்டம் கருத்தபிரான் சங்கர ராகிவந்து
மண்டல மாம்காஞ்சி மாட்சி யுறவமர்ந்தே
எண்டிசை யும்வேதம் ஏற்றமுறச் செய்தார் 2.

செய்து மவர்தமது சீடர் பரம்பரையால்
உய்யும் வகையுலகோர்க் கோயா துணர்த்திவரத்
தொய்வில் சுடரதனில் தூண்டா மணிவிளக்காய்
மெய்யே வடிவானார் மேலோர் போற்றிடவே 3.

(வேறு)

போற்றுமுயர் கோவிந்த தீட்சிதரின் மரபன்னை
ஏற்றமிகு கணபதியாம் சாஸ்திரியார் வழி தந்தை
தோற்றமதும் மஹாலக்ஷ்மி சுப்பிரமணி யாமவர்க்கு
சாற்றிய சீர் கணபதியின் பாலகராம் ஸ்வாமிநாதன் 4.

Koviloor Digital Library

(வேறு)

நாதன் கணங்களுக்கே யான கணநாதன்
போத சங்கரரின் புனிதப்பணி தொடர
ஆதர வாகிஜெய வாண்டு வைகாசிதனில்
மேத கனுஷமதில் உதித்தார் விழுப்புரத்தில் 5.

(வேறு)

தில்லையி லாடு மீசன் பாகத் துறையு மன்னை
நல்லுளங்கொண்டு காஞ்சி நலமிகு பீடந்தன்னை
எல்லையில் சிறப்பி னோடும் இசைபட அலங்க ரிக்க
நல்லரு ளாளர் தன்னை நல்கிநல் லருள்புரிந்தாள் 6.

இளமைச்சிறப்பு

புரிந்தநல் லருளி னாலே போற்றிடக் குழந்தை மிக்க
விரிந்தபே ரறிவால் மற்றோர் வியந்திடச் செய்துமேலாம்
அருந்தவ சீலராக அறுபத் தாறாம்பீடத்
திருந்த சற்குருவின் சிந்தை ஈர்த்தனர் தம்பால் அன்றே. 7

அன்றே விப்பா லகனார் அருமை மிகவு ணர்ந்தே
தன்பின் னிவரே பீடத் தலைமையை யினிதா யேற்க
உன்னத மிக்கா ரென்னு முணர்வதால் பாலர் மீது
பன்னல மருளும் பார்வை பட்டிடு மாறு செய்தார் 8.

செய்தவ மிக்க பிள்ளைச் சிறப்பினைக் கண்ட தந்தை
உய்வகைக் கல்வி தாமே உரியநற் பருவம் தந்து
மெய்தவக் கல்வி கற்க மேவுமுப் புரிநூ லிட்டுப்
பெய்யொளி கதிரோன் போலப் பேரொளி வீசக்கண்டார் 9.

Koviloor Digital Library

குருநாதர் அருள் பெறுதல்

கண்டவர் வியக்கும் வண்ணம் கருத்துடன் கல்வி கற்று
முன்னிலை நின்று ஆசான் முழுமதிப் பினையும் பெற்றுக்
கண்மணி போலப் பெற்றோர் களித்திட விருந்த காலைப்
புண்ணிய குருவு மாங்கே புகழுற அழைக்க லுற்றார். 10.

உற்றதோர் அழைப்பு தன்னை உணர்த்திடா இவரின் தந்தை
பற்றிய பணியாம் ஆய்வுப் பணியதால் வெளியூர் சென்று
சுற்றியே திரும்பு முன்னே ஜோதியர் சமாதி கொள்ள
உற்றநல் சீடர் லெஷ்மி காந்தர்க் குபட்டம் தந்தார் 11.

தந்தநற் பட்டந் தன்னைத் தரித்திட வந்தவ ருந்தம்
முந்தைய குருவின் பெற்றி மூன்றைந் துநாளில் பெற்று
வந்தனைக்குரிய ரான வரிசையில் பாலர் பூர்ண
சந்திர ராய்விளங்க சத்துவ எண்ணம் கொண்டார் 12.

துறவு ஏற்றல்

கொண்டவவ் வெண்ணத் தாலே குருவுறை கலவை தன்னில்
பண்டித ருவக்க பாலர் பதிமூன் றுபருவந் தன்னில்
அண்டரு முவந்து போற்ற அருந்தவத் துறவு பூணக்
கண்டவர் களித்தா னந்தக் கண்ணினீர் சொரிந்து நின்றார் 13.

நின்றசீர் துறவுக் கோலம் நேர்ந்தது பராபவத்தில்
நன்றதாய் மாசிலாத நன்மா சிமாத மாக
பொன்னினு முயர்வு மிக்கப் புதனவன் நாளும் சேர
முன்னவை ராசி யோடு முறைமையி னினிது ஏற்றார் 14

ஏற்றவர் பட்ட மேற்றார் என்பதால் மகிழ்ந்தார் தொண்டர்
போற்றினர் பக்த ரெல்லாம் புண்ணியர் பதம்ப ணிந்தே

Koviloor Digital Library

ஏற்றதோர் தவக்கோலத்தின் இயல்பது மேற்றங்காண
சாற்றுயர் வேத மார்க்கம் தழைத்திட விருப்ப முற்றார் 15.

உற்றுநாம் நோக்கி லாங்கோ ருண்மையுந் தெரியக்கூடும்
பற்றறு துறவு பூண்டு பழுத்தநல் லனுபவத்தால்
முற்றிய ஞானந் தன்னை முன்னின்றருளூதற்கே
உற்றசீர் குருவுந் தூல உருவொடு மிருந்தாரில்லை. 16

தவத்தின் உயர்வு

இல்லையென் றயர்வுறாதே இசைபடத் தமக்கு முன்னே
நல்லருள் பீட மார்ந்த நாதரி னருளை யெல்லாம்
கள்ளமில் குழந்தை யாங்கே காண்பவர் ஈர்த்தலேபோல்
சொல்லறு சூட்சுமத்தால் சுவைபட ஈர்த்துக்கொண்டார் 17.

கொண்டபே ரருளின் மிக்கார் குறைவிலாத் தவத்தினாலே
வண்டது மலரை நாடி மதுவுணச் செல்லுமாபோல்
எண்டிசை யுள்ளோ ரெல்லாம் இசைவுட னிவரை நாடித்
தண்மலர் வாக்காம் தேனைத் தடையற அடைவ ரன்றே. 18.

அன்றலர் மலரே போலும் அணிமிகு மலர்மு கத்தில்
மின்னலாய்க் கருணை வீசி மிளிர்ந்திடும் விழிகள்; கேட்கக்
கன்னலாய் இனிக்கும் சொற்கள் காதினில் இனிமை சேர்க்கும்
முன்தவம் செய்யின் வாய்க்கும் முனிவரின் கருணை
என்றும் 19.

புனித யாத்திரை மேற்கொள்ளல்

என்றுமே துறவு பூண்டார் இருப்பரோ வோரிடத்தில்?
நன்றதாம் துறவின் மிக்கார் நல்லருள் ஞாலமெல்லாம்
சென்று சேர்ந் திடுதல் வேண்டும் சேவடி படுவ தாலே
நன்னிலம் தீர்த்தம் யாவும் நலமிக வடைதல் வேண்டும் 20

Koviloor Digital Library

வேண்டிடு நெறிக ளெல்லாம் விருப்புட னறிந்து ணர்ந்து
பூண்டநற் றுறவுக் கொத்த புண்ணியப் பயணம் கொள்ள
வேண்டியே இருந்த காலை விழுமிய ஆனைக் காவில்
மாண்புறு குடமு ழுக்கே ஆற்றிட வந்தார் கோரி 21

திருவானைக்கா குடமுழுக்கு

கோரியே வேண்டி நின்றார் நகரத் துசெட்டியார்கள்
சீரிய பயணந் தன்னைச் சிறப்புறத் தொடங்கும் வேளை
நேரிய நிமித்தம் நன்றாய் நினைத்துள மகிழ்ச்சி பொங்க
ஆருயிர் அன்னை கோவில்அன்புட னேகலுற்றார் 22.

உற்றநல் குடமுழுக்கை உயரிய முறையி லாற்றி
நற்றவ முனிவர் ஜம்பு, நாயகி, வேழம் மற்றும்
சிற்றுயிர் சிலந்தி முன்னம் சிறப்புடன் பணிந்த நாதர்
அற்புத அப்புத்தானம் அன்புடன் பணிந்தார் பின்னும் 23.

இளையாற்றங்குடி செல்லுதல்

பின்னரும் பயணமேற்றுப் பெருந்தவ சீலராக
முன்னதாய்ப் பீடந்தன்னை முறையொடு மலங்கரித்த
அன்புரு குருதே வேந்த்ர ரதிட்டா னமாங்கு காண
உன்னத இளைய வாற்றங் குடிதனுக் கேகி னாரே 24.

ஏகியே தொழுது மேலாம் இறையருள் நிரம்ப மீண்டும்
வாகினால் ஆனைக் காவில் வழுத்திடு சாதுர் மாதம்
ஆகிடத் தஞ்சை மார்க்க மமைந்தநற் பதிகு டந்தை
ஏகி மா மாங்கம் காண இசைபட ஆங்கு வந்தார் 25.

Koviloor Digital Library

வந்தவர் மகாமகத்தின் வரிசையை மிகநி னைந்து
அந்தநாள் ஊழியின்பின் அமுதது வழிந்த பெற்றி
உந்திடக் குளத்தில் மூழ்கி உயர்ந்தநல் தானம் நல்கி
அந்தமில் லீசன் தன்னை அன்பொடும் போற்ற லானார் 26

வேதக்கல்வி தொடருதல்

ஆனதிவ் வாறி ருக்க அருமறை ஆக மங்கள்
வேணபல் கலையின் தேர்ச்சி விரிவுறு நோக்கங்கொண்டு
ஆனதம் முயற்சிக் கேற்ப அமைவுறு பொன்னி யோரம்
காணுநற் பதிமா கேந்த்ர மங்கலம் அமைந்த தென்றார் 27.

என்றுமே யிவர்தம் ஆற்றல் எளிதிலை எடுத்தியம்ப
உன்னத வேதமோடும் உயர்கலை பலவில் மற்றோர்
உன்னலு மரிய காலுள் ஒப்பிலாத் தேர்ச்சிப் பெற்றுப்
பின்னருந் துறவுக் கேற்ற பெருநிலை ஒருங்கே பெற்றார் 28.

பெற்றதோ ரருளின் பாங்கால் பெருமைசேர் தலைமையேற்றுக்
கற்றவர்க்கெல்லா மாங்கே கண்டிடு வரம்பாய் நின்று
மற்றவர் பலரு முய்ய மருவிலா நெறிகள் தந்து
முற்றுணர் ஞானி யென்னும் முழு நிலை நின்றார் அம்ம! 29.

கும்பகோணத்தில் நவராத்திரி விழா

அம்மையி னுயர்வா மன்பு அனைவரு மறிவார் நன்கு
செம்மையாய் அண்டங் கோடி சிறப்புறப் படைத்துக் காக்கும்
அம்மையி னருளை வாரி அளித்திடு மிரவு ஒன்பான்
இம்மையே நோற்றல் நன்றாம் இனியபொற் பாதந்தன்னை 30

Koviloor Digital Library

தன்னையே அர்ப்பணித்துத் [illegible] வேண்டி நின்றால்
அன்னையும் மகிழ்ந்து மேலாம் அமரவாழ் வருள்வ ளன்றே
உன்னத அன்னை நோன்பு உணர்வுறு நிலையி யாற்ற
உன்னினார் கும்பகோணத் துயர்வுசேர் பீடந்தன்னில் 31.

தன்னிக ரில்லாத் தாயை தக வுறு இலட்சம் நாமம்
தன்னினா லுவந்தர்ச்சித்து தக்கவ ரிலட்சம் பேர்க்கு
அன்னமும் வழங்கி மேலும் அன்னையின் வடிவாம் பெண்டிர்
தன்னையும்முறைகொண்டாடித் தாயருள் கூரச்செய்தார் 32

வேதாகமம் கலைகளை வளர்த்தல்

செய்வதற்கரிய செய்வார் பெரியரென் பதனுக் கேற்ப
உய்வகை தவமேற் கொண்டே உலகிலே வேத மொடு
தெய்வமார் கலைகள் யாவும் திறமுட னோங்கச் செய்து
மெய்வழி உலகோர்க் கெல்லாம் மேவிட மனமே
கொண்டார் 33.

கொண்டதால் வேதக்கல்வி குறைவற பயின்றார்க்கெல்லாம்
கொண்டிடு திறனுக்கேற்ற குணமிகப் பட்டம் நல்கி
திண்ணமாய் நலம்பெ ருக்குந் திட்டமுந் தீட்டிக் காத்து
கண்ணனை வேதமெங்கும் கவினுற வழிவகுத்தார். 34

வகுத்தசீர்க் கலைக ளோர்ந்து வல்லுந ரான வர்க்கே
வெகுமதி தந்து ஊக்கி வித்தை மேலோங்கச் செய்யும்
வகுபணி செய்து பின்னும் வளர்நிலை கலைஞர் கட்கும்
வெகுமுறை ஆசி நல்கி விரைந்தவர் வளரச் செய்தார் 35

செய்ததால் மடத்தி லென்றும் சிறப்புறு கலைஞர் கூட்டம்
மெய்மறை ஓதித் தேர்ந்த மிக்கவே தியர்கள் கூட்டம்

Koviloor Digital Library

தெய்வமாய் ஏத்தும் பக்தர் திரள்திர ளான கூட்டம்
மெய்நிலைத் துறவு ஏற்றார் மேலிடத் தோன்றும் கூட்டம் 36

கூட்டமாய்க் கூடி யாங்கே குருமணி வாக்க மிழ்தைத்
தேட்டமாய்க் கொண்டு மேலாம் திருவிழிக் கருணை நோக்கால்
வாட்டமெல் லாமும் நீங்க வதனபங் கயத்தை மெத்த
நாட்டமாய் விரைந்து தும்பி நண்ணுதல் போல்வர்
மாதோ! 37

மீண்டும் நீண்ட தீர்த்த யாத்திரை

மாதினைப் பக்கம் கொண்டார் மன்றிலே பாதம் தூக்கி
ஓதிடு வேதம் போற்ற ஒய்விலா தாடல் போல
ஆதிசங் கரர்தம் பாதம் அருமைசேர் இமய மட்டும்
மேதினி உய்ய வேண்டி மிகுநடை கொண்ட தோர்ந்தார் 38

ஓர்ந்தவ ருவகை யோடும் உலகினர் நலம்வி ரும்பி
ஆர்வமாய் முன்னை ஆசான் அருளினை மிகவே கொண்டு
தேர்ந்தநல் லந்த ணர்க்குத் திரள்வுறு தான மீந்து
நேர்ந்ததந் பயணம் மீண்டும் நிர்மலர் தொடங்கி வைத்தார் 39

கும்ப கோணத்தில் சிவராத்திரி நோற்றல்

வைத்ததோர் பயண வாயில் வளமிகு கும்பகோணம்
மெத்தசீர் பொன்னி யோரம் மேவிய மண்டபத்தே
உத்தம ருள்ளம் வாழும் உமாபதி உகந்த ராத்ரி
நித்திரை விழித்துக் காலம் நான்கி லும்பூஜை செய்தார் 40

செய்தவ மதனால் வாய்க்கும் சிவனருள் பெற்று யர்ந்த
மெய்நிலை உணர்ந்து மாங்கே மெத்தசீர் மேவப் பெற்ற

Koviloor Digital Library
அய்யனே தில்லை வாழும் அப்பனுக் காற்றும் பூஜை
உய்வகை கண்டோ மென்றே உவந்தனர் பூஜை கண்டார் 41

மாதவர் பெருமை

கண்டவர் உவகை கொள்ளக் கண்டிடார் வேட்கை கொள்ளப்
புண்ணியத் தலங்க ளெல்லாம் பொற்பதம் படியச் சென்று
எண்ணிலாக் கோவில் கட்கே ஏற்றநல் பணிகள் செய்தார்
மன்பதை யுள்ளோ ரெல்லாம் மகேசனு மிவரே யென்றார் 42

என்றிவர் புகழைப் பாடி எண்ணிலாக் கோடி மக்கள்
கண்ணினீர் சொரிந்து மன்னார்க் கருணையை வியந்து கொள்வர்
உன்தை நிலையில் நின்று உலகினர் நலனே வேண்டிப்
பண்ணிய தவத்தின் பெற்றி பகரலும் ஆவ தொன்றோ? 43

ஆவதற் கொன்று மில்லா அருள்நிலை பெற்றிட் டாலும்
பாவநல் வினை கடந்த பழநிலை எய்திட்டாலும்
ஆவலாய் வருவோர் வேட்கை அன்புடன் வினவி அன்னார்
தேவையு முணர்ந்து மிக்க தெய்வமாய்க் கருணை செய்வார் 44

செய்வது சிறக்கச் செய்யும் செய்வினை ஆற்றல் மிக்கார்
பொய்யது பொய்க்கச் செய்த புனிதராம் சத்தியத்தின்
மெய்யுரு வாகி யீங்கே விளங்கிடும் முனிவர் நம்மோர்
உய்வுற வேண்டி வந்த ஒப்பிலார் இவரே தாயாம் 45

தாயுளம் தன்னால் நம்மோர் தவறினைப் பாராட்டாது
தூயநல் லன்பு காட்டி துரிசுகள் விலகச் செய்து
சேய்நல மொன்றே வேண்டும் சிறப்பினால் ஏற்ற வாறு
ஓய்விலா தருளிச் செய்யும் உயர்வதும் உரைக்கற் பாற்றோ? 46

கோவிலூர் ஆதீனம்
2846
01:33ЖЬ

Koviloor Digital Library

பாலென நீறணிந்த பால்வடி முகத்தை நோக்க
வேலவன் போலீ ராறு விழிகளோ நமக்கு இல்லை
நூலது பலவும் கற்ற நுண்ணறி வாள ரெல்லாம்
சாலவும் வியந்து போற்ற சரஸ்வதி நாவிற் கொண்டார் 47

கொண்டலைப் போல நன்மை குணமிகு சுவாமியின் பால்
அண்டினார் யாரு மிங்கே அளவிலாப் பயனைப் பெற்றுத்
தண்மலர்ப் பதம்ப ணிந்து தலையின்மீ திருகை கூப்பிக்
கண்மணி யன்னார் வாழக் கடவுளை வேண்டி நிற்பர் 48

அருளுபதேசம்

நிற்பது செல்வ மன்று நிலையிலா துலக வாழ்வு
சொற்பநாள் வாழும் போதே சோர்விலா தறங்கள் ஆற்றி
நற்றவ வழியில் சென்று நலிந்தவர்க் குதவி நின்றால்
நற்பதம் பெறலா மென்ற நல்லுப தேசம் தந்தார் 49

தந்ததைச் செயலு மாக்க தரும்பிடி அரிசித் திட்டம்
தந்தனர் எளியோர் மிக்க தவிப்புறு பசிநீங்குற்றார்
முந்தையோ ராற்றி வந்த முறையினால் பூர்த்த தர்மம்
நந்தலை முறையோ ராற்றி நலமிக அடையச் செய்தார் 50

செய்திடும் பணியே தெய்வம்; சிறப்புடன் முறையாய் வாய்த்த
செய்தொழி லோங்கச் செய்தால் செவ்விய கரும யோகம்
செய்ததன் பயன்நோக் காது செயல்செயக் கற்று விட்டால்
மெய்நிலை தானே மேவும் மேன்மையும் கூட்டு மென்றார் 51

காட்டிடு மன்பினாலே கல்லுமே நெகிழு மன்றோ?
போட்டியும் பொறுமை பொய்யும் புன்மைசேர்
கொலையும் ஒட்ட

Koviloor Digital Library

வாட்டமும் நீங்க நல்ல வளமிகு வாழ்வு கிட்டும்
நாட்டமும் நல்ல தானால் நலமிக விளையு மன்றோ? 52

அன்றன் றியன்ற மட்டில் அயலரு மறியா வண்ணம்
நன்றது செய்தல் வேண்டும் நாள்தொறும் சிறிது நேரம்
ஒன்றியே தியானம் செய்தே ஒன்றெனும் பிரம்மம் தானே
என்றபா வனையுஞ் செய்தால் எய்தலாம் உயர்ந்த ஞானம் 53

ஞானமே பிறந்து விட்டால் ஞாலமும் மறைந்து போகும்
ஞானியை வாட்டும் துன்பம் ஞாலத்தி லேது மில்லை
ஞானியின் மேலா மன்பு ஞாலமும் வாழச் செய்யும்
ஞானமே பெறவு யர்ந்த ஞானியின் துணையும் வேண்டும் 54

வேண்டுதல் வேண்டாப் பெற்றி வேண்டிய வாறு பெற்றார்
யாண்டுமோர் அவதியுற்றே அல்லல் ஓராத போதும்
வேண்டிடு நிலையிலுள்ளோர் வேண்டுதல் செவிம டுத்தே
ஆண்டவர்க் குதவி மேலாம் அன்பினால் புரிவா ரன்றே 55

பக்தர்கள் பலவாறு புகழ்தல்

புரிந்திடாத் தத்து வங்கள் புரிந்திடு வண்ண மாங்கே
அரிய பல் லுரைக ளாற்றி அகந்தனில் பதியச் செய்தே
அருமறை ஆகமங்கள் அறநெறி நூல்கள் யாவும்
விரிவுற விளக்கும் பெற்றி வியந்தறி ஞரும்பு கழ்ந்தார் 56

(வேறு)

புகழுக்கே புகழ் சேர்த்த புண்ணியர் நற் புலமை
ஜகன்மாதா அறிவதன்றி ஜகத்துள்ளோர் அறியார்
புகழ்ந்தாலு மிகழ்ந்தாலும் புன்னகையோ டிருப்பார்
புகழுரைக்க ஆயிரநா உடையவரும் மலைப்பார் 57
மலைக்கின்றார் யாரிவரென் றறியவொணா தறிஞர்

Koviloor Digital Library

மலைமகளாம் பார்வதியின் மாற்றுருவே யென்பர்
கலைமகளாம் சரஸ்வதியே கனிந்துவந்தா ளென்றே
கலைவாண ரெல்லோரும் கனிவுடனே உரைப்பர் 58

உரைகல்லாய் அறிஞரெலாம் உணர்ந்துமிகப் போற்றி
நிறைஞான மூர்த்திசிவ நிர்மலனே என்பர்
மறைநான்கின் மூலமதாய் மகிமையுறு ப்ரணவ
மறைபொருளைத் தெரிவித்த மால்மருக னென்பர் 59

பாருலகோர் முதலான பல்லுலகோர் பலரும்
சீருடனே முன்துதிக்கும் சீர்துதிக்கைப் பெருமான்
கூறுலகில் வந்திங்கு குறைவின்றி வேதம்
வீறுபெறச் செய்கின்றார் எனவியந்து நிற்பர் 60

நின்றமனம் அகலவரும் நிர்க்குண அத் வைதம்
தன்னிலையில் காண்கின்ற தவமுனிவ ரென்பர்
இன்னபல வாகவுரை இசைத்திடுவா ரெனினும்
இன்னுமிவர் தமைமுழுவதும் ஈங்கறியார் பலரே 61

பலபடியி லுள்ளோர்க்கும் பக்குவமாய் உரைத்தே
நலம்பெருகச் செய்கின்ற நற்றவத்தா ரிவரை
உலகெல்லாம் உய்விக்கும் உகந்த ஜகத் குருவாய்
பலவாறு துதிசெய்த பதம்மணிவர் அன்பால் 62

ஸ்ரீஜயேந்திரருக்குப் பட்டமளித்தல்

அன்பே சிவமென் றனுபல நிலையில்
அன்பே சிவமாய் அமர்ந்திருத் தவரும்
என்றும் தொடந்தே இயற்றிடு பூஜை
நன்றாய் நடந்தது நன்மைகள் பெருகின 63

Koviloor Digital Library

பெருகிடும் மடத்துப் பொறுப்பினைச் சிறப்புற
நிருவகித் தறநெறி நியமமு முணர்த்தி
அருமைசேர் துறவினை அணிசெயு மொருவரைத்
தெரிந்திடத் திருவுளம் திடமுறக் கொண்டார் 64

கொண்டிடு பணியைக் குருவருள் திறந்தால்
கண்டவர் வியக்கக் கனிவுடன் முடித்திடும்
புண்ணிய சீலராய்ப் புனிதராய் சுப்பிர
மண்யரும் திகழ்ந்தார் மகிழ்வது துலங்கிட 65

துலங்கிருள் நீக்கியாம் தூயநற் பதியில்
உலகம் நலமுற உதித்தநற் புண்ணியர்
அலகிலா அன்பது அமைந்த சற்குருவின்
நலமுறு சீடராய் நயமுற விளங்கினார் 66

விளங்கிடு வேதமும் கலைகளும் தேர்ந்த
களங்கமில் சீடருக் களித்தனர் துறவே
வளமிகு காஞ்சியில் பட்டமு மேற்றவர்
உளங்கவர் இயல்பால் உவகை பெற்றனர் 67

அருள் நிறை ஆசான் அறுபதன் நிறைவு

பெற்றிடற் கரிய பெருநிலை நின்ற
முற்றுந் துறந்த முனிவர் தமக்கே
உற்றதாம் வயது அறுபது என்றே
கற்றவர் மற்றவர் கடலெனத் திரண்டனர் 68

திரண்ட புகழ்மிகு திவ்யரை அணுகி
அருமை மிக்கதாம் அறுபதின் நிறைவைச்

Koviloor Digital Library
சிறப்புற நிகழ்த்திட சுவாமியை வேண்ட
மறுத்தே எளிமையை மகிழ்ந்தனர் மிகவும் 69

சமுதாயப் பணிகள், அறப்பணிகள், அருள்மொழிகள்

மிகவெளிதாய்க் கொண்டாடி மகிழ்ந்தனரே அன்பர்
அகம்நிறைந்த அருளாளர் அருள்மிகவே பெற்றார்
பகலவனாய் வேதநெறி பாரிலொளி வீசத்
தகுந்தவர்க்கு உதவிபல தந்திடவே பணித்தார் 70

(வேறு)

பணித்துமே செயற்குழு பரிவுடன் நிறுவிட
அணிஅணி யாக அன்புடன் தானமே
இணக்கமாய்த் தந்தனர் இறைநெறி யாளரும்
வணக்கமாய் முனிவரை வழுத்தியே வழுவற 71

(வேறு)

வழுவிலா வேதம் போற்றி வழுவறக் கடமை ஆற்றி
விழுமிய பெரியோர் கூற்றை வேதமாய் ஏற்று வாழ
முழுமனம் தூய்மை யாகும் உயர்நிலை தானே கூடும்
அழுக்கிலா மனதைப் பெற்றால் அத்வைத சித்தி கிட்டும் 72

கிட்டிடாப் பொருளுக் கேங்கும் கீழ்மையை ஒதுக்கி நாளும்
கிட்டிய மகிழ்வோ டேற்று கிளைஞரோ டயலார் பேணி
மட்டிலா ஈசன் பாதம் மனத்திலே இறுத்தி பற்று
தொட்டிடாக் கருமம் ஆற்ற தூயராய் ஆவோம் மேலும் 73

மேலதாம் நிலையில் நின்று யெய்யும் தேசம் பெற்றுத்
தூல தேகத்தினுள்ளே தூயதாய் விளங்கும் ஆன்மா

Koviloor Digital Library

கோலமாய்ப் பரந்து அண்ட கோடியாய் விரிந்த தென்ற
சீலமே அனுபவத்தில் சிறப்புறும் ஞானம் தன்னால் 74

தன்னனு பவத்தைப் பெற்ற தவமுயர் முனிவர் வாழ்வே
உன்னத ஷஷ்டி பூர்த்தி உபதேசமாக்கி மேலும்
பொன்மழை பொழியச் செய்த புனிதசங் கரரும் தந்த
இன்னுப தேச மெல்லாம் ஏற்றுய்ய வேண்டுமென்றார் 75

என்றுமே அன்ற லர்ந்த இனியதா மரைமுகத்தார்
கன்றினை நினைந்து ஊட்டும் கனிவுடை பசுவின் மிக்கார்
ஒன்றிய பிரம்ம நிஷ்டை ஓங்கிய ஞானம் பெற்றார்
தன்புகழ் உலகறிந்தும் தாம் சொலா உயர்வு மிக்கார் 76

மிக்கதம் கருணையாலே மேதினி ஓங்கச் செய்தும்
தக்கநல் லறங்க ளிந்தத் தரணியில் தழைக்கச் செய்தும்
பக்குவ மொழிகள் கூறிப் பலர்மனம் கனியச் செய்தும்
முக்கணன் ஒத்த ஞான மூர்த்தியாய்த் திழ்கின் றாரே. 77

ஆரான போது மிங்கே அணுகிட நம்பி அன்பால்
நேரான நோக்கம் தானே நிறைவுறு மருட்திறத்தைப்
பாராட் டிடாதாரில்லை பழுத்தநல் மரத்தை வௌவால்
கூறு துசேர்தல் போலக் கூடுவார்க் களவு மில்லை 78

இல்லறம் பேணுவோரும் இசைவுடன் துறவேற்றோரும்
நல்லியல் பக்தரோடே நான்மறை தேறி னோரும்
பல்தொழிலாற்று வோரும் படிப்பறி வோங்கி னோரும்
சொல்லற வியந்து நிற்கும் சொல்லொணா உயர்வு
பெற்றார் 79

ஆர்த்தெழும் அலைகள் ஆங்கே அழகிய நிலவைக் கண்டு
நேர்த்தி மிக்காரையுன்ன நிறைமனம் அதுபோல் துள்ளும்

Koviloor Digital Library

கார்த்திகை தீபம் போலக் கண்டவர் பாவம் போக்கும்
சீர்த்தியு முரைக்கற் பாற்றோ சிறியனா லாகாதம்மா 80

அம்மைகா மாக்ஷி வாழும் அரியசீர் காஞ்சி தன்னில்
செம்மைசேர் பீடங் கண்டு சிறந்த சர்வஞ்ஞ பீடம்
தம்மிலே அமர்ந்த ஞான சங்கரர் வழியில் என்றும்
நம்மையீ டேற்றவந்த நற்றவ முழுமை ஞானி 81

ஞானமே கனிந்த நோக்கில் ஞானமே லோங்க வுன்னி
வேணபல் வித்தை பக்தி விநயமே லோங்கு பாலர்
ஞானசம் பந்த ரென்ன இலங்குசங் கரரைத் தேர்ந்து
நானிலம் மகிழப் பட்டம் நல்கிடச் செய்தார் பொன்னர் 82

கனாகாபிஷேகம் - உபதேச உரை

பொன்னென உள்ளவர்தம் புகழுடல் தன்னை மேலாம்
பொன்மலர் சொரிந்து போற்றும் புண்ணியம் தன்னை யாங்கோர்
நன்மனம் கொண்டார் வேண்ட நயமுட னதைம றுத்துப்
பின்னையா கட்டு மென்றே பெருந்தவர் சொல்லி வந்தார் 83

வந்தனை செய்ய வந்த வயதிலே முதிர்ந்தார் பார்வை
முந்தைய ஊழாய் மாற முடிவிலே மாற்ற மின்றி
சிந்தைசெய் திருந்த காலை சிறப்புடன் பார்வை மீள
நந்தவர் தயவை மீண்டும் நயமுற வேண்டிக் கொண்டார் 84

கொண்டபே ரன்பால் வேண்டும் குறிப்பினை அறிந்து அன்னார்
எண்ணமும் நிறைவு கொள்ள இசைவினைத் தரவு மாங்கே
கண்ணுடை மாந்தர் கண்டு களிப்புடன் கனக தாரை
பண்ணுவித் தருளே பெற்றுப் பதமலர் பணிந்து நின்றார் 85

Koviloor Digital Library

நின்றசீர் பெருமா னன்று நீடுப தேசம் நல்கி
உன்னத பதியாம் காஞ்சி உறைந்திடும் தாய்கா மாக்ஷி
இன்னருள் புரிந்து மூகன் இணையிலாக் கவிஞன் ஆக்கி
பொன்மழை தொண்டை நாட்டில் பொழிந்ததும் விளக்கலானார் 86

விளக்கதன் ஒளியால் சூழ்ந்த விரியிருள் நீக்கல் போல
அளப்பரும் ஞான ஜோதி ஆதிசங் கரருமன்றே
உளம்நிறை கருணையாலே உவந்தொரு நெல்லி யேற்று
அளவிலாப் பொன்னை லக்ஷ்மி அருவியாய்ப் பொழியச் செய்தார் 87

செய்தசீர் பரவிப் பின்னும் சிறந்ததாம் கனக வர்ஷம்
பெய்தலின் மேலாய் மாந்தர் செய்தகும் செயலொன்றுண்டு
உய்வகை வேதம் சொன்ன உயரறம் போற்றி நின்று
மெய்தவர் பகவத் பாதர் மெத்தவே பணித லென்றார் 88

என்றுமே நன்மை ஒன்றே ஏற்பட உள்ளம் கொண்டு
மன்றிலே என்று மீசன் மகிழ்நடம் புரிதல் போலத்
தன்தவ மெல்லா மிந்தத் தரணிமே லோங்கத் தந்து
உன்னத த்யாகம் செய்தே ஒன்றையும் வேண்டா ரீங்கே 89

இங்கிவர் வேண்டத் தக்க தெதுவுமே இல்லை ஆயின்
பொங்கிடு மண்பால் நாமும் புரிகிறோம் கனக தாரை
சங்கர ரிவரு மேற்று சம்புவாய் அருள்வதாலே
நங்குறை தீர்வ தன்றி நம்மா லிவர்கொன்றாமோ? 90

ஆமுனே வைத்த புல்லும் அருணன் முன்பனி யும் போல்
மாமுனி முன்னில் நிற்க மாய்ந்திடும் மாசு யாவும்
சேமமே பெருகக் காண்பர் செம்மனச் செம்மலானார்

Koviloor Digital Library
நாமமே பரவ லன்றி நாடிட வேறொன் றில்லை 91

இல்லையென் பார்க்கு மீசன் இன்னருள் சுரத்தல் போலப்
பல்நிலை யோரும் பார்வை பட்டிட உயர்வே காண்பர்
நல்லதோர் சோலை மற்றும் நலமிலாப் புதரென்றாலும்
நல்லொளி சமமாய் வீசல் நன்மதி இயல்பே நாளும் 92

நாள்தொறும் தரிசித் தற்கே நண்ணுவ ராயி ரம்பேர்
தாள்மலர் கண்டு போற்றி தம்முள மகிழ்ச்சி யுற்று
ஊழ்வினை தேயக் கண்டே ஓங்கிய பக்தி செய்து
வாழ்வது சிறக்கச் செய்யும் வந்தனைக் குரிய ரென்பர் 93

நூற்றாண்டு வைபவம்-மீண்டும் கனக தாரை

என்புமே பிறர்க்கே யென்று ஈடிலா அன்பு கொண்டார்
இன்பமே லோங்கே வாழ்ந்து இசைபட நூறு காண
மன்பதை யோர்களெல்லாம் மட்டிலா மகிழ்ச்சி பொங்கப்
பொன்மலர் சொரிந்து போற்றிப் பொற்பதம் பணிந்து
கொண்டார் 94

கொண்டதோர் துறவின் மேன்மை கூடிடச் செய்து மேலும்
தொண்டர்தம் மதம்பா ராது துலங்கிடும் மதத்திற் கொத்த
பண்புசால் நெறிகள் காட்டிப் பரிவுடன் ஆசி கூறி
மண்ணிலே மனித நேயம் மலர்ந்திட வழியும் சொல்வார் 95

சொல்லது மினிய தாகி செயலது மினிய தாகின்
நல்வினை ஓங்கி நாளும் நலமதே பெருகு மன்றோ?
வல்வினை இரண்டும் மாய வழங்குவார் உபதேசங்கள்
எல்லையில் கருணை கொண்டார் இசையது முரைக்கற்
பாற்றோ? 96

Koviloor Digital Library

பாற்கடல் பள்ளி கொண்ட பரமனைப் போல என்னால்
நூற்கட லான இன்னார் நுண்ணறி வளந்து சொல்லல்
ஏற்புடைத் தன்று மேலும் என்னறி வதுவோ சொற்பம்
ஊற்றெழு மாவ லாலே ஒருசில வார்த்தை சொன்னேன் 97

(வேறு)

சொல்லியதும் பிழையின்றிச் சொல்லறியே னென்றாலும்
சொல்லரிதாம் இவர் பெருமை சொல்லாதே
இருந்திடவோ
இல்லைமனம் என்செய்வேன் என்மனதிற் தோன்றியதைச்
சொல்லுவதால் மனம் நிறைந்தேன் சொற்குற்றம்
பொருத்தருள்வீர் 98

அருளாளர் புகழுன்ன அன்பூறும் மனதுள்ளே
இருள்சேரும் வினைசேரா இவரருளே சேர்வதனால்
மருளறவே அருள்பெருகும் மட்டில்லா மகிழ்வொன்றே
பொருளாகும் நிலைபெறுவோம் புனிதமுறு ஆவலினால் 99

ஆவலினால் பாடுகிறேன் அங்கொன்று மிங்கொன்றும்
தாவிசில நானறிந்த தகவல்களே தந்துள்ளேன்
காவியமாய்ப் பாடிடவோ கவிவளமும் எனக்கில்லை
நாவலர்கள் சிறுபிள்ளைக் கூவலினைப் பொறுப்பீரே 100

சமர்ப்பணம்

பொறுத்தருளும் புண்ணியரின் பொன்னான புகழடியில்
சிறுத்தொண்டன் என்னிதயம் சேர்ப்பித்தேன் பாடலினால்
திருத்தங்கள் செய்தென்னை தெய்வீக நிலைபெறவே
குரு பரராம் இவரருள்வார் குறையேதும் எனக்குறுமோ? 101

Koviloor Digital Library

(பிற்சேர்க்கை)

முனிவர் சமாதி கொள்ளல் (பிரிவாற்றாமை)

உற்றதோர் ஆவல் மேவி உன்னதர் மேலந் தாதி
பற்றுடன் பாட லானேன் பாடலும் முடியும் வேளை
நற்றவர் அந்தம் ஆதி நாளதாம் அனுஷம் தன்னில்
உற்றதாய் செய்தி கேட்டு உணர்வறு நிலையே
கொண்டேன் 1

கொண்டதாம் மஹாச மாதி குறிப்பினை அறிந்து மக்கள்
எண்டிசை தன்னி னின்றும் ஏகினர் காஞ்சி நோக்கி
தெண்டனு மிட்ட ரற்றித் தேம்பியே அழுது சோர்ந்து
மண்டல மீதிதே போல் மாமுனி காண்ப மென்றார் 2

என்றுகண் ணீரு மல்க ஏங்கிய அன்பர் கூட்டம்
ஒன்றிய அருந்தவத்தார் உடல்மலர் தூவி; தாயைக்
கன்றது பிரிந்ததே போல் கதறிடு நிலையில் நின்றார்
பொன்னினு முயர்வு மிக்கப் புகழுடல் மறையுமோதான்? 3

தானது பிரம்ம மென்ற தத்துவம் அனுபவத்தில்
ஆனது கண் டத்வைதம் ஆனதாம் ஜீவன்முக்தி
ஆனவெள் ளரிப்பழம் போல் அரியதாம் மோக்ஷம் அன்றே
காணநின் றவர்க்கே யின்று காண்பதாம் மஹாசமாதி 4

ஆதியென் றிருந்து விட்டால் அந்தமு மிருந்தே தீரும்
ஆதியு மந்த மின்றி ஆண்டவ னிருந்த போதும்
நீதியை நிலைநிறுத்தி நெறிமுறை நடத்திக் காட்ட
ஆதிசங் கரரேபோல அவதரித் திடலு முண்டாம் 5

Koviloor Digital Library

உண்டதாம் நெறியி லிங்கே உதித்தநம் முனிவரேறு
எண்டிசை ஏற்றம் காண இறைபணி நாளும் செய்து
கண்டவர் வியந்து போற்றக் கருணையால் ஆட்சி செய்து
மண்டலம் காஞ்சி மேவி மாமுனி யாகி நின்றார் 6

நின்றிடு புகழில் நின்றார் நீக்கினார் யாக்கை தன்னை
என்றுமே அவர்க டாக்ஷம் எல்லோர்க் குமீங்கே யுண்டு
முன்புபோல் கண்ணாற் காண முடிந்திடாப் போதும் சிந்தை
ஒன்றினால் காண்ப மென்றே உறுதியாய் அமைவோம் வாரீர்! 7

Koviloor Digital Library

Koviloor Digital Library



''நாம் பண்ணுகிற பாபம்தான் உடம்புக்குக் காரணம். இனிமேல் பாபம் பண்ணாமல் இருந்தால் உடம்புவராது. ''பாபம் பண்ணக் கூடாது'' என்ற நினைவு இருக்க வேண்டும்''

2846
0341

Koviloor Digital Library

ஸ்ரீகாமாக்ஷி அம்மன் நித்ய பாராயணங்கள்

ஸ்ரீ காமாக்ஷி ஸுப்ரபாதம்

காமாக்ஷி தேவ்யம்ப தவார்த்ர த்ருஷ்ட்யா
மூக:ஸ்வயம் முககவிர் யதா (ஆ) ஸீத்!!

ததா குரு த்வம் பரமேஸஜாயே
த்வத்பாத மூலே ப்ரணதம் தயார்த்தே!!
உத்திஷ்டோதிஷ்ட வரதே உத்திஷ்ட ஜகதீஸ்வரி
உத்திஷ்டஜகநாதாரேத்ரைலோக்யம் மங்களம்குரு!! 1

ஸ்ருணோஷி கச்சித் த்வநி ருத்திதோ(அ) யம்
ம்ருதங்க பேரீ பட ஹாநகாநாம்!!
வேத த்வநிம் ஸிஷித பூஸுராணாம்
ஸ்ருணோஷி பத்ரே குரு ஸுப்ரபாதம்!! 2

ஸ்ருணோஷி பத்ரே நது ஸங்க கோஷம்
வைதாளிகா நாம் மதுரம்ச காநம்!
ஸ்ருணோஷி மாத: பிக குக்குடாநாம்
த்வநிம் ப்ரபாதே குரு ஸுப்ரபாதம்!! 3

மாதர் நிரீக்ஷ்ய வதநம் பகவாந்ச ஸாங்கோ
லஜ்ஜாந்வித: ஸ்வயமஹோ நிலயம் ப்ரவிஷ்டா!!
த்ரஷ்டும் த்வதீய வதநம் பகவாந் திநேஸோ
ஹ்யாயாதி தேவி ஸ்தநம் குரு ஸுப்ரபாதம்!! 4

பஸ்யாம்ப கேசித் த்ருத பூர்ணகும்பா!
கேசித் தயார்த்ரே த்ருத புஷ்பமாலா!
காசித் ஸுபாங்க்யோநநு வாத்ய ஹஸ்தா
திஷ்டந்தி தேஷாம் குரு ஸுப்ரபாதம்!! 5

பேரீ-ம்ருதங்க-பணவாநக-வாத்ய ஹஸ்தா:
ஸ்தோதும் மஹேஸதயிதே ஸ்துதி பாடகாஸ் த்மாம்
திஷ்டந்தி தேவி ஸமயம் தவ காங்ஷமாணா

Koviloor Digital Library

ஹ்யுத்திஷ்ட திவ்ய ஸயநாத் குரு ஸுப்ரபாதம்! 6

மாதர் நிரீக்ஷ்ய வதநம் பகவாந் த்வதீயம்
நைவோத்தித: ஸஸிதயா ஸததஸ் தவாங்கே!
ஸம்போதயாஸு கிரிஜே விமலம் ப்ரபாதம்
ஜாதம் மஹேஸ தயிதேகுரு ஸுப்ரபாதம்!! 7

அந்தஸ் சரந்த்யாஸ தவ பூஷநாணாம்!
ஜல் ஜல் தவநிம் நூபுர-கங்கணாநாம்!!
ஸ்ருத்வா ப்ரபாதே தவ தர்ஸ நார்த்தீ
த்வாரி ஸ்திதோஹம் குரு ஸுப்ரபாதம்!! 8

வாணீ புஸ்தக மம்பிகே கிரீஸுதே பத்மாநி பத்மாஸநா
ரம்பா த்வம்பர டம்பரம் கிரிஸுதா கங்காச
கங்காஜலம்!
காளீ தாள யுகம் ம்ருதங்க யுகளம் ப்ருந்தாச நந்தா ததா
நீலா நிர்மலா தர்ப்பணம் த்ருதவதீ தாஸம்
ப்ரபாதம்ஸுபம்!! 9

உத்தாய தேவி ஸயநாத் பகவாந் புராரீ!
ஸ்நாதும் ப்ரயாதி கிரிஜே ஸுரலோக நத்யாம்!!
கைகோ ஹி கத்துமநகே ரமதே தயார்த்ரே
உத்திஷ்டதேவி ஸயநாத் குருஸுப்ரபாதம்!! 10

பஸ்யாம்ப கேதிச் பலபுஷ்ப ஹஸ்தா:
கேசித் புராணாநி படந்தி மாத:
படந்தி வேதாந் பஹவஸ் தவாக்ரே
தேஷாம் ஜாநாநாம் குரு ஸுப்ரபாதம்!! 11

லாவண்ய யஸேவதிம அவேக்ஷ்ய சிரம் த்வதீயம்
கந்தர்ப்ப தர்ப்ப தனநோபி வஸங்க தஸ்தே!
காமாரி-சும்பித-கபோலயுகம் த்வதீயம்
த்ரஷ்டும் ஸ்திதா வயமயே குரு ஸுப்ரபாதம்!! 12

காங்கேய தோய மவகாஹ்ய முநீஸ்வராஸ் த்வாம்
காங்காஜலை ஸ்நபயிதும் பஹாவோ கடாம்ஸ்ச!
த்ருத்வா ஸிரஸ்ஸு பவதிம் அபிகாங்க்ஷமாணா:

Koviloor Digital Library

த்வாரி ஸ்திதாஹி வரதே குரு ஸுப்ரபாதம்!! 13

மந்தார-குந்த-குஸுமைரபி ஜாதி-புஷ்பை:
மலாக்ருதா விரசிநாநி மநோஹராணி!!
மால்யாநி திவ்ய பதயோரபி தாதுமம்ப
திஷ்டந்தி தேவி முநய: குருஸுப்ரபாதம்! 14

காஞ்சி கலாப பரிரம்ப நிதம்பபிம்பம்
காச்மீர-சந்தந விலேபித-கண்டதேசம்
காமேஸ்-கம்பித-கபோல உதாரநாஸாம்
த்ரஷ்டும் ஸ்திதா: வயமயே குரு ஸுப்ரபாதம்!!15

மந்த ஸ்மிதம் விமல சாரு விஸால நேத்ரம்
கண்டஸ்தலம் கமல கோமள கர்ப்பகௌரம்!
சக்ராங்கிதம் சயுகளம் பதயோர் ம்ருகாக்ஷீ
த்ரஷ்டும் ஸ்திதா: வயமயே குரு ஸுப்ரபாதம்!!16

மந்தஸ்மிதம் த்ரிபுர நாஸகரம்: புரோரே:
காமேஸ்வர: ப்ரணய கோப ஹரம் ஸ்மிதம் தே!!
மந்தஸ்மிதம் விபுலஹாஸ மலேக்ஷிதும் தே
மாத: ஸ்திதா: வயமயே குரு ஸுப்ரபாதம்!! 17

மாதா சிஸூநாம் பரிரக்ஷணார்த்தம்
நசைவ நித்ரா வஸமேதி லோகே!!
மாதா த்ரயாணாம் ஜகதாம் கதிஸ் த்வம்
ஸதா விநித்ரா குரு ஸுப்ரபாதம்!! 18

மாதர் மூராரி கமலாஸந வந்திதாங்க்யா:
ஹருத்யாநி திவ்ய மதுராணி மநோஹராணி!!
ஸ்ரோதும் தவாம்ப வசநாநி ஸுபப்ரதாணி!!
த்வாரி ஸ்திதா: வயமயே குரு ஸுப்ரபாதம்!! 19

திகம்பரோ ப்ரம்ம கபால பாணி:
விகீர்ணகேச: பணி வேஷ்டி தாங்க:!
ததாபி மாதஸ் தவ தேவி ஸங்காத்
மஹேச்வரே(அ) பூத்குரு ஸுப்ரபாதம் 20

Koviloor Digital Library

அயிது ஜநநி தத்த ஸதந்யபாநேந தேவி!!
த்ரவிட ஸிஸுரபூத் வைஜ்ஞாந ஸம்பந்தமூர்த்தி
த்ரவிட தநயு புக்த க்ஷீரசேஷம் பவாநி
விதரஸி யதி மாத: ஸுப்ரபாதம் பவேந் மே: 21

ஜநநி தவ குமார: ஸ்தந்யபாந ப்ரபாவாத்
ஸிஸுரபிதவ பர்த்து: கர்ணமூலே பவாநி!!
ப்ரணவ பத விசேஷம் போத யாமாஸ தேவி
யதி மயி சக்ருபாதே ஸுப்ரபாதம் தம் பவேந்மே! 22

த்வம் விஸ்வநாதஸ்ய விஸாலநேத்ரா
ஹாலாஸ்ய நாதஸ்ய நுமீநநேத்ரா
ஏகாம்பர நாதஸ்ய நு காம நேத்ரா
காமேஸஜாயே குரு ஸுப்ரபாதம்!! 23

ஸ்ரீ சந்திர சேகர குரூர் பகவாந் ஸரண்யே
த்வத்பாத பக்திபரித: பல புஷ்ப பாணி!!
ஏகாம்ப்ர நாத தயிதே தவ தர்ஸநார்த்தீ
நிஷ்டத்யயம் யதிவரோ மமஸுப்ரபாதம் 24

ஏகாம்பரநாத தயிதேநநு காமபீடே
ஸம் பூஜிதாஸீ வரதே குரு ஸங்கரேண.!!
ஸ்ரீ ஸங்கராதி குருவர்ய ஸமார்ச்சி தாங்க்ரீம்
த்ரஷ்டும் ஸ்திதா: வயமயே குரு ஸுப்ரபாதம்!! 25

துரித ஸமந தக்ஷௌ ம்ருத்யு ஸந்த்ராஸ தக்ஷௌ
சரண முபகதாநாம் முக்திதௌ க்ஞாநதௌதௌ
அபய வரத ஹஸ்தௌ த்ரஷ்டுமம்!! பக்திதோஹம்
த்ரீபுர தனந ஜாயே ஸுப்ரபாதம் மமார்யே!! 26

மாதஸ் த்வதீய சரணம் ஹரிபத்மஜா த்யை:
வந்த்யம் ரதாங்க ஸரஸீருஹ-சங்க-சிஹ்நம்!!
த்ரஷ்டும் ச யோசிஜந, மாநஸ ராஜஹம்சம்
த்வாரி ஸ்திதோ(அ) ஸ்மி வரதே குரு
ஸுப்ரபாதம் 27

Koviloor Digital Library

பஸ்யந்து கேசித் வதநம் த்வதீயம்
ஸ்துவந்து கல்யாண குணாம்ஸ தவாந்யே:
நமந்து பாதாப்ஜ யுகம் த்வ தீயா:
த்வாரி ஸ்திதாநாம் குரு ஸுப்ரபாதம்!! 28

கேசித் ஸுமேரேன் ஸிகரே (அ) திதுங்கே
கேசித் மணித்வீபவரே விஸாலே!!
பஸ்யந்து கேசித் த்வரும்ரு தாப்தி மத்யே
பஸ்யாம்யஹம் த்வாம இஹஸுப்ரபாதம்!! 29

ஸம்போர் வாமாங்க ஸம்ஸ்தாம் ஸஸிநிப
வதநாம் நீல பத்மாய தாக்ஷிம்
ஸ்யாமாங்காம் சாருஹாஸாம் நி பிடதர குசாம்
பக்த பிம்பாதரோஷ்ட்டீம்! 30

காமாக்ஷீம் காமாத்ரீம் குடிலடபராம்
பூஷணைர் பூஷிதாங்கீம்;
பஸ்யாமஸ் ஸுப்ரபாதே ப்ரணத ஜநிமதாம்
அத்ய ந: ஸுப்ரபாதம்!! 31

காமப்ரதா கல்பதரூர் விபாஸி
நாந்யா கதிர்மே நநு சாதகோ (அ) ஹம்
ஷவர்யஸ்யமோக: கனகாம்புதாரா:
காஸ்சித்து தாரா: மயி கல்பயாசு 32

த்ரிலோசந ப்ரியாம் வந்தே வந்தே த்ரிபுரஸுந்தரீம்!
த்ரிலோக நாயிகாம்வந்தே ஸுப்ரபாதம்மமாம் பிகே!!
காமாக்ஷி தேவ்யம்ப தவார்த்ர த்ருஷ்டய
க்ரு தம் மயேதம் கலு, ஸுப்ரபாதம்
ஸத்ய: பலம் மே ஸுகமம்ப லப்தம்
ததா சமே துக்கதசா கதா ஹி!! 33

Koviloor Digital Library

பிரார்த்தனை

யே வா ப்ரபாதே புரதஸ் த்வாந்யே
படந்தி பக்த்யா நநு ஸுப்ரபாதம்!!
ஸ்ருண்வந்தி யே வார்வயி பக் தசித்தார்
தேஷாம் ப்ரபாதம் குரு ஸுப்ரபாதம்!! 35

ஸ்ரீ காமாக்ஷீ ஸ்தோத்ரம்

(ஸ்ரீ மதப்ரௌட-பக்தி-விரசிதம்)

காஞ்சி-நூபுர-ரத்னகங்கணலஸத்-
கேயூர ஹாரோஜ்ஜ்வலாம்
காச்மீராருண கஞ்சு காஞ்சிதகுசாம்
கஸ்தூரிகா-சர்ச்சிதாம்!
கஹ்லாராஞ்சித-ஹஸ்தயுக்மலஸிதாம்
காருண்ய-கல்லோலினீம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சீபுரீதேவதாம் 1

காமாராதி-மன:-ப்ரியாம்
கமலபூ-ஸேவ்யாம் ரமாராதிதாம்
கந்தர்ப்பாதிக -தர்ப்பதான விலஸத்-
ஸௌந்தர்ய-தீபாங்குராம்!
கீராலாப-விநோதினீம் பகவதீம்
காம்யப்ரதானவ்ரதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சீபுரீதேவதாம் 2

காதம்ப-ப்ரமதாம் விலாஸகமனாம்
கல்யாண-காஞ்சீ-ரவாம்
கல்யாணாசல-பாதபீடலஸிதாம்
காந்த்யா ஸ்புரந்தீம் சுபாம்!

Koviloor Digital Library

கல்யாணசல-கார்முகப்ரிய தமாம்
காதம்ப-மாலாச்ரயாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பவதிகாம்
காஞ்சீபுரீதேவதாம் 3

கந்தர்வாமர-ஸித்தசாரணவதூ-
த்யானாபதானாஞ்சிதாம்
கௌரீம் குங்கும-பங்க-பங்கித-குச
த்வந்த்வாபிராமம் சுபாம்!
கம்பீரஸ்மித-விப்ரமாஞ்சிதமுகீம்
கங்காதராலிங்கிதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சீபுரீதேவதாம் 4

விஷ்ணு-ப்ரஹ்ம-முகாமரே ந்த்ர-
பரிஷத்-கோடீர-பீடஸ்தலாம்
லாக்ஷாரஞ்ஜித-பாதபத்மயுகலாம்
ராகேந்துபிம்பானனாம்!
வேதாந்தாகம-வேதவேத்ய-சரிதாம்
வித்வஜ்ஜனை-ராவ்ருதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சீபுரீதேவதாம் 5

மாகந்தத்ரும-மூலதேசமஹிதே
மாணிக்யஸிஹ்மாஸனே
திவ்யாம் தீபித-ஹேமசாந்திவிலஸத்-
வஸ்த்ராவ்ருதாம் தரம் சுபாம்!
திவ்யாகல்பித-திவ்யதேஹபரிதாம்
த்ருஷ்டி-ப்ரமோதான்விதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சீபுரீ-தேவதாம் 6

Koviloor Digital Library

ஆதாராதி-ஸமஸ்த-சக்ரநிலயாம்
ஆத்யந்த-சூன்யா-முமாம்
ஆக்சாதி-ஸமஸ்தபூத-நிவஹா-
காரா-மசேஷாத்மிகாம்!
யோகீந்த்ரைரபி யோகினீசதகணை-
ராராதிதா-மம்பிகாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சீபுரீ-தேவதாம் 7

ஹ்ரீங்கார-ப்ராணவாத்மிகாம்
ப்ரணமதாம் ஸ்ரீதானவித்யாமயீம்
ஐம்-க்லீம்-ஸௌம் ருசிமந்த்ர-மூர்த்தி-
நிவஹாகாரா-மசேஷாத்மிகாம்!
ப்ரஹ்மானந்த-ரஸானுபூதி-மஹிதாம்
ப்ரஹ்ம-ப்ரியம்-வாதினீம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சீபுரீ-தேவதாம் 8

ஸித்தானந்த-ஜனஸ்ய சின்மய
ஸுகாகாராம் மயாயோகினீம்
மாயாம் விச்வ-விமோஹினீம் மதுமதீ-
த்யேயாம் சுபாம் ப்ராஹ்மணீம்
த்யேயாம் கிந்நர-ஸித்தசாரணவதூ-
த்யேயாம் ஸதா கோகிபி:
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சீபுரீ-தேவதாம் 9

காமாரிகாமாம் கமலாஸனஸ்தாம்
காம்யப்ரதாம் கங்கண-பூஷ-ஹஸ்தயம்!
காஞ்சீ-நிவாஸம் கனகப்ரபாஸாம்
காமாக்ஷிதேவீம் கலயாமி சித்தே 10

ஸ்ரீ மதப்ரௌட-பக்த-விரசிதம் காமாக்ஷீ
ஸ்தோத்ரம்-ஸம்பூரணம்.

Koviloor Digital Library

மஹாகவி ஸ்ரீ மூககவி அருளிய ஸ்ரீ காமாக்ஷீ ஸ்தோத்ரம்

பாண்டித்யம் பரமேச்வரி ஸ்துதி-
விதௌ நைவாச்ரயந்தே கிராம்
வைரிஞ்சான்யபி கும்பனானி
விகலத்-கர்வாணி சர்வாணிதே!
ஸ்தோதும் த்வாம் பரிபுல்ல-
நீல-நலின-ச்யாமாக்ஷி காமாக்ஷிமாம்
வாசாலீ குருதே ததாபி
நிதராம் த்வத்பாத-ஸேவாத்ர: 1

தாபிஞ்ச-ஸ்தபக-த்விஷே
தனுப்ருதாம் தாரித்ர்ய-முத்ரா-த்விஷே
ஸம்ஸாராக்ய-தமோமுஷே
புரரிபோர்-வாமாங்க-ஸீமாஜுஷே!
கம்பாதீர-முபேயுஷே கவயதாம்
ஜிஹ்வாகுடீம் ஜம்முஷே
விச்வத்ராண-புஷே நமோ ஸ்து
ஸததம் தஸ்மை பரம் ஜயோதிஷே 2

யே ஸந்த்யாருணயந்தி சங்கர-
ஜடா-காந்தார-சந்த்ரார்ப்பகம்
ஸிந்தூரந்தி சயே புரந்தரவ தூ!
ஸீமந்த-ஸீமாந்தரே!
புண்யம் யே பரிபக்வயந்தி
பஜதாம் காஞ்சீபுரே மாமமீ
பாயாஸீ: பரமேச்வர-
ப்ரணயினீ-பாதோத்பவா: பாம்ஸவ: 3.

காமாடம்பர-பூரயா சசிருசா
கம்ர-ஸ்மிதானாம் த்விஷா

Koviloor Digital Library

காமாரே-ரனுராக-ஸிந்து-
மதிகம் கல்லோலிதம் தன்வதீ!
காமாக்ஷீதி ஸமஸ்த-ஸஜ்ஜன-நுதா
கல்யாண-தாத்ரீ-ந்ருணாம்
காருண்யாகுல-மானஸாபகவதீ
கம்பாதடே ஜ்ரும்பதே 4

காமாக்ஷீண-பராக்ரம-ப்ரகடனம்
ஸம்பாவயந்தீ த்ருசா
ச்யாமா க்ஷீரஸஹோதர-
ஸ்மிதருசி-ப்ரக்ஷாலிதாசாந்தரா!
வாமாக்ஷீஜன-மௌலிபூஷண-
மணிர்-வாசாம் பரா தேவதா
காமாக்ஷீதி விபாதி காபி
கருணா கம்பா தடின்யா-ஸ்தடே 5

ச்யாமா காசன சந்த்ரிகா
த்ரிபுவனே புண்யாத்மனா-மானனே
ஸீமாசூன்யகவித்வ-வர்ஷ
ஜனனீ யா காபி காதம்பினீ!
மாராராதிமனோ-விமோஹன-
விதௌ காசித்தம: கந்தலீ
க: மாக்ஷ்யா: கருணா கடாக்ஷ-
லஹரீ காமாய மே கல்பதாம் 6

யஸ்யா: வாடீ ஹ்ருதயகமலம்
கௌஸுமீ யோகபாஜாம்
யஸ்யா: பீட ஸதத-சிசிரா
சீகரைர்-மாகரந்தை:
யஸ்யா: பேடீ ச்ருதி-பரிசலன்-
மௌலிரத்னஸ்ய காஞ்சீ
ஸா மே ஸோமாபரண-மஹிஷீ
ஸாதயேத் காங்க்ஷிதானி
ஏகா மாதா ஸகலஜகதா- 7

Koviloor Digital Library

பேயுஷீ த்யான-முத்ரா-
மேகாம்ராதீச்வர-சரணயோ-
ரேகதானா ஸமிந்தே!
தாடங்கோத்யன்-மணிகண-
ருசா தாம்ரகர்ண-ப்ரதேசா
தாருண்யஸ்ரீ-ஸ்தபகிதருசா
தாபஸீ காபி பாலா 8

த்வமேவ ஸதி சண்டிகா
த்வமிஹ தேவி சாமுண்டிகா
த்வமேவ பரமாத்ருகா
த்வமபி யோகினீ-ரூபிணீ!
த்வமேவ சில சாம்பவீ
த்வமபி காமகோடீ ஜயா
த்வமேவ விஜயா த்வயி
த்ரிஜகதம்ப கிம் ப்ரூமஹே 9

ஸ்ரீ காமாக்ஷீ ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

Keviloor Digital Library

ஸ்ரீ ஆதி சங்கரர் அருளிய

கனகதாரா ஸ்தோத்ரம்

(இந்த ஸ்தோத்திரத்தை அனுதினமும் பாராயணம் செய்தால் ஐச்வரியம் பெருகும். ஸ்ரீ ஆதிசங்கரர் இதைப் பாடிய போது பொன்மாரியே பொழிந்தது)

அங்கம்ஹரே: புலகபூஷண மாச்ரயந்தீ
ப்ருங்காங்கனேவ முகுலாபரணம் தமாலம்!
அங்கீக்ருதாகில-விபூதி-ரபாங்கலீலா
மாங்கல்யதாஸ்து மம மங்கலதேவதாயா; 1

முக்தா முஹுர்-விதததீ வதனே முராரே;
ப்ரேம-த்ரபா-ப்ரணிஹிதானி கதாகதானி
மாலா த்ருசோர் மதுகரீவ மஹோத்பலே யா
ஸா மே ச்ரியம் திசது ஸாகர-ஸம்பவாயா: 2

விச்வாமரேந்த்ர-பத்வீப்ரம-தான-தக்ஷ-
மானந்த-ஹேது-ரதிகம் முரவித்விஷோபி !
ஈஷந்நிஷீதது மயி க்ஷண-மீக்ஷணார்த்த-
மிந்தீவரோதர-ஸஹோதர-மிந்திராயா: 3
ஆமீலிதாக்ஷ-மதிகம்ய முதா முகுந்த-
மானந்தகந்த-மநிமேஷ-மனங்க-தந்த்ரம்!
ஆகேகர-ஸ்தித-கநீநிக-பக்ஷ்மநேத்ரம்
பூத்யை பவேன் மம் புஜங்கசயாங்கனாயா: 4

பாஹ்வந்தரே மதுஜித: ச்ரிதகௌஸ்துபே யா
ஹாராவலீவ ஹரிநீலமயி விபாதி!
காமப்ரதா பகவதோ பி கடாக்ஷமாலா
கல்யாண-மாவஹது மே கமலாலயாயா: 5

காலாம்புதாலி-லலிதோரஸி கைடபாரே:
தாராதரே ஸ்புரதி யா தடிதங்கனேவ!
மாதுஸ்ஸமஸ்த-ஜகதாம் மஹனீய-மூர்த்திர்
பத்ராணி மே திசது பார்க்கவ-நந்த னாயா. 6

Koviloor Digital Library

ப்ராப்தம் பதம் ப்ரமத: கலு யத்ப்ர பாவாத்
மாங்கல்ய-பாஜி மது-மாதினி மன்மதேன
மய்யாபதேத்ததிஹ மந்தர மீக்ஷணார்த்தம்
மந்தாலஸஞ்ச மகராலய-கன்யகாயா: 7

தத்யாத்யானுபவனோ த்ரவிணாம்பு-தாரா-
மஸ்மிந்நகிஞ்சன-விஹங்க-சிசௌ விஷண்ணே!
துஷ்கர்ம-தர்ம-மபநீய சிராய தூரம்
நாராயண-ப்ரணயணீ-நயனாம்புவாஹ: 8

இஷ்டாவிசிஷ்ட-மதயோ பி யயாதயார்த்ர
த்ருஷ்ட்யா த்ரிவிஷ்டப-பதம் ஸுலபம் லபந்தே!
த்ருஷ்டி: ப்ரஹ்ருஷ்ட-கமலோதர-தீப்திரிஷ்டாம்
புஷ்டிம் க்ருஷீஷ்ட மம புஷ்கர-விஷ்ட ராயா: 9

கீர்தேவதேதி கருடத்வஜ்-ஸுந்தரீதி
சாகம்பரீதி சசிசேகர-வல்லபேதி!
ஸ்ருஷ்டி-ஸ்திதி-ப்ரலய-கேலிஷு ஸம்ஸ்திதாயை
தஸ்யை நமஸ்த்ரிபுவனைக-குரோஸ்த ருண்யை 10

ச்ருத்யை நமோ ஸ்து சுபகர்ம-பலப்ரஸூத்யை
ரத்யை நமோ ஸ்து ரமணீய-குணார்ணவாயை!
சக்த்யை நமோ ஸ்து சதபத்ர-நிகேதனாயை
புஷ்ட்யை நமோ ஸ்து புருஷோத்தம-வல்லபாயை 11

நமோ ஸ்து நாலீக-நிபானனாயை
நமோ ஸ்து துக்தோததி-ஜன்ம-பூம்யை!
நமோ ஸ்து ஸோமாம்ருத-ஸோதராயை
நமோ ஸ்து நாராயண-வல்லபாயை 12

நமோ ஸ்து ஹேமாம்புஜ-பீடிகாயை
நமோ ஸ்துபூ மண்டல-நாயிகாயை
நமோ ஸ்து தேவாதி-தயாபராயை
நமோ ஸ்து சார்ங்காயுத-வல்லபாயை 13

நமோ ஸ்து தேவ்யை ப்ருகு-நந்தனாயை
நமோ ஸ்து விஷ்ணோருரஸி ஸ்திதாயை
நமோ ஸ்து லக்ஷ்ம்யை கமலாலயாயை
நமோ ஸ்து தாமோதர-வல்லபாயை 14

Koviloor Digital Library

நமோஸ்து காந்த்யை கமலேக்ஷணாயை
நமோஸ்து பூத்யை புவனப்ரஸூத்யை!
நமோஸ்து தேவாதிபிராச்சிதாயை
நமோஸ்து நந்தாத்மஜ-வல்லபாயை 15

ஸம்பத்கராணி ஸகலேந்த்ரிய-நந்தனானி
ஸாம்ராஜ்யதான-விபவானி ஸரோரு ஹாணி!
த்வத்வந்தனானி துரிதாஹரணோத்யதானி
மாமேவ மாத-ரநிசம் கலயந்து மான்யே 16

ஸரஸிஜநிலயே ஸரோஜஹஸ்தே
தவலதராம்சுக-கந்தமால்யசோபே!
பகவதி ஹரிவல்லபே மனோஜ்ஞே
த்ரிபுவன-பூதிகரி ப்ரஸீத மஹ்யம் 17

யத்கடாக்ஷ-ஸமுபாஸனாவிதி:
ஸேவகஸ்ய ஸகலார்த்த-ஸம்பத:
ஸந்தனோதி வசனாங்க-மானஸைஸ்-
தவாம் முராரி-ஹ்ருதயேச்வரீம் பஜே 18

திக்தஸ்திபி-கனககும்ப-முகாவஸ்ருஷ்ட-
ஸ்வர்வாஹனீ-விமல-சாரு-ஜலாப்லு தாங்கீம்
ப்ராதர்-நமாமி ஜகதாம் ஜனனீ-மசேஷ-
லோகாதிநாத-க்ருஹிணீ-மம்ருதாப்தி-புத்ரீம் 19

கமலே கமலாக்ஷ-வல்லபே த்வம்
கருணாபூர-தரங்கிதை-ரபாங்கை:!
அவலோகய மாமகிஞ்சனானாம்
ப்ரதமம் பாக்ர-மக்ருதரிமம் தயாயா: 20

ஸ்துவந்தி யே ஸ்துதிபி-ரமீபி:ரன்வஹம்!
த்ரயீமயீம் த்ரிபுவன! மாதரம் ரமாம்!
குணாதிகா-குருதர-பாக்ய-பாகினோ
பவந்தி தே புவி புதபாவிதாசயா
இதி ஸ்ரீ சங்கரபகவத: க்ருதௌ
ஸ்ரீகனகதாராஸ்தோத்ரம்
ஸம்பூரணம்.

Koviloor Digital Library

ஸ்ரீ காமாக்ஷி அஷ்டோத்ரம்

(முதலில் ஓம் என்றும் முடிவில் நம: என்றும் சேர்த்து வாசிக்கவும்)

கால கண்ட்யை
த்ரிபுராயை
பாலாயை
மாயாயை
த்ரிபுரஸுந்தர்யை
ஸுந்தர்யை
ஸௌபாக்ய வத்யை
க்லீம் கார்யை
ஸ்ர்வ மங்காளாயை
ஐம் கார்யை
ஸ்கந்த ஜனன்யை
பராயை 12
பஞ்சதசக்ஷர்யை (சாயை)
த்ரைரோகயமோஹனாதீ
ஸர்வாசாபூர வல்லபாயை
ஸர்வ ஸம்க்ஷோபண
தீசாயை 16
ஸர்வஸௌபாக்யவல்ல
பாயை
ஸர்வார்த்த யாத காதீ
சாயை
ஸர்வ ரக்ஷாகராதிபாயை
ஸர்வ ரோக ஹராதீ
சாயை 20
ஸர்வ ஸித்திப்ரதாதிபாயை
ஸர்வானந்த மயாத் சாயை
யோகினீ சக்ர நாபிகாயை
பக்தானு ரக்தாயை 22
ரக்தாங்க்யை
சங்கரார்த்த சரீரண்யை
புஷ்ப பரணேக்ஷு கோதண்ட
பாசாங்குச கராயை
தண்ட பாசாங்குச கராயை
உஜ்வலாயை 28
ஸச்சிதானந்த லஹறாயை
ஸ்ரீவித்யாயை
பரமேச்வர்யை
அநங்க குஸுகாத்யானாயை
சக்ரேச்வர்யை
குப்தாயை
குப்தத்ராயை 36
நித்யாயை
நித்யக்லின்னாயை
மதத்ரதாயை
மோஹின்யை 40
பரமானந்தாயை
காமேச்யை
தருணீ கலாயை
கலா வத்யை
பகவத்யை
பத்மராக கிரீடாயை
ரத்த வஸ்த் ராயை
ரக்த பூஷாயை 48
ரக்த கந்தானுலேபனாயை
ஸௌகந்திகலஸத்வேன்யை
மந்த்ரிண்யை
தந்த்ர ரூபிண்யை
தத்வமய்யை

Koviloor Digital Library

ஸித்தாந்த புரவாஸின்யை
ஸ்ரீமத்யை
சின் மய்யை
தேவ்ரை
கௌரிண்யை
பரதேவ தாயை
கைவல்ய ரேகாயை 60
வான்யை
ஸர்வ வேச்வாயை
ஸர்வ மாத்ருகாயை
விஷ்ணு ஸவஸ்ரே 64
வேதமய்யை
ஸர்வ ஸம்பத்ரதாயிசாயை
கிங்கரீ பூதகீர்வாண்யை
ஸுதாவாபீ விநோதின்யை
மணிபர ஸமாஸீனாயை
அநாவஹ்தாப்ஜ வாஸின்யை
விசுத்தி சக்ர நிலயாயை
ஆக்ஞாபத்ம நிவாஸின்யை
72
அஷ்டத்ரிம்சத்லா மூர்த்யை
ஸுஷும்னாத்வாரமத்யகாயை
யோகீச்வர
மனோத்யேயாயை 70
பரப்ரும்மஸ்வரூபிண்யை
சதுர் புஜாயை
சந்த்ர சூடாயை
புராணா காமரூபிண்யை
ஓங்கார்யை 80
விமலாயை
வித்தாயை
பஞ்ச ப்ரணவ ரூபிண்யை

பூதேச்வர்யை
பூதமய்யை
பஞ்சாசத் பீடரூபிண்யை
ஷோடாண்யாஸ மஹா
ரூபிண்யை 88
காமாக்ஷயை
தசமாத்ரு காயை
ஆதார சக்தியை
அருணாயை
லக்ஷ்மியை 92
த்ரிபுர பைரவ்யை
ரஹ: பூஹகஸமாலோ
லாயை
ரஹோயந்த்ர
ஸ்வரூபிண்யை 96
த்ரிகோண மத்ய நிலயாயை
பிந்து மண்டல
வாஸிண்யை
வஸுகோண
புரவோஸாயை
தசாரத்வய வாஸிண்யை
சதுர்தசார சக்ரஸ்தாயை
100
வஸுபத்ம நிவாஸின்யை
ஸ்வராப்ஜக்ர நிலயாயை
வருத்த தரய வாஸிண்யை
சதுரஸ்ர ஸ்வரூபாண்யை
நவசக்ர ஸ்வரூபிண்யை
மஹா நித்யாயை
விஜயாயை
ஸ்ரீராஜ ராஜேச்வர்யை
ஸ்ரீ காமாக்ஷீயை

நாநாவித பத்ர பூஷ்பாணி ஸமர்பயாமி

Koviloor Digital Library

விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

ஓம் சக்தி

ஸ்ரீ காமாட்சியம்மன் விருத்தம்

த்யானம்

ஸ்மர விஜயகோடீ ஸாதகா நந்ததாடீ
ம்ருதுகுணபரிபேடீ முக்யகா தம்ப வாடீ
முநி நுதபரிபாடீ மோஹி தாஜாண்ட கோடீ
பரமசிவவ தூடீ பாதுமாம் காமகோடீ!!
ஜெய ஜெய ஜகதம்பிகே சிவே
ஜெய ஜெய காமாக்ஷி.

ஆசிரிய விருத்தம்

சுந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி
சோதியாய் நின்ற உமையே,
சுக்கிர வாரத்திலுனை கண்டு தரிசித்தவர்கள்
துன்பத்தை நீக்கி விடுவாய்,
சிந்தைதனிலுன் பாதந் தன்னையே தொழுபவர்கள்
துயரத்தை மாற்றி விடுவாய்,
ஜெகமெலா முன் மாய்கை புகழவென்னா லாமோ
சிறியனால் முடிந்திடாது.
சொந்தவுன் மைந்தனா யெந்தனை யிரட்சிக்கச்
சிறிய கடன் உன்னதம்மா,
சிவசிவ மகேஸ்வரி பரமனிட யீஸ்வரி
சிரோமணி மனோன் மணியுநீ,

Koviloor Digital Library

அந்தரி துரந்தரி நிரந்தரி பரம்பரி
யனாத ரட்சகியும் நீயே,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 1

பத்துவிரல் மோதிரம் எத்தனை பிரகாசமது
பாட கந் தண்டை கொலுசும்,
பச்சை வைடூரியம் மிச்சையா இழைத்திட்ட
பாதச் சிலம்பினொலியும்,
முத்து மூக்குத்தியும் ரத்தினப் பதக்கமும்
மோகன மாலை யழகும்,
முழுதும் வைடூரியம் புஷ்பரா கத்தினால்
முடிந்திட்ட தாலி யழகும்,
சுத்தமாயிருக்கின்ற காதினிற் கம்மலுஞ்
செங்கையிற் பொன் கங்கணமும்
ஜெகமெலாம் விலைபெற்ற முகமெலா மொளியுற்ற
சிறுகாது கொப்பினழகும்
அத்திவரதன் தங்கை சக்தி சிவரூபத்தை
யடியனாற் சொல்ல திறமோ
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 2

கெதியாக வுந்தனைக் கொண்டாடி நினதுமுன்
குறைகளைச் சொல்லி நின்றும்,
கொடுமையா யென்மீதில் வறுமையை வைத்து நீ
குழப்பமா யிருப்பதேனோ,
சதிகாரியென்று நானறியாம லுந்தனைச்
சதமாக நம்பினேனே,
சற்றாகிலும் மனது வைத்தென்னை ரட்சிக்க
சாதக முனக் கில்லையோ?
மதிபோல வொளியுற்ற புகழ்நெடுங் கரமுடைய
மதகஜனை யீன்ற தாயே,

Koviloor Digital Library

மாயனிட தங்கையே பரமனது மங்கையே
மயானத்தில் நின்ற வுமையே
அதிகாரி யென்றுநா னாசையால் நம்பினேன்
அன்பு வைத்தென்னை யாள் வாய்,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 3

பூமியுற் பிள்ளையாய்ப் பிறந்தும் வளர்ந்துநான்
பேரான ஸ்தலமு மறியேன்,
பெரியோர்கள் தரிசன மொருநாளும் கண்டுநான்
போற்றிக் கொண்டாடி யறியேன்
வாமி யென்றுன்னைச் சிவகாமி யென்றே சொல்லி,
வாயினாற் பாடியறியேன்.
மாதா பிதாவினது பாதத்தை நானுமே
வணங்கியொரு நாளுமறியேன்,
சாமியென்றே யெண்ணிச் சதுருடன் கைகூப்பிச்
சரணங்கள் செய்து மறியேன்,
சற்குருவின் பாதார விந்தங்களைக் கண்டு
சாஷ்டாங்க தெண்டனிட்டறியேன்,
ஆமிந்த பூமியிலடியனைப் போல் மூடன்
ஆச்சிநீ கண்ட துண்டோ,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும
அம்மை காமாட்சி யுமையே. 4

பெற்றதா யென்றுன்னை மெத்தவும் நம்பிநான்
பிரியமா யிருந்தே னம்மா
பித்தலாட்டக் காரியென்று நானறியாது உன்
புருஷனை மறந்தே னம்மா,
பத்தனாயிருந்து உன் சித்தமும் இரங்காமல்
பாராமுகம் பார்த்திருந்தால்,
பாலன் யானெப்படி விசனமில் லாமலே
பாங்குட னிருப்பதம்மா

Koviloor Digital Library

இத்தனை மோசங்க ளாகாது ஆகாது
இது தர்மமல்லவம்மா,
எந்தனை ரக்ஷிக்க சிந்தனை களில்லையோ
யிது நீதி யல்ல வம்மா
அத்தி முகனாசையா லிப்புத்திரனை மறந்தையோ
அதை யெனக்கருள் புரிகுவாய்,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 5

மாயவன் தங்கை நீ மரகத வல்லிநீ
மணிமந்திர காரிநீயே
மாயாசொ ரூபிநீ மகேஸ்வரியு மானநீ
மலையரை யன்மக ளானநீ
தாயே மீனாட்சிநீ சற்குண வல்லிநீ
தயாநிதி விசாலாட்சிநீ
தரணியில் பெயர் பெற்ற பெரிய நாயகியும்நீ
சரவணன் யீன்ற வளும்நீ
பேய்களுடனாடிநீ அத்தனிட பாகமதில்
பேறுபெற வளர்ந்த வளும்நீ,
பிரணவசொரூபிநீ பிரசன்ன வல்லிநீ
பிரியவுண் ணாமுலையுநீ
ஆயிமகமாயிநீ ஆனந்தவல்லிநீ
அகிலாண்டேஸ்வரி நீயே:
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 6

பொல்லாத பிள்ளையாய் இருந்தாலும் பெற்றதாய்
புத்திகளைச் சொல்லவில்லையோ,
பேய்பிள்ளை யானாலும் தான் பெற்ற பிள்ளையை
பிரியமாய் வளர்க்க வில்லையோ,
கல்லாகிலும் மூச்சு நில்லாமல் வாய் விட்டுக்
கதறி நானழுத குரலில்,

Koviloor Digital Library

கடுகதனிலெட்டிலொரு கூறுவதி லாகிலுன்
காதி னில் நுழைந்த தில்லையோ,
இல்லாத வன் மங்களென் மீதிலேனம்மா
இனி விடுவதில்லை சும்மா
இருவரும் மடிபிடித்துத் தெருதனில் வீழ்வது
இதுதரும மல்ல வம்மா,
எல்லாரு முன்னையே சொல்லியே யேசுவார்
அது நீதியல்ல வம்மா,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 7

முன்னையோர் ஜென்மாந்திர மேனென்ன பாவங்கள்
மூடனான் செய்தேனம்மா
மெய்யென்று பொய்சொல்லி கைதனிற்
பொருள்தட்டி
மோசங்கள் பண்ணினேனோ,
என்னமோ தெரியாது இக்கணந் தன்னிலே
இக்கட்டு வந்ததம்மா
ஏழைநான் செய்தபிழை தாய்பொறுத்தருள் தந்து
என்கவலை தீரு மம்மா,
சின்னங்களாகுது ஜெயமில்லையோ தாயே
சிறுநாண மாகுதம்மா,
சிந்தனைகளென்மீதில் வைத்து நற்பாக்கியமருள்
சிவசக்தி காமாட்சிநீ
அன்னவாகனமேறி யானந்தமாகவுன்
அடியேன் முன்வந்து நிற்பாய்,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 8

எந்தனைப் போலவே ஜெனன மெடுத்தார்கள்
இன்பமாய் வாழ்ந் திருக்க,
யான் செய்த பாவமோ யித்தனை வறுமையினுள்
உன்னடியேன் தவிப்பதம்மா,

Koviloor Digital Library

உன்னையே துணையென் றுறுதியாய் நம்பினேன்
உன் பாதஞ் சாட்சியாக
உன்னையன்றி வேறுதுணை யினியாரை
யுங்காணேன்
உலகந்தனி லெந்தனுக்கு,
பின்னை யொன்றெண்ணி நீ சொல்லாம
லென்வறுமை
போக்கடித் தென்னைரட்சி,
பூலோக மெச்சவே பாலன் மார்க்கண்டன்போல்
பிரியமாய்க் காத்திடம்மா,
அன்னையே யின்னமுன்ன டியோனை ரட்சிக்க
அட்டி செய்யா தேயம்மா,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 9

பாரதனிலுள்ளவும் பாக்கியதோடென்னைப்
பாங்குட னிரட்சிக்கவும்
பக்தியாய் உன்பாதம் நித்தந் தரிசித்த
பாலருக் கருள் புரியவும்,
சீர்பெற்ற தேகத்தில் சிறுபிணிகள் வாராமல்
செங்கலியனணு காமலும்,
சேயனிட பாக்கியஞ் செல்வங்களைத் தந்து
ஜெயம் பெற்று வாழ்ந்து வரவும்,
பேர்பெற்ற காலனைப் பின்தொடர வொட்டாமற்
பிரியமாய்க் காத்திடம்மா
பிரியமாயுன்மீதில் சிறியனான் சொன்னகவி
பிழைகளைப் பொறுத்து ரட்சி,
ஆறதனில் மணல் குவித்தரிய பூசை செய்தவென்
னம்மையேகாம்பரி நீயே,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 10

Koviloor Digital Library

எத்தனை ஜெனனம் எடுத்தேனோ தெரியாது
இப்பூமி தன்னிலம்மா,
இனியாகிலும் கிருபை வைத்தென்னை ரட்சியும்
இனி ஜெனன மெடுத் திடாமல்,
முத்திதர வேணுமென்று உன்னையே தொழுதுநான்
முக்காலும் நம்பினேனே,
முன்பின்னுந் தோணாத மனிதரைப் போலநீ
முழித்திருக் காதே யம்மா,
வெற்றி பெறவுன்மீதில் பக்தியாய் நான் சொன்ன
விருத்தங்கள் பதினொன்றையும்,
விருப்பமாய்க் கேட்டு நீயளித்திடுஞ் செல்வத்தை
விமலனா ரேசப் போறார்,
அத்தனிட பாகமதை விட்டு வந்தேயென்
அருங்குறை யைத்தீரு மம்மா,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 11

Koviloor Digital Library

ஸ்ரீ காமாட்சி அம்பாள் அகவல்

(வேண்டற் பகுதி)

ஓம் நமோ பகவதி உத்தமி கௌரி
சாம்பவி மனோன்மணி சங்கரி பயங்கரி
வெண்டலை மாலை விமலி என்தோளி
பஞ்சாட் சரத்தி பரபிரம்ம சொரூபி
எஞ்சாக் கரத்தி இன்பத்தாண்டவி
பிரணவ சொரூபம் பெற்றிடும் வீரி
சரணாம் புயத்தி சர்வசம்ஹாரி
தத்துவப் பொருளாய் தழைத்த நன்மணி
அத்தி முகவனை அளித்த கண்மணி
சிறுவிதி மகவாய்ச் சிறந்த சிவமணி

ஒரு தனி முதலாய் ஓங்கும் தவமணி
வரை மகளெனவே வளர்ந்த நவமணி
பரையென நாமம் பகர்ந்தவள் பவப்பிணி
அகற்றி ஆட்கொள்ளும் அற்புத ஒளியே
சிவசிவ சிவசிவ சிவசங்கரியே
நவ வடிவான நாராயணியே
ஆதி அநாதியும் அந்தமும் நீயே
சோதி சுடராய்ச் சூழ்ந்தவள் நீயே
எந்தை தாயுமாய்த் தழைத்தவள் நீயே
தடை பிங்கலையில் இருப்பவள் நீயே

கடை சுழு முனையில் கலப்பவள் நீயே
முச்சுடராகி முளைத்தவள் நீயே
உச்சிக்கு வெளியில் உலவுவள் நீயே
மூலத்தில் நின்ற முதல்வியும் நீயே
ஜாலங்கள் புரியும் சமர்த்தியும் நீயே
ஓரேழுத்தான ஒளிவெளி நீயே

Koviloor Digital Library

ஈரெழுத்தான ஈஸ்வரி நீயே
மூவெழுத்தான முக்கண்ணி நீயே
நாலெழுத்தான நாயகி நீயே
அஞ்செழுத்தான அம்மணி நீயே.

பஞ்ச கிருத்தியும் படைத்தவள் நீயே
ஐவராம் கர்த்தருக்(கு) அன்னையும் நீயே
ஐயாறு மூவேழ் அட்சரி நீயே
அருவுருவான அற்புதம் நீயே
குருவாய் விளங்கும் கோலமும் நீயே
சின்மயமாகச் செறிந்தவள் நீயே
தன்மயமாக தளித்தவள் நீயே
வேதாந்தமான விளையும் நீயே
நாதாந்தமான நவரசம் நீயே
வேற்றுமை இல்லா வித்தகி நீயே

நாற்பத்து முக்கோண நாயகி நீயே
அரனொடு அரியாய் அமர்ந்தவள் நீயே
பரனொடு பரையாய் பதிந்தவள் நீயே
மோன பாத்திர முடிவும் நீயே
ஞான க்ஷேத்திர நவநிதி நீயே
நடுநிலையான நாயகம் நீயே
கொடுவினை மாற்றும் குண்டலி நீயே
சுத்த சிவத்தில் ஜொலித்தவள் நீயே
சக்தி சிவமாய் சார்ந்தவள் நீயே
சுகசொரூபச் சூட்சியும் நீயே

அகண்ட பூரணம் ஆனவள் நீயே
வேலனை ஈன்ற விளக்கொளி நீயே
வாலைத் திருமகள் வாணியும் நீயே
கன்னிகை யாம்சிவ காமியும் நீயே
அன்னை யாம்வடி வம்மையும் நீயே

Koviloor Digital Library

ஆட்சி நீலாய தாட்சியும் நீயே
சூட்சி சிவகமலாட்சியும் நீயே
நாரணியாம் விசாலாட்சியும் நீயே
ஆரணியாம் மீனாட்சியும் நீயே
கன்னிகள் பத்ர காளியும் நீயே
மன்னும் துர்க்கை மாரியும் நீயே.

எந்திர வித்தைகள் எல்லாம் நீயே
மந்திர சொரூப மௌலியும் நீயே
மாய குண்டலி மனோன்மணி நீயே
ஆயிர நாமம் ஆனவள் நீயே
அனந்த வடிவாய் அமைந்தவள் நீயே
மனவாக் கடங்கா மகமாயி நீயே
சர்வ சம்மார சக்தியும் நீயே
சர்வ அனுக்கிரக சமர்த்தியும் நீயே
எண்ணுமனதில் இருப்பவள் நீயே

மண்ணுயிர்க் குயிராய் மருவிய தாயே
அகிலாண்டவல்லி அம்பிகையாளே
மகிமை சேர் கச்சி மாநகராளே
கனகம் பொழிதிருக்காம கோட்டத்தி
ஓங்கார கோணத் தொளிர் பத்மா சனத்தி
நீங்காத நீலநிறத்தி சதர் புஜத்தி
காண ரும்பிலகாச பிடத்தி கன்னி
சேனுயர் துவஜ சீகரகோ புரத்தி
தகவுறு தர்மசந் தானஸம் புத்தி.

திகழறத்தி, பஞ்ச தீர்த்தபூதத்தி
வெற்றித் தம்பம் விளங்கு ஆலயத்தி
பற்றற்றவர் பணி சொற்ப தத்தி
தலம்புகழ் சங்கார சாரியரென்னும்
வலம் புரிந்தேத்தி வண்மையோ யின்னும்

Koviloor Digital Library

ஒருபுடை மருவ உளம்மகிழ நீலி
திருமகள் கலைமகள் தினந்தொழு சூலி
காமக்கன்னி கௌரி கமலாட்சி
தாமதமின்றி தந்தருள் காட்சி
ஆதரவின்றி அம்மணி வுன்றன்
பாத கமலம் பணிந்தனன் என்றன்
வேதனை தீர்த்திவ் வேளை வந்(து) ஆதரி
மாதரி வீரி மயான ருத்ரி
சகலருள் போற்றி சந்தோஷ முற்றுச்
சகல சித்தியும், சத்தியும் பெற்று
பக்குவமாக நின் பதமலர் போற்றிடச்
சக்ரேஸ்வரியே சந்ததம் காப்பாய்
போற்றி போற்றி பொன்னடி போற்றி
ஏத்தி ஏத்தி இறையடி தொழுவாம்
காத்தருள் வாயே காமாக்ஷித்தாயே.

Koyiloor Digital Library

ஸ்ரீகாமாட்சி போற்றி 108

1. ஓம் அகிலாண்டவல்லியே போற்றி
2. ஓம் ஆம்ரவன நாயகியே போற்றி
3. ஓம் இமவானின் மகளே போற்றி
4. ஓம் ஈசனின் துணையே போற்றி
5. ஓம் உலகாளும் உமையே போற்றி
6. ஓம் ஊசிமுனையில் நின்றவேள போற்றி
7. ஓம் எங்கும் நிறைந்த சக்தியே போற்றி
8. ஓம் ஏகம்பனை மணந்தாய் போற்றி
9. ஓம் ஐந்தணலில் தவம் செய்த அன்னையே போற்றி
10. ஓம் ஒற்றை மாவடியில் காட்சி தந்தாய் போற்றி
11. ஓம் ஓம் காரத்தில் உறையும் உயிரே போற்றி
12. ஓம் ஔடதம் போன்றவளே போற்றி
13. ஓம் கருணையின் வடிவே போற்றி
14. ஓம் கவலைகள் போக்கிடும் காந்திமதியே போற்றி
15. ஓம் கபாலி மனமகிழ் கற்பகமே போற்றி
16. ஓம் கந்தனின் அன்னையே போற்றி
17. ஓம் கரும்பு வில்லேந்திய காமாட்சியே போற்றி
18. ஓம் காமேசன் மனமகிழ் காமரூபிணி போற்றி
19. ஓம் காமனின் தொழிலை ஏற்றாய் போற்றி
20. ஓம் கிளியினை கையில் ஏந்தினாய் போற்றி
21. ஓம் மங்கள ரூபிணி போற்றி
22. ஓம் மலயத்வஜன் மகளே போற்றி
23. ஓம் மரகதவல்லியே போற்றி
24. ஓம் மகிஷனை யழித்த மாதேவி போற்றி
25. ஓம் மங்களம் தந்திடும் மாணிக்கமே போற்றி
26. ஓம் மணமுள்ள மலர்களை விரும்புமாய் போற்றி
27. ஓம் மதுரை நகர் வாழ் மீனாட்சியே போற்றி

Koviloor Digital Library

28. ஓம் மாதுளம் பூநிறத்தினாய் போற்றி
29. ஓம் மாயாதேவி போற்றி
30. ஓம் மாயப்பிறப்பறுக்கும் மாதாவே போற்றி
31. ஓம் மாசில்லா மணியே போற்றி
32. ஓம் மஹாசக்தியே போற்றி
33. ஓம் மஹேஸ்வரனின் சக்தியே போற்றி
34. ஓம் மஹாலக்ஷிமியே போற்றி
35. ஓம் மங்காத செல்வத்தை யளிப்பாய் போற்றி
36. ஓம் சக்ரவாசினி போற்றி
37. ஓம் சகலலோக சாம்பவியே போற்றி
38. ஓம் சிவ விஷ்ணு வடிவே போற்றி
39. ஓம் சிந்தாமணிக் கிரஹத்தில் அமர்ந்தாய் போற்றி
40. ஓம் செந்நிறக் குங்குமத்தில் வாழ்பவளே போற்றி
41. ஓம் சுகம் யாவும் தந்தருளும் சுந்தரியே போற்றி
42. ஓம் ஞானத்தின் அரசியே போற்றி
43. ஓம் ஞாயிறும் திங்களும் நயனங்களில் பெற்றாய் போற்றி
44. ஓம் ஞான சம்பந்தருக்கு அமுதூட்டினாய் போற்றி
45. ஓம் ஞானத்தை வழங்கும் ஞானாம்பிகையே போற்றி
46. ஓம் பாசாங்குச மாதாவே போற்றி
47. ஓம் பராசக்தியே போற்றி
48. ஓம் பாபநாசினியே போற்றி
49. ஓம் பாபம் நீக்கும் பவானியே போற்றி
50. ஓம் பரமேஸ்வரியே போற்றி
51. ஓம் பகையழிக்கும் துர்க்கையே போற்றி
52. ஓம் பண்டாசுரனையழித்த தாயே போற்றி
53. ஓம் பிலத்திலுதித்த கொடியே போற்றி
54. ஓம் புவியாளும் புவனேஸ்வரியே போற்றி
55. ஓம் பொங்கும் மங்களக்கடலே போற்றி

Koviloor Digital Library

56. ஓம் பொன்னிறங் கொண்டவளே போற்றி
57. ஓம் குலங்காத்து நலம் தரும் குமரியே போற்றி
58. ஓம் குவலயம் போற்றிடும் குணநிதியே போற்றி
59. ஓம் குணக்குன்றே போற்றி
60. ஓம் குளிர் தரு மதிசூடினாய் போற்றி
61. ஓம் ஐந்தரும்பு ஏந்திய கையினாய் போற்றி
62. ஓம் ஐங்கரனின் குறை தீர்த்த அழகே போற்றி
63. ஓம் ஐந்தொழில் புரிந்திடும் சங்கரி போற்றி
64. ஓம் தருமத்தின் தாயே போற்றி
65. ஓம் தருணமறிந்து வந்திடுவாய் போற்றி
66. ஓம் தக்கனின் யாகத்தை அழித்தாய் போற்றி
67. ஓம் தில்லையிலே காட்சிதரும் சிவகாமியே போற்றி
68. ஓம் தேவியே போற்றி
69. ஓம் டமருகம் ஏந்தியவளே போற்றி
70. ஓம் ஒளி சிந்தும் முகமடையாள் போற்றி
71. ஓம் எல்லையில்லா இன்பம் தரும் கிளியே போற்றி
72. ஓம் எந்நாளும் ஏற்றம் தரும் கருணையேபோற்றி
73. ஓம் எட்டுத்திக்கை ஆள்பவளே போற்றி
74. ஓம் ஏழிசை நாத ஒலியே போற்றி
75. ஓம் விழியாலே ஆட்கொள்ளும் அழகே போற்றி
76. ஓம் வழிகாட்டி வரமருளும் வல்லியே போற்றி
77. ஓம் விண்ணாளும் விசாலாட்சியே போற்றி
78. ஓம் வடிவுக்கரசியே போற்றி
79. ஓம் வேதத்தின் வடிவே போற்றி
80. ஓம் நயனங்கள் மூன்றுடையாளே போற்றி
81. ஓம் நலமனைத்தும் தரும் நாயகியே போற்றி
82. ஓம் நான்முகன் போற்றும் நங்கையே போற்றி
83. ஓம் நவாவரண சக்திகளின் அரசியே போற்றி

Koviloor Digital Library

84. ஓம் நான்கு கரமுடையாய் போற்றி
85. ஓம் நாரணனின் சோரியே போற்றி
86. ஓம் அறம் வளர்த்த அன்னபூரணியே போற்றி
87. ஓம் அச்சத்தைப் போக்கும் அபிராமவல்லியே போற்றி
88. ஓம் அன்னையே போற்றி
89. ஓம் அனாதரட்சகியே போற்றி
90. ஓம் அருணை நகரத்து உண்ணாமுலையே போற்றி
91. ஓம் அம்பிகையே போற்றி
92. ஓம் அகத்திய முனிக்கருளினாய் போற்றி
93. ஓம் அரக்கரையழிக்கும் அம்மா போற்றி
94. ஓம் அன்பெனும் பிடியில் அருளுவாய் போற்றி
95. ஓம் அழகிய மகுடம் அணிந்தவளே போற்றி
96. ஓம் அடியாரின் குறைதீர்க்கும் அருளே போற்றி
97. ஓம் அருள் ஞான வடிவே போற்றி
98. ஓம் அலங்கார மணியணிந்த அழகே போற்றி
99. ஓம் அபிராமருக்கு புகழ் தந்த வல்லியே போற்றி
100. ஓம் அகங்கார குணத்தை அழிப்பவளே போற்றி
101. ஓம் ஆனைக்காவில் ஆள்பவளே போற்றி
102. ஓம் ஆறாத துயரனைத்தும் தீர்ப்பவளே போற்றி
103. ஓம் ஆனந்த வாழ்வளிக்கும் ஆதிசக்தியே போற்றி
104. ஓம் ஆனைமுகப் பெருமானின் அன்னையே போற்றி
105. ஓம் ஆயிரம் நிலவே போற்றி
106. ஓம் அழகான மாங்காட்டில் உறைபவளே போற்றி
107. ஓம் ஆதி சங்கரருக்கு அருள் புரிந்தாய் போற்றி
108. ஓம் அர்த்தமேரு சக்கரத்தில் அமர்ந்தவளே போற்றி

Koviloor Digital Library

ஸ்ரீ காமாக்ஷி அஷ்டகம்

குருவே சரணம்! குருவின் உருவில்
குவலயத்தே எனை ஆளவந்தாய்!!
திருவே சரணம்! திருமால் சோதரி
திருவடி இணையே சரணம் அம்மா!
வருவாய் நினைவில் வந்தென்னை ஆள்வாய்
வடிவாம் பிகையே! சரணம் அம்மா
அருள்வாய் எனையே! அனுதினம் பணிந்தேன்
அன்னை காமாக்ஷி உமையவளே!

களபமுஞ் சந்தனங் கஸ்தூரி மஞ்சளுங்
குங்குமம் நறுஞ் சாந்தும்!
பளபளவெனவே பேரொளி வீசிடும்
பொன்னா பரணமுந் திகழ்மேனி!
இள நகை யரும்பும் எழில்வதனந்தனை
என்ன வெனப் புகழ்வேன்!
அளவிடமுடியா ஆற்றலும் கருணைகொள்
அன்னை காமாக்ஷி உமையவளே!

சூரனை வென்றிடச் சரவணபவனெனும்
சூரனை ஈன்றவளே!
கூரிய வேலைக் குமரனுக்கேயருள்
கோமகளே சிவ சக்தி!
தீர பராக்கிரமம் திக்கெலாம் பரவத்
தீனருக்கே சரண் நீயன்றோ!
ஆரமுதே! எங்கள் ஆனந்தமே! திரு
அன்னை காமாக்ஷி உமையவளே!

குஞ்சரனும் எழிற்குஞ்சரி நாதனும்
கொஞ்சிடும் உமையே! மகாளி!
வெஞ்சம ரெதிலும் வெற்றியைத் தருமோர்
வீரவேல் தாங்கிடும் சாமுண்டி!
பஞ்சமி பைரவி பர்வத புத்திரி

Koviloor Digital Library

பஞ்சாட் சரனில் பாதியும் நீ
அஞ்சுதல் வேண்டாம்! அபயம் என்பாயே!
அன்னை காமாக்ஷி உமையவளே!

மரகதக் கொடியே! மந்த ஹாசனியே!
மங்கள சண்டி! மலைமகளே!
மரகத மயில்மேல் முருகனின் மாதா!
மாமறை போற்றிடும் மாதவமே!
பரகதிக் கொருதுணை யெனநினைந் துன்பதம்
பற்றிடும் ஏழை எனை
அரவணைத் தாண்டருள் புரிவாய் நீயே!
அன்னை காமாக்ஷி உமையவளே!

ஷண்முகன் தாயே! சஞ்சலத் தீர்ப்பாய்!
சக்தி மாகாளி! சாமுண்டீ
எண்ணிய எல்லாம் எய்திட அருள்வாய்
எழிலுரு வாணியும் இலக்குமியும்
பண்ணுடன் போற்றிட ஸ்ரீ சக்ரந்தனில்
பரவசமாய் கொலு இருப்பவளே,
அண்ணலாம் ஈசன் இருந்திருத்தேவி
அன்னை காமாக்ஷி உமையவளே!

செவ்வேள் குமரனை ஈன்றவளே! பெருஞ்
சக்தியே! மகிஷனை மாய்த்தவளே!
கொவ்வை நிகர்வாய்க் குமிழ் புன்சிரிப்பால்
குவலய மெல்லாம் ஆள்பவளே!
எவ்வாறுனையான் ஏத்திடுவேன்! எனை
எப்பொழுதும் நினைத்திருப்பவன் யான்!
அவ்வாறெனையே ஆதரித்தருள்வாய்!
அன்னை காமாக்ஷி உமையவளே!

ஜெய ஜெய சக்தி! ஜெகமெலாம் போற்றும்
ஜெய ஜெய சங்கரி! ஸ்ரீ தேவி
ஜெய ஜெய துர்க்கா ஜெயபரமேஸ்வரி!

Koviloor Digital Library

ஜெய ஜெய மாதா ஸ்ரீதேவி
ஜெய ஜெய சூர குலாந்தகன் ஷண்முகன்
ஜெயம் பெற அருளிய ஸ்ரீ தேவி!
அயனுடன் ஹரிஹரன் அனவரதமும் புகழ்
அன்னை காமாக்ஷி உமையவளே!

ஸ்ரீ காமாக்ஷி ஸ்தோத்திரம்

1. தாபிஞ்சஸ்தபகத்விக்ஷே தனுப்தாம் தாரித்ரய முத்ராத்விஷே
ஸம்ஸாராக்ய தமேரமுஷே புரர்போர் வாமாங்க ஸீமாஜுஷே
கம்பாதீரமுபாயுஷே சுவயதாம் ஜிஹ்வாகுடீம் ஜக்முஷே
விச்வத்ராண புஷேநமோதுஸததம் தஸ்மை பரஞ்ஜோதிஷே

2. ச்யா மாகாசன சந்த்திகாந்தத்ரிபுவனே புண்யாத்மனானமானனே
சிமாச்ர்வ்ய கவித்வவர்ஷ ஜனனீயாகா: பிகாதம்பினீ
மாராராதி மனோவிமோஹன விதௌள காசித்தம: கந்தலீ
காமாக்ஷ்யா: கருணாகடாக்ஷலஹரீ காமாயமே கல்பதாம்

3. ராகரசந்த்ர ஸமானகாந்திவதனா நகாதிராஜ ஸ்துதா
மூகரனாமபி குர்வதீஸுரதுனீ நீகாசவாக் வைபவம்
ஸ்ரீ காஞ்சிநகரீ விஹாராஸிகா சோகரபஹந்த்ரீ ஸாதாம்
ஏகாபுண்யபரம்பரா பசுபதோராகரிணீ ராஜதே

4.சந்த்ராபீடாம் சதுரவதனாம் சஞ்சலாபாங்கலீலாம்
குந்தஸ்மேரோ குசபரந்தாம் குந்தளோத்தூத ப்ருங்காம்
மாராராதேர் மதனசிகனம் மாம்ஸளம் தீ பயந்தீம்
காமாக்ஷீம்தாம் கவிகுலகிராம் கல்தவல்லீ முபாஸே

5. ச்ரியம் வித்யாம் தத்யரஜ்ஜனனி நமதாம் கீர்த்திமமிதாம்
ஸுபுத்ரான் ப்ரததத்தே தவஜடிதி காமாக்ஷிதருணா

Koviloor Digital Library

த்ரிரோக்யாமாதிக்யம் த்ரிபுரபரிபந்தி ப்ரணயினி
ப்ரணாமஸ்த்வத்பாதே சமிதிதுரிதே சின்னகுருதே

6. பாணேன புஷ்பதனுஷ பரிகல்ப்யமான
த்ராணேன பக்தமனஸாம் கருணாகரனே
கோணேன கோமளத்ருசஸ்தவ காமகோடி
சோணேன சோஷயசிவே மமசோகஸிந்தும்

7. புவனஜனனீ பூஷாபூர்ணசந்த்ரே நமஸ்தே
கலுஷலமனீ கம்பரதீ கேஹே நமஸ்தே
நிகில நிகம வேத்வே நித்யருபே நமஸ்தே
பரமசிவமயி பாசஸ்சேத ஹஸ்தே நமஸ்தே

ஜய ஜய ஜகதம்பசிவே
ஜய ஜய காமாக்ஷி ஜய ஜய அத்ரிஸுதே
ஜய ஜய மஹேசதயிதே
ஜய ஜய சித்ரககன கௌமுதி தாரே.

Koviloor Digital Library

ஸ்ரீ மஹாஸ்வாமிகளும் ஸ்ரீ காஞ்சி காமாட்சியும்

அம்பிகையை மாயை, மாயை என்றே பொதுவாகச் சொல்வார்கள். நாம் உண்டாக்கிக் கொள்ளும் கஷ்டங்களுக்கும் துக்கங்களுக்கும் காரணம் நம்முடைய இந்திரியங்களும், மனசும்தான். இந்திரிய சுகங்களின் வழியிலேயே மனத்தைச் செலுத்தி நம்முடைய ஸ்வாபவமான ஆத்ம சுகத்தை மறந்திருக்கிறோம். ஐம்புலன்களும் மனசும் நம்மைஆட்டிப் படைக்கின்றன. இவற்றைச் செய்தவன் மாயை. அவளேஇவற்றைச் சுத்தப்படுத்தி, இந்திரிய விவகாரங்களிலிருந்தும், மனசின் ஓயாத சஞ்சலங்களிலிருந்தும் ஜீவனை விடுவிப்பதற்காக சாக்ஷாத் "காமாக்ஷி" யாகவே வருகிறாள்.

* * *

நாலு கைகளில் கரும்பு, வில், புஷ்ப பாணம், பாசம், அங்குசம் இவற்றைத் தரித்துக் கொண்டு, நிறமே இல்லாத பிரம்மத்திலிருந்து செக்கச்செவேல் என்ற பரம கருணையின் நிறத்தோடு, உதயசூரியன் மாதிரி, மாதுளம் பூ மாதிரி, குங்குமப்பூ மாதிரி, செம்பருத்தி மாதிரி, காமேசுவரியான காமாக்ஷி அநுக்கிரக நிமித்தம் தோன்றியிருக்கிறாள். காமாக்ஷி என்றாலே நம் ஆசைகளைத் தன் கடாக்ஷத்தால் நிறைவேற்றுபவள் என்றும் ஓர் அர்த்தமாகும்.

* * *

அன்பு, கருணை இவற்றைச் சிவப்பாகவே சொல்வது வழக்கம் ராகம் (அன்பு)-அநுராகம் என்பதிலிருந்தே ரக்தம் (ரத்தம்) என்ற பதம் வந்தது, தமிழிலும் மனச் செம்மை, செவ்விய உள்ளம் என்றெல்லாம் சொல்கிறோம். இதுவே காமாக்ஷியின் சிறப்பு, கருணையின் வர்ணம்.

* * *

Koviloor Digital Library

நம்முடைய மனோவிருத்தியும், இந்திரிய விகாரங்களும் அடங்குவதற்கே பராசக்தியானவள் காமாக்ஷியாகி கரும்பு வில்லும் மலர்ப்பாணமும் தாங்கி வந்திருக்கிறாள்.

காமாக்ஷியின் நாலு கைகளில் ஒன்றில் ஒரு வில்லும், இன்னொன்றில் ஐந்து அம்புகளும் இருக்கும். அந்த வில் கரும்பினால் ஆனது. அம்புகள் புஷ்பங்களால் ஆனவை. சாதாரணமாகக் கெட்டியான இரும்பினால் வில் அமைந்திருக்கும்: இங்கோ மதுரமான கரும்பு அம்பாளுக்கு வில்லாக இருக்கிறது. கூரான அம்புகளுக்குப் பதில்மிகவும் மிருதுவான மலர்களை பாணங்களாக வைத்திருக்கிறாள்.அந்தக் கரும்பு வில் மனஸ் என்ற தத்துவத்தைக் குறிப்பதாகும். மதுரமான மனம் படைத்த அம்பாள் நம் மனங்களையெல்லாம் இந்த வில்லைக் காட்டி வசப்படுத்திக் கொண்டு விடுகிறாள்.அவளுடைய ஐந்து புஷ்ப பாணங்களும் நம் ஐம்புலன்களை ஆகர்ஷித்துச் செயலற்றுப் போகும்படி செய்வதற்காகஏற்பட்டவை.

மீதி இரண்டு கைகளில் பாசமும், அங்குசமும் வைத்திருக்கிறாள். பாசமானது நம் பாசங்களை, ஆசையை நீக்கி அவளோடு நம்மைக் கட்டிப் போடுகிற கயிறு. அங்குசம், நாம் துவேஷத்தில் கோபிக்கிறபோது நம்மைக் குத்தி அடக்குவதற்காக. ஃபிஸிக்ஸில் பிரபஞ்ச இயக்கங்களின் அடிப்படைத் தத்துவங்களாக சொல்கிற கவர்ச்சி, விலக்கல் (attraction & repulsion) என்பதன் மநுஷ்ய வாழ்வில் முறையே ஆசையும் துவேஷமும் ஆகின்றன. இவற்றை அடக்கி நம்மை ஸம்ஸாரத்திலிருந்து மீட்கவே அம்பாள் காமாக்ஷியாகி பாசாங்குசங்களைத் தரித்திருக்கிறாள்

* * *

நமக்கு அஞ்ஞானம் இருக்கிறது. எல்லாவற்றிலும் அஞ்ஞானம் இருக்கிறது. நாம் எந்தக் காரியம் பண்ண வேண்டும் என்று அறிந்து கொண்டிருக்கிறோமோ அதைப்

Koviloor Digital Library

பண்ணாமல், எதைப் பண்ணக்கூடாது என்று தெரிந்து கொண்டிருக்கிறோமோ அதைச்செய்கிறோம். இது அஞ்ஞானத்தால் உண்டாவது. அஞ்ஞானம் என்பதே வியாதிக்குச் சமானம். இந்த வியாதிக்கு மருந்து ஞானந்தான். இந்த ஞானப்பாலை நமக்கு அநுக்கிரகம் பண்ணுகிறவள் ஜகன்மாதா.

* * *

நாம் மனசில் என்ன என்னவோ நினைத்துக் கொண்டிருக்கிறோம். நம் பிரயத்தனம் இல்லாமலே எவ்வளவோ நினைப்புகள், நல்லது கெட்டது எல்லாம், க்ஷணத்துக்கு க்ஷணம் நம் மனசில் வந்து கொண்டிருக்கின்றன. நாம் இப்படி எல்லாம் நினைக்கக்கூடாது என்று சில சமயம் நினைக்கிறோம். ஆனால் மறுபடியும் அதையே நினைக்கிறோம். இப்படி வேண்டாத எண்ணங்கள் வருவதைக் காட்டிலும், குழந்தைகளுக்கு எப்படித் தாயார் நினைவே இருக்குமோ, பசி எடுத்ததால் தாயாரிடம் பால் சாப்பிடவேண்டுமென்ற நினைவு எப்படி வந்து விடுமோ அப்படி நாம் ஜகன்மாதாவை நினைத்துக் கொண்டே இருக்கவேண்டும்.

* * *

உலகத்திலுள்ள தாய் நம்முடைய பசியைத் தீர்த்து விடுவாள். தப்புப் பண்ணினால், அதைப் பண்ணாதே அப்பா, இதைப்பண்ணாதே அப்பா, என்று நல்லது சொல்வாள். தப்புப் பண்ணாமல் இருக்கும் அறிவைத் தரமட்டாள். ஆனால் ஞானம் என்கிற பாலைக் கொடுத்து நம்முடைய அஞ்ஞானத்தை நிவர்த்தி செய்கிறவள் ஜகன்மாதா தான். அம்பாளுடைய கிருபையினால்தான் நமக்கு அஞ்ஞானம் நிவர்த்தியாகும். அவளையே தியானம் பண்ணினால் அஞ்ஞானம் போகும்.

* * *

காமாட்சியின் கடாட்சம் இருக்கிறதா என்பதைப் பார்க்க ஒருவழி உண்டு. தூக்கத்தில் ஸ்வப்னம் வரும்

Koviloor Digital Library
போது அவளைத் தியானம் செய்து கொண்டிருப்பது போல் வருகிறதா என்று பார்க்கலாம். இல்லை, திருடனுக்கு பயந்து அழுவது போலவோ, காமத்தால் இன்புறுவது போலவோ ஸ்வப்னம் வருகிறதா என்பதையும் பார்த்துக் கொள்ளலாம் வெளிப்படையாகத் தியானம் பண்ணுவதுபோல ஏமாற்றுகிறவர்களுக்கு ஸ்வப்னத்தில் திருடன்தான் வருவான். காமத்தைத்தான் ஸ்வப்னம் காட்டும். நிஜமான பக்தியாக இருந்தால் ஸ்வப்னத்தில் பகவான் நாமாவை ஜபிப்பதுபோல் இருக்கும், தரிசனம் செய்வதுபோல வரும். அப்போது கொஞ்சம் திருப்தி அடையலாம் இப்படி தினமும் நம்முடைய பக்தியை ஸ்வப்னத்தில் சோதித்துக் கொள்ளலாம்.

* * *

நம்மில் எத்தனைபேர் தினமும் ஜபம் பண்ணிக் கொண்டுவருகிறோம்? ஏதோ, ஒரு சிலர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள், புஸ்தக சாலையில் புஸ்தகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதுபோல, நம்மிடம் அநுஷ்டானமில்லாத குறை வெகுநாள் முன்பே வந்து விட்டது. வரவரக் குறைத்து வருகிறோம். இப்படிக் குறைந்து குறைந்து சில கோடி ஜனங்களுக்கு வந்து நிற்கிறது கணக்கு, இதர மதங்கள் பெருகுவதற்குக் காரணம்: நம்முடைய அநுஷ்டானக் குறைவே. எல்லாரும் அம்பாளைத் தியானம் பண்ணவேண்டும். எனக்கு முக்கியம் அம்பாள். அம்பாளுடைய சரணாரவிந்தத்தைத் தான் லோக க்ஷேமார்த்தம் தியானம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். எல்லாரும் பண்ண வேண்டும்.

* * *

அம்பாளைத் தியானிக்க முயன்று அதில் ஒரு முகமாக ஈடுபட முடியாதபோது நம் குறையெல்லாம் தெரிகிறது. அதுவும் ஒருவிதத்தில் நல்லதுதான். "இந்த குறைகளைப் போக்கம்மா" என்று அவளிடம் பிரார்த்தித்துக்கொள்ள முடிகிறது. என்னிடம்

Koviloor Digital Library

எப்போதெல்லாம் தோஷம் தோன்றுகிறதோ அப்போதெல்லாம் அம்பாளிடம் முறையிட்டு அந்த தோஷம் இனியாவது இல்லாமலிருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

* * *

மனிதனுக்குப் பலவிதமான இச்சைகள், பாசங்கள் ஆசைகள்: தன் இச்சையைப் பூர்த்தி செய்து கொள்கிறான், அதில் பூரித்துப்போகிறான். ஆனால் இது சாசுவதமான பூர்த்தியோ, பூரிப்பா என்றால் இல்லைவே இல்லை, இன்னோர் இச்சை, அப்புறமும் இன்னொன்று என்று பிரவாகமாக வந்து கொண்டே இருக்கிறது. இருந்தாலும் இந்த ஓயாத அலைச்சலுக்கு நடுவில் அவ்வப்போது இப்படியொரு பூரிப்புப் பெறுகிறாள். இது ஒரு விதத்தில் அவளே செய்கிற ஏமாற்று வித்தை.

* * *

துணி அழுக்கு இல்லாமல் இருந்தால் போதாது, உடம்பு அழுக்கு இல்லாமல் இருந்தால் போதாது, வீடு அழுக்கு இல்லாமல் இருந்தால் போதாது. நம் மனம் அழுக்கு இல்லாமல் ஆகவேண்டும் அதற்கு அம்பாளுடைய சரணாரவிந்தத் தியானந்தான் வழி. எப்போதும் அம்பிகையைத்தான் நாம் நமஸ்கரிக்க வேண்டும். அவளுடைய தியானத்தினால்தான் சகல பாவங்களும் நிவர்த்தியாகும். சகல க்ஷேமங்களும் உண்டாகும்.

* * *

காஞ்சீபுரத்தில் நான்கு ராஜ வீதிகள் இருக்கின்றன. அவற்றின் மத்தியில் இருக்கிற காமாட்சி அம்பாளுக்கு நித்திய உத்ஸவம் நடக்கும். காஞ்சீபுரத்தில் கிட்டத்தட்ட 100 தேவாலயங்கள் இருக்கின்றன. எந்தத் தேவாலயத்தில் சுவாமி புறப்பட்டாலும், ஒரு மைல், இரண்டு மைல் இருந்தாலும் இங்கே வந்து அம்பாளைச் சுற்றியுள்ள நான்கு ராஜ வீதிகளையும் வலம் பண்ணிக்கொண்டுதான் திரும்ப அந்த மூர்த்திகள் அந்த அந்தக் கோவிலுக்குப் போவது வழக்கம்.

Koviloor Digital Library

வேதங்களுடைய தாத்பர்யம் அம்பாள் என்ன என்ன வேதங்களுடைய தாத்பர்யம் என்றால் அது அத்வைதமான தத்துவம். அத்வைதம் என்ற தத்துவத்திற்கே மூலவர் அம்பாள்தான், அம்பாளுக்குச் சித்சக்தி, ஞான சொரூபிணி என்று பெயர். இந்தப் பரதேவதைதான் காஞ்சி மத்யத்தில் இருக்கிறாள் சகல வேதங்களுடைய பரம தாத்பர்யமாகவும், அத்வைத் ஞான சொரூபமாகவும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறாள்.

* * *

பிரம்மமாகச் செயலற்று இருந்த வஸ்துவுக்கு லோகாநுக்கிரகம் என்ற பரம கருணை உதிப்பதைத் தான் காமாக்ஷி என்று சொல்கிறோம். சுத்த ஸ்படிக ஸங்காசமாக நிறமில்லாதிருந்த பிரம்மம், அப்போது சிவப்பு நிறத்தை அடைகிறது.

* * *

அம்பாளைப் பற்றிய பல ஸ்தோத்திரங்கள் இருக்கின்றன. இவற்றில் ஆதி சங்கர பகவத்பாதர்கள் செய்த ஸௌந்தர்ய லஹரியும், மூக கவி செய்த பஞ்சசதீயும் ஈடு இணை இல்லாமல் இருக்கின்றன. தேர்ந்த சைத்திரிகன் ஒருவன் அம்பாளின் ஸ்வரூபத்தை எழுதிக் காட்டுகிற மாதிரி, இவை அம்பிகையின் திவ்ய வடிவத்தை அப்படியே நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்திவிடும். அவளுடைய மகிமையில் நம் மனசு மூழ்கிக்கிடக்கும்படிச் செய்யும். கண்ணுக்கும் மனசுக்கும் எட்டாத பராசக்தியைக் கண்ணால் காணவும் மனசால் அநுபவிக்கவும் செய்கிற வாக்சக்தி ஸௌந்தர்ய லஹரிக்கும், மூக பஞ்ச சதிக்கும் உள்ளது. கம்பீரம் அத்தனையும் ஸௌந்தர்ய லஹரியில் அடங்கியிருக்கிறது. மிருதுத்தன்மை முழுவதும் மூக பஞ்ச சதீயில் உள்ளது.

* * *

'மூகன்' என்றால் ஊமை என்று அர்த்தம், ஊமையாக இருந்த ஒரு பரம பக்தர் காஞ்சீபுரத்தில் குடி கொண்டுள்ள ஜகன்மாதா காமாக்ஷியின் கிருபா கடாக்ஷத்தையும்

Koviloor Digital Library

அவளுடைய தாம்பூல உச்சிஷ்டத்தையும் பெற்று உடனே அமிருத சாகரம் மாதிரி ஐந்நூறு ஸ்லோகங்களைப் பொழிந்து தள்ளிவிட்டார். அதைத்தான் மூக பஞ்ச-சதீ என்கிறோம். பஞ்ச என்றால் ஐந்து; சத என்பது நூறு.

* * *

தமோ குணத்துக்குக் கறுப்பை அடையாளமாகச் சொல்வார்கள். வேலை எல்லாம் செய்கிறோம். பிறகு அலுத்துப் போய்த் தூங்குகிறோம். தூக்கம் தமஸின் செயல். அங்கே ஒரே இருட்டு-கறுப்பு-தான் இருக்கிறது. ஆனாலும் இந்தத் தூங்கத்தில் தான் மனுஷ்யனுக்குக் கொஞ்மேனும் சாந்தி இருக்கிறது. நாளெல்லாம் அலைந்து திரிந்து கஷ்டப்படுகிற ஜீவராசிகளுக்கு ஆறுதலாகப் பராசக்தி அன்றன்றும் தூக்கத்தை வைத்துக்கொஞ்சம் அமைதி தருகிறாள்.

* * *

காருண்ய மூர்த்தியான காமாக்ஷியான சிவப்பானவளான மூகர் சொல்வதுதான் நியாயமாகப் படுகிறது. ராஜ ராஜேஸ்வரி, லலிதா மஹா திரிபுரசுந்தரி, ஸ்ரீவித்யா என்றெல்லாம் சொல்லப்படுகிற அம்பாளை மந்திர சாஸ்திரங்களும் செக்கச்சிவந்த ஜோதிப் பிரவாகமாகவே சொல்கின்றன. அந்தஸ்ரீவித்யா அதிஷ்டான தேவதையின் ஸ்வரூப லக்ஷணங்களையே பூரணமாகக் கொண்டவள் காமாக்ஷி. எனவே பரம்பொருளின் கருணை வடிவான அவளைச் சிவப்பாகச் சொல்வதுதான் பொருத்தம்.

* * *

நல்லதற்கெல்லாம் உற்பத்தி ஸ்தானமாக சம்பு ஒன்று இருக்கிறது. அது பரப்பிரம்ம வஸ்து பரப்பிரம்ம மாகச் செயலின்றி இருந்தால் போதாது என்று அது லோகத்துக்கு நல்லது செய்வதற்காக ஒரு ஸ்வரூபம் எடுக்கிறது, அதற்குதான் அம்பாள் என்று பெயர் நிறமில்லாத சம்பு உலகைக் காக்கும் கருணையினால் அருணவர்ணம் கொண்டு வெற்றியோடு பிரகாசிக்கிறது.

Koviloor Digital Library

"ஜகத்த்ராதும் சம்போ; ஜயதி கருணா காசித் அருணா" என்கிறார் ஸ்ரீ ஆசார்யாள். சூர்யோதயத்துக்கு முன்னால் கிழக்கில் பரவுகிற பிரகாசச் சிவப்புதான் அருண நிறம். அருணநிறம்தான் கருணை நிறம் அதுவே அம்பிகையின் நிறம் என்கிறார் ஆசாரியாள்.

* * *

சிவாலயங்களில் முதலில் ஈச்வரனுக்கு நைவேத்யம் பண்ணிவிட்டு அப்புறம் அதையேதான் அவன் பிரஸாதமாக அம்பாள் முதலான மற்ற எல்லா தெய்வங்களுக்கும் நைவேத்யம் செய்வார்கள். மதுரையிலே மட்டும் மீனாக்ஷிக்கு முதலில் செய்து விட்டு அப்புறந்தான் சுந்தரேச்வரர் உள்பட மற்ற எல்லோருக்கும்! காஞ்சீ புரத்திலே நூற்றெட்டு சிவாலயங்கள் இருந்தபோதிலும் ஒன்றிலாவது அம்பாள் சந்நிதியில்லாமல், அந்தப் பராசக்தி எல்லா மூர்த்திகளுக்கும் மேற்பட்ட பரப்ரஹ்ம ஸ்வரூபிணியாக "காமாக்ஷி" என்று தனிக் கோயிலில் வாசம் செய்கிறாள். அங்கே அவளுக்கென்றே தயார் செய்து நைவேத்யம் தான் அவளுக்கு அர்ப்பணம் செய்யப்படுகிறது. ஏகாம்பரேச்வரர் நைவேத்தியம் அவளுக்கு வருவதில்லை.

* * *

காமாக்ஷீ ஸகல கஷ்டத்தையும் நிவ்ருத்தி பண்ண பரமானந்தத்தை அளிக்கிறவள். நமக்கு ஏற்ப கஷ்டங்களுக்கு ஜ்கோதிஷ ரீதியில் நவக்கிரங்களைத் தானே காரணமாகச் சொல்கிறார்கள்? இந்த நவக்ரஹ பாதிப்பு எதுவும் அவள் பாதத்தை ஸ்மரிக்கிறவளுக்கு ஏற்படாது என்று பொருள்படுமாறு மூக பஞ்ச சதீ யில் ஸ்லோகம் வார்த்தை விளையாட்டுப் பண்ணியிருக்கிறது.

* * *

வகிட்டிலே அம்பாள் குங்குமம் வைத்துக் கொண்டிருக்கிறாள். அதனால் தான் அம்பாளுடைய சாந்நித்தியம் வேண்டும் என்கிறர்கள் வகிட்டைக்

Koviloor Digital Library
கோணலும் மாணலுமாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள். நேரே நடுவில் எடுத்துக்கொள்வார்கள். அங்கே குங்குமமும் வைத்துக் கொள்ள வேண்டும். அதுதான் பதிவ்ரதா ஸ்திரீகளுக்குத் தெய்வ சாந்நித்யம் உள்ள இடம். ஒவ்வொரு சரீரத்திலும் சாந்நித்தியம் உள்ள இடம் ஒவ்வொன்று இருக்கிறது. பசு மாட்டுக்குப் பின்னாலே இருக்கிறது. அதனால் அதன் பின்னால் கோபூஜை பண்ணுகிறோம். யானைக்கு மஸ்தகத்தில் இருக்கிறது. வில்வத்திலே பின் பக்கம், அங்கேதான் லக்ஷ்மி வாசம் செய்கிறாள் என்று சொல்வார்கள். அதுபோலவே பதிவ்ரதா ஸ்திரீகளுக்குத் தெய்வ சாந்நித்தியம் உள்ள இடம் சீமந்தம். ஆகையால் அந்த இடத்தில் குங்குமம் இட்டுக் கொள்வது வழக்கம். அப்புறம் செளபாக்யத்துக்காக, அலங்காரத்திற்காக, நெற்றியிலும் வைத்துக் கொள்வார்கள்.

* * *

அம்பாள் சந்நிதியில் சரஸ்வதி வீணையை வாசித்துக்கொண்டிருந்தாள். இதைக் கேட்டுக் கொண்டிருந்தபோது, அம்பிகை நிரம்ப ஆனந்தமடைந்து, அதில் லயித்துத் தலை அசைத்துக் கொண்டிருந்தாள். சரஸ்வதிக்கும் ஒரே ஆனந்தம். தன்னுடைய வீணாநாதம் அம்பிகையே தலை அசைத்துச் சந்தோஷப்படும்படியாக இருக்கிறது என்று அவள் சந்தோஷப்பட்டுக் கொண்டாள். அப்போது அம்பிகை சரஸ்வதியைப் பார்த்து இரண்டு மூன்று வார்த்தைகள் சொல்கிறாள்.

"ரொம்ப நன்றாக இருக்கிறது", என்ற வார்த்தைகள் அம்பாளுடைய கண்டத்திலிருந்து வருகின்றன. அவற்றை கேட்டாள் சரஸ்வதி. அந்த வார்த்தைகளினுடைய சாதுர்யத்தையும், அழகையும் கண்டு இவ்வளவு இனிமையான வாக்கையுடைய இந்த அம்பிகையின் சந்நிதானத்திலா இத்தனை நாழிகை வீணை வாசித்துக்கொண்டிருந்தோம்! என்று மிகவும் வெட்கம் அடைந்தாள் சரஸ்வதி தன் வீணையின் நாதம் அவளுக்கே சப்பென்று ஆகிவிட்டது.

Koviloor Digital Library

அம்பிகையின் வாக்கைக் கேட்டவுடனே, இனித் தலைக் காட்டப்படாது, மூஞ்சியை வெளியே காட்டப் படாது என்று அந்த வீணை உறைக்குள்ளே அடங்கிப் போச்சு என்று செளந்தர்ய லஹரியில், ஒரு சுலோகத்தில் சொல்லியிருக்கிறார் ஆசார்யாள்.

அவ்வளவு மாதுர்யமான வாக்கினை உடைய அம்பிகையினுடைய அனுக்ரஹம் நமக்கெல்லாம் கிடைத்துவிட்டால் நம்முடைய வாக்கும் இனிமையாக ஆகும். அவளுடைய அநுக்கிரஹத்தைப் பெறுவதற்குதான் நாம் எல்லாம் முயற்சி பண்ண வேண்டும்.

* * *

நமக்கெல்லாம் க்ஷேமத்தை எது அநுக்கிரஹம்பண்ண வேண்டும்? "உன்னுடைய முகத்தினுடைய லாவண்யப் பிரவாஹமானது நமக்கெல்லாம் க்ஷேமத்தை அநுக்கிரஹம் செய்யட்டும்" என்று அம்பிகையிடத்தில் ஆதிசங்கரர் பிராத்தனை செய்கிறார். அம்பாளுடைய முகத்தின் செளந்தர்ய லாவண்யமே பெரிய பிரவாகமாக லஹரியாக இருக்கிறது. லஹரி என்றாலும் பிரவாஹந்தான் பொங்கி வரும்படியானதற்கு லஹரி என்றுசொல்வார்கள் நிறைந்து வருவதற்குப் பிரவாஹம் என்று பெயர். அப்படிப் பொங்கியும் நிறைந்தும் வரும் லாவண்யப் பிரவாஹம் இது என்கிறார் ஆசார்யாள்.

* * *

சிருஷ்டி செய்கிற பிரம்மா, பரிபாலிக்கிற விஷ்ணு, சமஹாரருத்ரன், மாயையின் அதிபரியான ஈசுவரன் இவர்களை நாலு கால்களாகக் கொண்ட மஞ்சகத்தில் சாக்ஷாத் பரப்பிரம்ம சக்தியான காமேசுவரி வீற்றிருக்கிறாள்; பரப்பிரம்மான காமேசுவரனின் இடப்புறத்தில் அநுக்கிரஹமூர்த்தியாக அமர்ந்திருக்கிறாள். காமேசுவரன் பிரம்மம்; காமேசுவரி பிரம்மசக்தி; இவர்கள் ஸதிபதிகள்.

* * *

XLV

Koviloor Digital Library

அம்பாளுடைய கடாக்ஷமானது வெகு தூரம் விழக்கூடிய கடாக்ஷம், தாயாருடைய கடாக்ஷம் குழந்தைகளிடத்தில் விழும். பிரபஞ்சத்தில் இருக்கும் எல்லாப் பிராணிகளும் குழந்தைகள். எல்லாவற்றிற்கும் தாயாக இருப்பவள் ஜகன் மாதாதான். புல் பூண்டு, முதற்கொண்டு எல்லாம் தேவியின் குழந்தைகள். பிரபஞ்சத்திற்கு எல்லை இல்லை. எல்லையில்லாத பிரபஞ்சத்தில் இருக்கும் எல்லா வஸ்துக்களிடத்திலும் அவளுடைய கடாக்ஷம் விழுவதனால் அவளுடைய பார்வையானது வெகுதூரம் நீண்டு போகிறதாம்.

* * *

வெகுதூரம் விழக்கூடிய அம்பாளுடைய குளுமையான கடாட்சத்திற்கு உபமானமாகப் பாதி திறந்து பாதி மறைந்திருக்கும் நல்ல நீலோத்பல புஷ்பத்தைச் சொல்கிறார் ஆதிசங்கரர். நீலோத்பலம் மிகவும் சீதளமாக இருக்கும். அம்பாளுடைய கடாட்சமும் குளுமையாக வெகு தூரம் நீண்டும் இருக்கும்.

* * *

"என்னையும் உன் கிருபையினால் உன் கடாக்ஷ பிரவாஹத்திலே மூழ்கும்படிச்செய். மிக எளியவன்னான என்னையும் உன்னுடைய கிருபையிலே மூழ்கும்படிச் செய்து பவித்திரமாக்கு. உன்னுடைய கடாக்ஷத்தினாலே பிறந்தவன்தானே நான்? நானும் உன் குழந்தைதான். ஆனதாலே எல்லோருக்கும் கடைசியில் இருப்பவனான என்னையும் கிருபையினாலே உன்னுடைய கடாக்ஷப் பிரவாகத்திலே மூழ்கச் செய். இதனாலே உனக்கு ஏதாவது சிரமம் இருக்குமோ? அதெல்லாம் ஒன்றும் கிடையாது. ஆனால் எனக்குப் பெரிய பாக்கியம் கிடைக்கும். உன் கருணா கடாக்ஷம் பட்டவுடன் நான் கிருதார்த்தனாவேன்" என்கிறார் ஆசார்யர்.

* * *

Koviloor Digital Library

பூர்ண சந்திரன் பிரகாசிக்கிறான். ஒரே முட்புதர்க்காடாக இருந்தாலும், பெரிய மாடமாளிகை உப்பரியையாக இருந்தாலும், இரண்டு இடங்களிலும் அவனது நிலா அமுத கிரணங்கள் தாமே விழுகின்றன. காட்டிலும் முட்புதரிலும் அவன் நிலா விழுவதானாலே அவனுக்குச் சிரமம் உண்டா? இல்லை. உப்பரிகையின் மேல் விழும் போது ஏதாவது சௌகரியமோ அநுகூலமோ உண்டோ? இல்லை. அவனது கடாக்ஷம் லோகம் முழுவதும் எப்படி விழுகிறதோ அப்படி உன்னுடைய கருணா ப்ரவாஹமானது எங்கு விழுந்தாலும் அதனால் உனக்கு ஒரு ஹானியும் கிடையாது. நான் மிகவும் தீனனாக இருக்கிறேன். இப்படிப்பட்ட இடத்தில் உன் கடாக்ஷம் விழுந்தால் சகல தோஷங்களும் நிவிருத்தியாகி நான் க்ஷேமத்தை அடைந்தவனாக ஆகிறேன்.

அம்பாளுடைய ஸ்வரூபம் வேறு, ஈசுவரனுடைய ஸ்வரூபம் வேறு என்பது கிடையாது, அப்படியே அவர்களுடைய ஸ்ரூவபம் வேறு, ஆசார்யரவர்களுடைய ஸ்வரூபம் வேறு என்றும் கிடையாது. சாக்ஷாத் ஈசுவரனுடைய அவதாரந்தான் ஆசார்யர்கள். பர மருணையினாலே நமக்காக அவரும் நம்மோடு சேர்ந்துகொண்டு இந்த (ஸௌந்தர்ய லஹரி) ஸ்தோத்திரத்தை நமக்காகச் செய்து கொடுத்திருக்கிறார்.

* * *

எந்த மாதிரியாக நாம் தியானம் பண்ணுகிறோமோ, அந்த மாதிரி அநுக்ரகம் அடையலாம். தியான ஸ்வரூபத்திற்குத் தகுந்தாற்போல் ஒரு வர்ணம், ஒரு ரூபம் இப்படி எல்லாம் இருந்து கொண்டு அநுக்கிரகம் பண்ணுகிறவன் அம்பாள்தான்.

* * *

காமத்துக்காகவே ஏற்பட்ட மன்மதனுக்கு அவள் தந்த கரும்பு வில்லையும், மலர் அம்பையும் ஒரு சமயம் அவளே அவனிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படியாகி

Koviloor Digital Library

விட்டது. பரம காருண்யத்தால் அவள் அப்படிச் செய்தாள் வெளி நினைப்பே இல்லாத பிரம்மஸ்வரூபம் லோகத்திடம் கருணை கொண்டு கடாக்ஷிக்க வேண்டும். லோகத்துக்கு தர்மத்தையும் ஞானத்தையும் அநுக்கிரகிக்க வேண்டும் என்றே, அம்பாள் காமனுக்குத் தந்த தனுஸையும் பாணங்களையும் தானே எடுத்துக் கொண்டு காமாக்ஷியானாள்.

* * *

அம்பாளுக்கும் பரமேசுவரனுக்கும் உள்ள சம்பந்தம் எப்பேர்ப்பட்டது என்றால் சரீர சரீரி பாவசம்பந்தம், அல்லது சேஷ சேஷிபாவ சம்பந்தம் உடலும் உயிரும் எப்படியோ அப்படிதான் சரீரசரீரி பாவமும், இந்த உடலுக்கு உயிர் இருக்கிறது. இந்த உயிருக்கு இன்னோர் உயிர் ஆதாரமாக இருந்தால் அதைத்தான் உயிருக்கு உயிராய் இருப்பது என்று சொல்வர். பரமேசுவரன் உயிர் என்றால் அந்த உயிருக்கு உடம்பு எது? அம்பாள்தான்.

* * *

பஞ்ச பூதங்களும் நீதான். பஞ்ச பூதங்களுக்கும் மேலே மனசு என்று ஒன்று இருக்கிறதே, அந்த மனசும் நீதான். ஆகாசத்தை ஸ்யோமம் என்று சொல்லுவர். ஆகாசமும் நீதான். மருத் என்றால் காற்று அக்னியை நாலு பக்கமும் அடித்துக் கொண்டு போவது காற்று அதனாய் மருத்ஸாரதி என்று அக்கினியைச் சொல்வர். அக்கினியும் நீதான். அக்கினியை நாலு பக்கமும் கொண்டு போகும்படியான காற்றும் நீதான்.

ஆப என்றால் ஜலம், ஜலமும் நீதான், பூமியும் நீதான். நீ அல்லால் வேறு கிடையாது. நீயே எல்லா ஸ்வரூபமாகவும், ஆகியிருக்கிறாய். கொஞ்சம் கொஞ்சம் எங்களிடத்தில் இருக்கும்படியான ஞானம் ஆனந்தம் எல்லாவற்றுக்கும் ஆதாரமாக, சித் ஆனந்த ஸ்வரூபமாக இருப்பதும் நீதான். ஸமஸ்த பிரபஞ்சமும் உன் பரிணாமத்தைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது.

* * *

Koviloor Digital Library

அம்பிகையின் ஸ்வரூபமான ஸ்வர்ணமுகி சிலா என்ற கல் ஆந்திராவில் ஸ்வர்ணமுகி ஆற்றில் கிடைக்கிறது. அது தங்க ரேக் ஓடிய கல். இதில் கண், மூக்கு, காது இல்லை. எனவே இடுக்குகளில் அழுக்கேறுவது கிடையாது. அபிஷேகம் செய்து துடைக்க நாழியே ஆகாது. கொஞ்சம் இடத்தைத்தான் அடைத்துக் கொள்ளும்.பெரிய பூஜா மண்டபம் கூடத் தேவையில்லை ஒரு சின்ன சம்புடத்தில் போட்டு வைத்து விடலாம். ஆவாஹனம் பண்ணி உத்தரணி தீர்த்தத்தில் அபிஷேகம் பண்ணி, சந்தனம், குங்குமம், அக்ஷதை வைத்து, அர்ச்சனை செய்து நைவேத்தியம் காட்டலாம்.

* * *

வீட்டில் பூஜை செய்கிறவர் உட்பட அனைவரும் கோயிலுக்குப்போவது என்று கட்டுபாடாகப் பழக்கம் வைத்துக் கொண்டால்தான் அங்கு பூஜைகள் குறைவற நடக்கும். நான் கோயிலுக்குப் போகிறேன் என்றால், எனக்காகவாவது கோயிலைச் சுத்தமாக வைக்கிறார்கள்; விளக்குகள் போடுகிறார்கள்; நைவேத்தியம் சுத்தமாகச் செய்கிறார்கள். வஸ்திரம் அழுகில்லாமல் கட்டுகிறார்கள்.

* * *

எப்போது பார்த்தாலும் காரியம் செய்து கொண்டிருப்பதே நமக்கு இயல்பாகிவிட்டது. உடம்பால் காரியம் செய்யாதபோதும், வாக்கால் பேசிக் காரியம் செய்யாத போதும் கூட, நம்மனசு சதா எதையாவது நினைத்துக் கொண்டே இருக்கிறது. இதுவும் காரியம்தான். இந்தக் காரியம் நின்றால்தான் அதாவது மனசில் எண்ணமே தோன்றாமல் இருந்தால் தான், எந்தக் காரியமும் இல்லாத பிரம்ம நிலையை அடையமுடியும். ஆனால் இந்த மனசில் ஒரு க்ஷணம் கூட எதையும் நினைக்காமல் இருக்கமுடியவில்லையே! இதை எப்படி நிறுத்தப் பழக்குவது?இந்தப் பழக்கத்துக்கு வழிதான் பக்தி.

* * *

Koviloor Digital Library

ஒவ்வொரு காரணத்திற்கும் ஒரு விளைவு இருக்கிறது பௌதிக விஞ்ஞானம் முழுவதும் இந்தக் காரணம் விளைவு Cause & Effect பற்றிய விதிகளைக் குறித்ததேயாகும். மாற்ற முடியாத இந்த விதிகளாலேயே உலகம் ஒழுங்குடன் இயங்குகிறது. ஏதோ ஒருபேரறிவு இருப்பதால்தான் இப்படிப்பட்ட விதிகள் உண்டாகி, அவை எல்லாம் ஒழுங்காக இணைந்து, உலக வாழ்வு ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.

பௌதிக உலகில் காரணம் -விளைவு என்கிற தவிர்க்க முடியாத சங்கிலி இருந்தால் மனித வாழ்க்கையிலும் அது இருந்துதானே ஆகவேண்டும்? நாம் செய்கிற சகலகாரியங்களுக்கும் விளைவுஇருந்து தானே ஆகவேண்டும். நல்ல் காரியங்கள் செய்தால் அதற்குச் சமமான நல்ல விளைவுகளைப் பெறுவோம் கெட்டதைச்செய்தால் அதற்குச் சமமான கெட்ட பலன்களைப் பெறுவோம் இப்படிப் பலனைத் தருகிற "பலதாபி" தான் பிரபஞ்சத்தை நடத்திவைக்கிற மகாசக்தி.

* * *

இஷ்டம் இருந்தாலும் இஷ்டம் இல்லாவிட்டாலும் ஏதோ ஒரு மகாசக்தியிடம் பக்தி செய்வது என்று ஏதோ ஒரு தத்துவத்தை மட்டும் காட்டாமல், நம் மனசுக்கு எப்படி இஷ்டமோ, அதற்கு அனுசரணையாகவே அந்த மகா சக்தியை ஒரு மூர்த்தியில் பாவித்து தத்துவத்தை ஜீவனுள்ள ஒரு அன்பு உருவமாக பாவித்து பக்தி செய்வதற்கு நம் மதத்தில் உள்ள இஷ்ட தேவதை வழிபாடே வழி வகுக்கிறது.

* * *

அநேக சிவஸ்தலங்களில் உள்ள அம்பாள் சந்நிதிகளுக்குக் "காமகோட்டம்" என்ற பெயர் இருப்பதாக அந்தந்த சந்நிதிகளில் உள்ள கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது. சோழர் காலத்திலிருந்து பல அரசர்கள் இந்தச் சந்நிதிகளுக்குத் திருப்பணி செய்ததை சிலர்

Koviloor Digital Library

சாஸனமாகப் பொறித்து வைத்திருக்கிறார்கள். அவிநாசி, விஜயமங்கலம், திருவொற்றியூர், திருக்காட்டுப் பள்ளி, வல்லம் திருப்பழனம், கோயிலாடி மாதிரி பல சேத்திரங்களில் உள்ள அம்பாள் சந்நிதிக் கல்வெட்டுகளில் அந்தந்த அம்பாளைப்பற்றிச் சொல்லும்போது, திருக்காமக் கொட்டத்து நாச்சியார், திருக்காமக் கொட்டமுடைய அழகமர் மங்கையார், திருக்காமக் கொட்டமுடைய அகில நாயகியார் என்றெல்லாம் குறிக்கப்பட்டுள்ளது.

அந்தக் காலத்தில் குறிலைக் குறிக்கும் ஒற்றைக் கொம்பு (ெ) நெடிலைக் குறிக்கும் இரட்டைக் கொம்பு (ே) என்ற வித்தியாசம் கிடையாது. இதனால் தான் "காம கோட்டம்" என்பது "காமகொட்டம்" என்று இருக்கிறது. சிதம்பரத்திலும் இப்படி ஒரு தமிழ் கல்வெட்டு இருக்கிறது. அதோடு சம்ஸ்கிருதத்திலும் காமகோஷ்ட ஸ்திதாயா என்று அங்குள்ள சிவ காமேசுவரியைச் சொல்லும் சாஸனம் இருக்கிறது.

எல்லா சக்திக் கோட்டங்களிலும் இருந்த ஜீவகளை காஞ்சிபுரத்திற்கு இழுக்கப்பட்டு மறுபடியும் அங்கிருந்து அந்தந்த க்ஷேத்திரத்திற்கு அனுப்பப்பட்டதாகப் புராணம் சொல்லுகிறதல்லவா? அதாவது இப்போது நாம் எந்த ஒரு க்ஷேத்திரத்து அம்பாள் சந்நிதியிலும் அநுபவிக்கிற சாந்நித்தியமானது ஒரு காலத்தில் காஞ்சி காமாக்ஷியின் சந்நிதிக்கு இழுக்கப்பட்டு, பிறகு அங்கிருந்தே இந்த க்ஷேத்திரத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டதாகும்.

இப்படிக் காமகோட்டத்திலிருந்தே எல்லா ஸ்தலங்களுக்கும் ஜீவகளை வந்ததால்தான், இதர ஸ்தலங்களிலுள்ள அம்பாள் சந்நிதிகளையும் "காமகோட்டம்" என்றே குறிப்பிடுகிற வழக்கம் வந்திருக்க வேண்டும்.

* * *

"காமகோடி" வேறு, "காமகோட்டி" வேறு, காமாக்ஷியின் இருப்பிடமான கோட்டம் காமகோட்டம்,

Koviloor Digital Library

காமங்கள் எல்லாம் முடிந்து போகிற கோடியாக, அதாவது ஞான ஸ்வரூபமாக இருப்பது காமகோடி, காமாக்ஷியே தான் காமகோடி, மூர்த்தியாகச் சொல்லுகிறபோது காமாக்ஷி; பீடமாகச் சொல்லுபோது காமகோடி. காமாக்ஷி சன்னதியில் காமகோடி பீடம் இருக்கிறது.

* * *

காஞ்சியில் காமாக்ஷி பொன்மழை பொழிந்தது பற்றி மூகர் "பஞ்சசதி"யில் பாடியிருக்கிறார். "துண்டீர தேசத்தில் ஸ்வர்ணவர்ஷத்தைப் பொழிந்தவள்" என்கிறார். துண்டீரம் என்பதே தமிழில் தொண்டை மண்டலம் என்பது பல்லவர்களின் தலைநகரான காஞ்சியைச் சுற்றிய சீமைக்குத் தொண்டை மண்டலம் என்று பெயர். இப்போதும் இந்தச் சீமையில் "பொன்விளைந்த களத்தூர்" என்றே ஓர் ஊர் இருப்பது உங்களில் சிலருக்குத் தெரிந்திருக்கலாம்.

* * *

அம்பாளின் சரணத்தைத் தியானித்துக் கொண்டே இருந்தால் அழுக்கெல்லாம் போய் குறை எல்லாம் தீர்ந்து பூர்ணமாக அப்படியே நிரம்பிப் போய் விடுவோம் அழுக்கும் குறையும் உள்ள ஜீவர்களாக நாம் உண்டாகியிருப்பது அவள் விளையாட்டுத்தான். எனவே இதிலிருந்து நம்மை மீட்டு நிர்மலமாக, பூர்ணமாகப் பண்ணுவதும் அவள் காரியம் தான்.

* * *

முதலில் நாம் தப்புப் பண்ணாமல் இருக்க முயன்றாலே போதும், தப்புப் பண்ணுகிறபோதெல்லாம் அம்பாளிடம் பிரார்த்தித்துக் கொண்டு அவள் கிருபையால் ஆத்ம சுத்தி செய்து கொண்டு,படிப்படியாக நமக்கு நிறைவைப் பெற்று, நம் மதத்திற்கும் நிறைவை உண்டுபண்ணுவோம். நம் மதம் என்பது லோகம் முழுவதற்கும் பொதுவானதால், இதன் மூலம் சகலதேச

Koviloor Digital Library

ஜனங்களுக்கும் க்ஷேமத்தைச் செய்வோம்.

* * *

எல்லா மதங்களும் முடிவில் மோட்சம் அடைவதைத்தான் லக்ஷியமாகச் சொல்கின்றன. பரம சத்தியத்தை அநுபவத்தால் அறிகிற ஞானம் தான் அந்த மோட்சம், அந்தப் பரம ஸத்யத்தைத்தான் வேதாந்தத்தில் பிரம்மம் என்பது. பிரம்மத்தின் சித்சக்தி என்கிற ஞான ஸ்வரூபமாக இருக்கிற அம்பாளை உபாஸித்தாலே, அவளுடைய அநுக்கிரகத்தால் நாமும் அந்த ஸத்தியம்தான் என்கிற ஞானத்தை அடையமுடியும்.

* * *

இகலோகத்தில் பலவிதமான சௌக்கியங்கள் அனுக்கிரகம் செய்கிற அம்பாள், முடிந்த முடிவாக இந்த ஞானத்தை, மோட்சத்தை அருளுகிறாள். அவள் அநுக்கிரத்தால் தான் சம்ஸார பந்தத்திலிருந்து விடுதலையாகி மோட்சம் அடையலாம். அம்பாளை ஆராதிப்பதால் ஞானம் ஆவிர்பாவமாகி, அஞ்ஞானம் விலகி, மோட்சம் கிடைக்கிறது என்பது சாஸ்திரங்கள். ஸ்தோத்திரங்கள் எல்லாவற்றிலும் சொல்லப்பட்டிருக் கிறது. அம்பாளிடம் ப்க்தி பண்ணிப் பண்ணி இப்படிப் பரம ஞானிகளான பல மகான்களையும் அறிந்திருக் கிறோம்.

* * *

தெய்வங்களும், அவதார புருஷர்களும், மகான்களும் கூட அம்பாளை உபாசித்து அநுக்கிரகம் பெற்றிருக்கிறார்கள்.ஆதிசங்கர பகவத் பாதர்களும், காளிதாஸனும் அவளுடைய அநுக்கிரத்தாலேயே விசேஷ வாக்குச் சக்தி பெற்றார்கள். திருஞான சம்பந்தருக்கு அவளது க்ஷீரமே திவ்வியப் புலமை தந்தது.

* * *

தாயாரைத் தெய்வமாக நினைக்க முடியுமானால்

Koviloor Digital Library
இதையே திருப்பி வைத்துப் பார்க்கும் போது தெய்வத்தைத் தாயாராக நினைக்க முடியும். சர்வ லோகங்களையும் படைத்துக் காத்துக்கொண்டிருக்கிற மகா சக்தியைத் தாயாராக நினைக்கும்போது "அம்பாள்" என்கிறோம். எல்லாமாக ஆகியிருக்கிற பரமாத்மா நாம் எப்படி நினைத்தாலும் அப்படி வந்து அருள் செய்கிறது. எந்த ரூபமாகத் தியானித்தாலும் அப்படியே வந்து அநுக்கிரகம் செய்கிற கருணை பரமாத்மாவுக்கு உண்டு. அப்படி சாட்சாத் பரப்பிரம்மை தாயாகி, அம்பிகையாய் இருந்து கொண்டு நமக்கு அநுக்கிரகம் செய்ய வேண்டுமென்று நாம் பிரார்த்தித்தால் அவ்விதமே வருகிறது.

பாகவதத்தில் பரசுராமரின் தீர்த்தயாத்திரையின் போது அவர் காஞ்சிபுரத்துக்கு வந்ததைக் கூறுகையில் காமகோடிபுரியான காஞ்சிக்கு (காமகோடி புரீம் காஞ்சீம்) என்றே சொல்லி இருக்கிறது காஞ்சிபுரத்தில் ஏராளமான சிவ, விஷ்ணு ஆலயங்கள் இருந்தாலும், அம்பாளின் காமகோடி புரியாகவே அது ஆதிகாலத்திலிருந்தே விசேஷிக்கப்பட்டிருக்கிறது என்று இதிலிருந்து தெரிகிறது.

சுந்தர மூர்த்தி சுவாமிகள் காஞ்சீபுரத்தில் உள்ள ஒண காந்தன் தளியில் பாடும்போது.

'வாரிருங்குழல் வால்நெடுங்மண் மலைமகள்,
மதுவிம்மு கொன்றைத்
தாரிரும் தடமார்பு நீங்காத் தையலாள்
உலகுள்ள வைத்த
காரிரும்பொழில் கச்சி மூதூர்க் காமகோட்டம்
உண்டாக நீர்போய்
ஊரிடும் பிச்சை கொள்வதென்னே,
ஓணகாந்தன் தளியுளீரே'

என்கிறார்.

Koviloor Digital Library

இந்தத் 'தளி' அல்லது கோயிலுக்குத் தனியாக அம்பாள் இல்லாததால்தான், "உலகுக்கெல்லாம் சோறு போடுகிற காமகோட்டத்துக் காமாட்சி இருக்க, நீ ஏண் பிஷாடனனாகக் கப்பரையோடு திரிகிறாய்?" என்று பரமேசுவரனைக் கேட்கிறார்.

* * *

இந்த லோகத்தில் பிறந்தவர்கள் எப்படியும் மரணம் அடையத்தான்வேண்டும். எல்லோரும் சேர்ந்தாற்போல செத்தல் நல்லதுதான். சாகிறதென்றால் எப்படிச் செத்தாலும் சாவுதான். ஆனாலும் அதில் வித்தியாசம் உண்டு. சாகாமல் இருப்பதற்கு அம்பாளுடைய சரணார விந்தத்தை அடையவேண்டும் அம்பாளுடைய சரண கமலத்தைக் காட்டிலும் சாந்தி அளிக்கக்கூடியது வேறு ஒன்றுமில்லை. அந்த மாதிரி பூரணம் அடைந்த பிறகு ஏற்படுகிற மரணம் மரணம் அல்ல. அதற்கு அமிருதம் என்று பெயர். செத்தும் சாகாதவர் அகாலம். மரணத்தை அதோடு நிறுத்தி விடலாம். அதற்குப் பிறகு அமிருதமாக இருக்கலாம். மிருதத்துவம் இல்லை. பூரணத்துவம் அடையலாம்.

* * *

உலகில் பௌத்தமதம், கிறிஸ்து மதம் இஸ்லாமிய மதம் எல்லாம் எப்போது உண்டாயின என்று காலம் தெரிகிறது. அதற்கு முந்தி உலகமே இருண்டு கிடந்தது. ஞானிகளே இல்லை. அஞ்ஞான மயமாக ஜனங்கள் ஆடுமாடுகளைப் போல் இருந்தார்கள் என்று சொல்ல முடியுமா? அப்படிச் சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். அதற்கு முந்தி உள்ள காலத்தை இருட்டுக் காலம் என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் சரித்திரத்தை நன்றாகப் பார்த்தால் அதற்கு முந்தியே வேதத்தை ஆதாரமாகக் கொண்ட வைதிகமதம் இருந்திருக்கிறது எனத் தெரிகிறது. உலகம் முழுவதும் இருந்திருக்கிறது. ஆகையால் எங்கே பார்த்தாலும் வேதம்

Koviloor Digital Library
இருந்திருக்கிறது. வர வரக் குறைந்து இப்போது நாம் கடைசியாக அகப்பட்டுக்கொண்டிருக்கிறோம். இப்படிக் குறைந்ததற்கு நாமே காரணம். மதத்தை வளர்க்க எல்லோரும் ஒவ்வொரு நாளும் அம்பாளுடைய தியானத்தில் ஈடுபடுவதுதான் வழி.

* * *

வேதத்தில் ஒரு வாக்கியம் இருக்கிறது, மரம் பூத்தால் வண்டுகள் தாமாகவே அதிலே போய் இருக்கும் அவைகளைப் போங்கள் என்று யாரும் சொல்ல வேண்டியதில்லை. நம்மை நாமே ஒவ்வொரு வரும் சோதித்துப் பார்த்துக் கொண்டு வந்தால் நம்மில் எவனாவது ஒருவன் பூரணத்துவம் அடைந்து விட்டால் போதும்; லோகம் எல்லாம் அவன் வழிப்படி நடக்கும். இதற்குப் பிரசாரம் பண்ண வேண்டாம். பின் எதற்கு இப்படியெல்லாம் உபந்நியாசம் பண்ண வேண்டு மென்றால், ஏதோ தற்கால சாந்தியாக உங்களுக்கெல்லாம் திருப்தி உண்டாக வேண்டும் என்பதற்காகச் செய்கிறேன். இந்த நேரத்தில் நாம் எல்லாம் அம்பாளுடைய சரணாரவிந்தத்தைத் தியானம் பண்ணலாம். அப்படிப் பண்ண ஆரம்பித்து விட்டால் ஒரு நாளும் நம் மதத்திற்குக் குறைவு வந்தால் அது இன்னொரு மதத்தினால் வராது. நம்முடைய அநுஷ்டானக் குறைவினால் தான் வரும். உடம்பில் சக்தி குறையும் போது நோய் வருகிறது. வியாதி வருவதற்கு நம்முடைய பலஹீனந்தான் காரணம்.

* * *

காமாக்ஷி ஞானப் பிரதானமான தெய்வம் மட்டு மில்லை, ஞானப்பால் தருவதோடு அன்னபூர்ணேசுவரியாக உலகுக்கெல்லாம் சோறும் போடுகிறாள். இரு நாழி நெல்லைக் கொண்டு அவள் முப்பத்திரண்டு அறங்களை யும் ஆற்றினாள் என்று தமிழ் நூல்கள் சொல்லும் அவள் நமக்கு சோறு போடுவாள். நம் காமனைகளை எல்லாம் கடாக்ஷத்தால் நிறைவேற்றித் தருவாள்.

* * *

Koviloor Digital Library

பரமேசுவரனிடம் தம்மீது மோகத்தை உண்டாக்கினாள் காமாக்ஷி. எதற்காக? மனுஷ்யர்களின் மோகத்தை அவர் அடக்கி, அவர்களுக்கு ஜனன நிவிருத்தி தரவேண்டும் என்பதற்காகவே! கலப்பில்லாத ஞானமயமாக இருக்கிற ஈசுவரனை லோகக்ஷேமத்துக்காக மோதிக்க வைத்த சிவகாம சுந்தரி அவள். இப்படிப்பட்ட நீயே மோகத்தில் மூழ்கிக் கிடக்கிறவர்களைக் கைதூக்கி மோக்ஷம் தருகிறாயே, என்ன ஆச்சர்யம்! என்று பாடுகிறார் மூகர்.

* * *

ஈசுவரனை எப்போதும் அம்பாளோடு சேர்த்து தியானிக்கவேண்டும். ஈசுவரனை சிவன் எனப்படுகிறார். அம்பாளுக்கு சிவா என்று பெயர். வேதத்தில் ஸ்ரீ ருத்ரம் சொல்கிறது. பயங்கரரூபம் கொண்ட ருத்திரனும் பரம மங்களமான ஒரு ஸ்வரூபம் உண்டு. இதற்கு சிவா என்று பெயர். அந்த சிவாதான் உலகதாபத்துக்கெல்லாம் ஔஷதமாக இருக்கிறது. ருத்திரனுக்கும் ஔஷதம் அந்த சிவாவே. ருத்ரன் ஆலஹாலத்தை உண்டும் பிழைத்திருப்பதற்குக் காரணம் அந்த சிவா என்கிற அம்பாளான மிருத ஸஞ்சீவினிதான்.

* * *

பராசக்தியின் மற்றொரு உருவமே திருமால். பராசக்தியை விட்டுப் பிரிக்க முடியாத ஆதாரப்பொருளே சிவம். எல்லாவற்றுக்கும் உள் நின்று இயக்குகிற அந்த சக்தியை நாம் பக்தி செய்தால் தாயாக வந்து ஞான பால் கொடுத்து நம்மை ரக்ஷிக்கின்ற அம்பாளாகிறாள் அவளது அநுக்கிரகம் இல்லாவிட்டால் நாம் சவத்துக்குச் சமம் தான். நாம் செய்கிறதாக நினைக்கிற சகல காரியங்களுக்கும் எண்ணங்களுக்கும் அவள் தருகிற சக்திதான் காரணம். எவருக்குமே நம் சக்தியினாலேயே காரியங்களைச் செய்து கொள்கிறோம் என்று அகம்பாவப்படக் கொஞ்சம் கூட நியாயம் இல்லை. நம்மை நடத்தி வைக்கும் அந்த பராசக்தியை நினைத்து நாள்தோறும் ஒரு நிமிஷமாவது

Koviloor Digital Library

என் சிறு சக்தி அவளிடமிருந்து தெறித்த திவலைதான்; இதை உன் சித்தப்படியே நடத்திவையம்மா என்று அர்ப்பணம் பண்ணுவோம்.

* * *

உணர்ச்சிகள் வேரூன்றாமல் குழந்தைகள் போல் நாமும் ஆனந்தமாக இருக்க வேண்டும். இதனால்தான் உபநிஷதமும் குழந்தையாய் இரு என்கிறது. சாக்ஷாத் பராசக்தியைக் காத்யாயனியாகவும் மகாலக்ஷ்மியை பார்கவியாகவும் குழந்தைகளாக்கி அந்த பாவத்திலேயே வழிபட்டால் நமக்கும் குழந்தைத் தன்மை சாக்ஷாத் கரித்து விடும்.

இந்த நாளில் வாட்டர் ப்ரூஃப் என்று சொல்வது போல, நாம் காம ப்ரூஃப், குரோத ப்ரூஃப், சோக ப்ரூஃப், எல்லாமாக, சாந்தமாக ஆவோம். குழந்தை ரூபத்தில் இருந்தாலும் ஞானப்பாலூட்டும் ஸ்ரீ மாதாவாக இருக்கிற தேவி நமக்கு இந்த அநுக்கிரகத்தைச் செய்வாள்.

* * *

நாம் ஏதோ சாதித்து விட்டதாக நினைத்து அவ்வப்போது வெற்றிவிழாக் கொண்டாடுகிறோம். இப்போது நம் தேசத்தில் இது ரொம்ப ஜாஸ்தி. கொஞ்ச நாள் கழித்துப் பார்த்தால் அந்த வெற்றி எங்கே போச்சு என்றே தெரிவதே இல்லை. வேறு யாரோ வெற்றி விழாக் கொண்டாடுகிறார். அப்புறம் அவர்கள்கதையும் மாறிப் போகிறது. மாறாத ஜயம் ஆத்ம ஜயம் தான்.அந்த ஜயமும் சரி, மற்ற லௌகிக வெற்றிகளும் சரி, பரதேவதையின் கிருபையாலேயே கிடைப்பவை.

* * *

நாம் கேட்காவிட்டாலும் அம்பாளை உபாசித்து விட்டால் அவளே அநேக அநுக்கிரகங்களைப் பண்ணுகிறாள். முதலாவதாக நல்ல புத்தி உண்டாகிறது. மனசில் நல்ல எண்ணங்களே உண்டாகின்றன. நல்லதைச் செய்வதற்கான வழி புத்தியிலே பளீரென்று பிரகாசிக்கிறது.

Koviloor Digital Library

லோக க்ஷேமத்தைச் செய்வதற்கான வழி புத்தியிலே பளீரென்று பிரகாசிக்கிறது லோக க்ஷேமத்தைச் செய்வதற்கான திரவிய பலமும் தானே கிடைக்கிறது. எல்லாரிடத்திலும் சமமான அன்பு உண்டாகிறது. மனசில் இந்த அன்பு ஊறாமலே வாய்ப்பேச்சில் இன்று சகோதர சகோதரிகளே என்று பிரசங்கம் பண்ணி சமத்துவத்தைப் பற்றி நிறையப் பேசுகிறோம். அம்பாளிடம் பக்தி பண்ணாத வரையில் இது அநுபவித்தில் வராத வாய்ச் சவடால்தான்.

* * *

எல்லாம் சமமாகத் தெரிகிற ஞானநிலையின் உச்சிக்கே அம்பாளின் அநுக்கிரகம் நம்மைக் கொண்டு சேர்க்கிறது. அவள் அம்மா; அவளுடைய குழந்தைகளே நாம் எல்லோரும் என்பதற்கு மேலே ஒரு படி போய், அம்மா, குழந்தை என்கிற வித்தியாசம் கூட போய் எல்லாமே அவள்தான் என்று தெரிகிறது. ஒரு சக்திதான் இத்தனையும் ஆகியிருக்கிறது. ரூபங்களில் தான் பேதம், உள்ளே இருக்கிறது ஒன்றுதான், என்கிற பரம அத்வைத ஞானம் சித்திக்கிறது. இதைத்தான் மூகர் சொல்கிறார். சிவசிவ பச்யந்தி சமம் என்கிற சுலோகத்தில் காமாக்ஷியின் கருணாகடாக்ஷ வீக்ஷண்யம் பெற்றவனுக்குக் காடும் வீடும் சமமாகத் தெரிகின்றன. சத்ருவும் மித்ரரும் சமமாகத் தெரிகின்றனர் என்கிறார்.

* * *

சாக்ஷாத் ஜகன் மாதாவைத் தெரிந்துகொண்டால் அதன்பின் நமக்குள் வெறுப்பு, துவேஷம் வரவே வராது. தப்புக் கண்டுபிடிக்க வராது. தப்பு நடக்கிறபோது கூட அதைப் பரிவோடு திருத்துகிற மனப்பான்மை வருமே தவிர, தப்பைப் பிரகடனம் பண்ணிச் சண்டையில் இறங்கத் தோன்றாது. அம்பாளை உபாசித்தால் லோகம் முழுக்க ஒரு குடும்பம் என்ற அன்பு உணர்ச்சி உண்டாகிறது. சத்துரு சிநேகிதன் என்கிற வித்தியாசமே காமாக்ஷியின் கடாக்ஷம் பெற்றவர்களுக்கு இராது என்கிறார் மூகர்.

* * *

Koviloor Digital Library

காமாக்ஷி, மீனாக்ஷி, விசாலாக்ஷி என்கிறபோது அக்ஷி என்பது அவளது கண் விசேஷத்தையே சொல்கிறது. காமாக்ஷியின் கைகளில் மன்மதனின் வில்லும் அம்பும் இருப்பதாகச் சொல்கிறோம். அவளுடைய கைகளில் மட்டுமில்லை கண்களிலும் கூட இவையே இருக்கின்றன என்று ஆசார்யாள் ஸௌந்தர்ய லஹரியில் கவித்தை நயத்தோடு சொல்கிறார். என்ன சொல்கிறார்?

அம்பாளுடைய புருவம் கொஞ்சம் நெரிந்திருக்கிறதாம். கவலை இருந்தால்தான் புருவம் தெரியும். லோக மாதாவுக்கு ஜனங்கள் எல்லாரும் கெட்டுப் போகிறார்களே, அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற கவலை. அதனால் புருவம் வளைந்திருக்கிறது. அம்பாளுடைய பரம லட்சணமான புருவங்கள் வில் மாதிரி இருக்கினறன. இரண்டு வளைந்த பாகங்களைக் கொண்ட தநுசைப்போல் அவை உள்ளன. ஆனால் புருவ மத்தியில், அதாவது நாசி தொடங்கும் இடத்துக்கு மேலே ரோமம் இல்லை. ரோமம் இருந்தால் அது உத்தமமல்ல, சாமுத்திரிகா லக்ஷணம் ஆகாது. கூடின புருவம் கெடுதல் உண்டாக்கும் என்பார்கள். அம்பாளுடைய புருவங்களின் மத்தியில் ரோமமில்லாதது உத்தம ஸ்திரீ லட்சணம்தான். ஆனால் இது புருவங்களை வில்லுக்கு உவமிக்கும்போது அவ்வில்லுக்கு நடுவே ஊனம் செய்தாற்போல் தோன்றலாம்.அப்படி ஊனம் தோன்றாமல் ஆசார்யாள் ஒரு காரணம் சொல்கிறார்.

வில் என்று ஒன்று இருந்தால், அதை எய்கிறவன், அதன் மத்தியில் தன்முஷ்டிகளால் அதைப் பிடித்து கொண்டு தானே நாணில் அம்பு பூட்டி இழுப்பான்? முஷ்டி பிடித்திருக்கிற இடம் வில்லின் இரண்டு பாகங்களுக்கு மத்தியில் அந்த வில்லை மறைக்கத்தானே செய்யும்? இப்படிதான் அம்பாளின் புருவ வில்லையும் எவனோ மத்தியில் பிடித்துக் கொலண்டு அம்பை பூட்டுகிறான். அவனுடைய முஷ்டி உள்ள அந்த மத்ய பாகம்தான் ரோமம் இல்லாத இடைவெளி என்கிறார்.

* * *

Koviloor Digital Library

இப்படி அம்பாளின் புருவத்தை வில்லாக வளைப்பவன் யார்? மன்மதன்தான். அவனுடைய கரும்பு வில் போலத்தான் கருணையால் வளைந்த லோகமாதாவின் புருவம் இருக்கிறது. மன்மதனுடைய வில்லுக்கு வண்டுகள் தானே நாண் கயிறு? அதற்கேற்றாற் போல் இந்த புருவத்துக் கீழே அம்பாளுடைய வண்டு விழிகள் இப்படியும் அப்படியும் ஓடிக் கொண்டிருக்கின்றன.

* * *

மின்னல் போல் தோன்றி மறைந்து விடுகிறது மா; ஐசுவர்யம், ஆனால் தோன்றுகிறது. அப்படித் தோன்றுவானேன்? இல்லாதது ஒன்று எதற்காகத் தோன்ற வேண்டும் என்ற சந்தேகம் எழுகிறது. அது தோன்ற வில்லை என்றால் நமக்கு ஆனந்தம் இல்லை; ஊக்கம், உற்சாகம் ஒன்றுமே இல்லை, அப்படி அகண்ட ஆனந்த ஸ்வரூபமாக, கண்ணுக்கும் தெரியாமல், காதுக்கும் கேட்காமல் மிகமிகச் சூக்ஷ்மமாக நிராகாரமாக இருக்கும் படியானது நமக்கு ஆனந்தம் கொடுப்பதற்காகத் தான் உருவம் உடையதாகத் தோன்றுகிறது. அது தான் அம்பிக்கையின் ஸ்வரூபம்?

ஓர் இடத்தில் மாத்திரம் இருக்கும் படியான உருவ வஸ்துவா அது? அப்படி இருந்தால் அது கண்ணுக்கு தெரியும். எங்கும் நிறைந்து இருந்து விட்டால், பரம சூக்ஷ்மமாக இருந்தால், எப்படித் தெரியும்? காற்றே கண்ணுக்குத் தெரியவில்லை அதைக் காட்டிலும் சூக்ஷ்மமானது ஆகாசம். அதைக் காட்டிலும் சூக்ஷ்மமாக அம்பாளுடைய ஸ்வரூபம் இருப்பதால் அது நமக்குத் தெரிவதில்லை. இல்லாதது தோன்றாமலே இருந்து விடட்டுமே? இல்லாத வஸ்துவைத் தோன்ற வைப்பானேன்? தோன்றாமலேயே இருக்கலாம். ஆனால் இந்த அல்பமான மனசுக்கு ஒரு பிடிப்பு வேண்டுமல்லவா? தோன்றினால்தான் ஆனந்தம் உண்டாகிறது.

* * *

Koviloor Digital Library

நெய் திரவமாக இருக்கிறது. அதற்கு வர்ணம் இல்லை. கொஞ்சம் சீதளம் ஆகிவிட்டால் வெளுப்பு வர்ணம் உண்டாகிறது. கொஞ்சம் மாறி, குளிர் அதிகமாகிச் சீதளம் அதிகமாகிவிட்டால் கையில் அப்படியே தூக்கி விடலாம்; ஒட்டுவதுகூட இல்லை, கையில் ஒட்டாமல் அப்படியே பாளம் பாளமாக எடுக்க முடிகிறது.அப்படிப் பக்தர்களுடைய இருதயத்தில் அன்புச் சீதளம் அதிகமாகிவிட்டால் அகண்டாகாரமாக, உருவம் இல்லாததாக இருக்கும் படியான பரமாத்ம ஸ்வரூபம் நமக்காகக் காடின்யத்தை அடைந்து ஓர் உருவத்தை எடுத்துக் கொண்டு அநுக்கிரஹம் பண்ணுகிறது என்று சொல்லியிருக்கிறார் ஆசாரியரவர்கள்.

* * *

அம்பாளுடைய சிரசில் ஒரு வகிடு இருக்கிறது சிரஸின் நடுவில் போகும் ஒரு கோட்டுக்குத்தான் வகிடு என்று பெயர். தலையின் மத்தியில் கூந்தலை சரியாக இரண்டாகப் பிரிக்கும்படியாக வெள்ளை வெளேர் என்று ஒரு கோடு போகும். பழைய காலத்தில் குங்குமம் வைக்கிறது என்றால் முதன் முதலில் அங்கேதான் வைத்துக் கொள்வார்கள். நெற்றியில் இட்டு கொள்வது அப்புறந்தான். இந்த வகிட்டுக்குத்தான் சீமந்தம் என்று பெயர். கர்ப்ப ஸ்திரீகளுக்கு எட்டாவது மாதத்தில் சீமந்தம் என்று மந்திரோக்தமாக ஒரு சடங்கு செய்வது வழக்கம். சீமந்தம் செய்வதென்றால் வகிடு பிளக்கிறது என்று அர்த்தம். கங்கணதாரணம்- வளைகாப்பு என்று ஒன்று, சீமந்தம் என்று ஒன்று.

* * *

சூரியன் உதயம் ஆகவேண்டியதுதான்; அதுவும் செக்கச்செவேல் என்று உதயமாகிற பால சூரியனைக் கண்டாலே போதும், இருட்டு எல்லாம் இருக்கிற இடம் தெரியாமல் ஓடிப் போய்விடும். ராத்திரி முழுவதும் எங்கே பார்த்தாலும் சூழ்ந்து கொண்டு கன்னங்கறேல்

Koviloor Digital Library

என்று இருந்தது, பாலசூரியன் உதயம் ஆக ஆரம்பித்த உடனே எங்கே போயிற்று, எங்கே புதைந்துகொண்டது என்று சொல்ல முடியாமல் எங்கோ ஓடிப்போய்விடுகிறது. ஆகையால் இருட்டுக்கு மகா சத்துரு சூரியன், பெரிய சூரியன் கூடச் சத்துரு இல்லை. பால சூரியன் உதிக்க ஆரம்பித்தவுடனே இருட்டுப் போன இடம் தெரியாது போய்விடுகிறது. ஆகவே, செக்கச்செவேல் என்று இருக்கும் பாலசூரியனே இருட்டுக்குச் சத்துருவாக இருக்கிறான்.

இந்த இருட்டு எல்லாம் யோசித்ததாம். நாம் ஏதாவது ஓர் இடத்தில் இருந்துகொண்டு இந்தப் பால சூரியனை வளைத்துக்கொண்டு எங்கே இப்போது உன் கைவரிசையைக் காட்டு. பார்ப்போம். என்று எதிருக்கு எதிராக இருந்து சொல்லவேண்டும் என்று எண்ணியதாம். அதற்காகத்தான் அத்தனை இருட்டுமாகச் சேர்ந்து அம்பாளுடைய கேசத்தில் வந்து கன்னங்கறேர் என்று புகுந்து கொண்டிருக்கிறது அம்பாளுடைய சீமந்தத்தில் செக்கச் செவேல் என்று குங்குமம் இருக்கிறதல்லவா? அது பால சூரியனைப் போல இருக்கிறது. செக்கச்செவேல் என்று சீமந்தத்தில் இருக்கும் பால சூரியனைச்சுற்றிக் கொண்டு அங்கு இங்கு அசைய முடியாதபடி கேசத்தில் வந்து கன்னங்கறேல் என்று புகுந்து கொண்டிருக்கிற இருட்டுஎல்லாம், எங்கே உன் கைவரிசையைக் காட்டு பார்ப்போம் என்று மிரட்டுகிற மாதிரி இருக்கிறதாம்.

* * *

"மூக பஞ்ச சதி"யின் ஆர்யா சதக சுலோகமொன்று காமாட்சியை சரஸ்வதியாகவே பாவிக்கிறது. விமலபட என்று அது ஆரம்பமாகிறது. அதாவது, மாசு மறுவே இல்லாத தூய வெள்ளைக் கலை உடுத்தியிருக்கிறாள் என்கிறார். காச்மீரம் முழுவதுமே இப்படித்தான் வெண்பனி மலைகளால் மூடப்பட்டு சரஸ்வதிமயமாக இருக்கிறது. சரத் காலத்தின் விசேஷமும் இதுதான். சரஸ்வதி அநுக்ரஹிக்கிற உண்மையான "வித்யை" சரத்கால

Koviloor Digital Library

சந்திரனைப் போலவும், சரக் கால மேகத்தைப் போலவும் தாபசாந்தியாக, தூய்மையாக இருக்கும். வெறும்படிப்பு பலவிதமான தாபங்களையே உண்டாக்குகிறது மெய்யறிவே தாப சாந்தியைத் தரும்.

* * *

பிரம்மாவின் பத்தினி என்று வாக்தேவியைச் சொல்கிறார்கள். பிரம்மா உலகைச் சிருஷ்டிப்பது போல், கவிகளுக்குக் கற்பனா சிருஷ்டி சக்தியைத் தருகிறவள் சரஸ்வதி. செல்வத்தைத் தருகிற மகாலக்ஷ்மியை லோக பாலகனான மகாவிஷ்ணுவின் சக்தியாகச் சொல்வதும் சரி, சம்ஹார மூர்த்தியான ருத்ரனின் சக்தியாக இருக்கிறாள் பார்வதி. இந்த மூன்று காரியங்களுக்கும் மேலே இருக்கிறாளே, பராசக்தியான காமாட்சி! இவளே யாருடைய பத்னியாகச் சொல்வது? பரப்பிரம்ம பத்தினி என்றே சொல்லவேண்டும்.

* * *

ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர்கள் சௌந்தர்ய லஹரி சுலோகம் ஒன்றில் சொல்கிறார். அம்பிகே! நிர்குணப் பிரம்மம் தனக்கென்று எந்த வர்ணமும் இல்லாத ஸ்படிக ஈசுவரனாக இருந்தது. இதில் இடப்பக்கத்தை நீ திருடிக் கொண்டாயாம். அப்படிப் பார்த்தாலும் உனக்கு ஒரு பாதி உடம்பு தானே இருக்கவேண்டும்? ஆனால் பதியின் பாதி சரீரத்தைத் திருடிக்கொண்டதிலும் உனக்குத் திருப்தி உண்டாகவில்லை. பாக்கி பாதி தேகத்தையும் நீயே ஆக்ரமித்துக் கொண்டு விட்டதாகக் காண்கிறது.

அதனால்தான் பூரண ஸ்வரூபமாகச் செக்கச் செவேலென்று காமேசுவரியான இருக்கிறாய், பரமேசுவரனுக்கு உரிய நெற்றிக்கண், சந்திர கலை எல்லாவற்றையும் நீயே ஸ்வீகாரம் செய்துகொண்டு விட்டாய் என்கிறார்.

* * *

Koviloor Digital Library

அம்பாளைப் பிரகிருதி, மாயை என்று சொன்னதோடு நிற்கவில்லை. புருஷன் அல்லது மாயையின் சக்தியும் இதே காமாட்சிதான். அவனோடு அபேதமாக அபின்னமாக இருக்கப்பட்ட வஸ்து இவள். இருவரும் ஒன்றே, அத்வைதமாக இருக்கிறார்கள். வேதங்களின் பரம தாத்பரியம் அத்வைதம். அந்த அத்வைதத்தின் ரூபமாகவே காஞ்சிபுரத்தில் காமாட்சி பிரகாசிக்கிறாளாம்! ஐதம்பர்யம் சகாஸ்தி நிகமானாம், என்கிறார் மூகர்.

❋ ❋ ❋

அம்பாள் யார் தெரியுமா? எல்லாவற்றையும் தெரிந்துகொள்வதோடு கூட, எல்லாவற்றையும் ஆலோசிக்கிற மதி என்று ஒன்று இருக்கிறதே, அந்த மதிதான் அம்பாள்.

❋ ❋ ❋

பாசம் என்பதுதான் அஞ்ஞானம். பாசத்தினால் கட்டப்பட்டிருக்கிற நாம் பசு. ஆண்டவன் பதி; பாசத்தை அறுப்பவன்; அஞ்ஞானத்தை நிவர்த்தி செய்பவன் ஆண்டவன். அதனால்தான் அவனுக்குப் பசுபதி என்று நாமம் ஏற்பட்டது. பாசத்தினால் கட்டப்பட்டு இருக்கிறவரைக்கும் நமக்குப் பசு என்று பெயர் .பாசத்தை அறுத்துவிட்டால் நாம் பதியோடு சேர்ந்து விடுவோம் அம்பிகையினுடைய தியானமானது இந்தப் பாசத்தை நிவர்த்தி செய்து அவளுடைய சரணாரவிந்தத்தில் அணையும் பெரும்பேற்றைக் கொடுக்கும்.

❋ ❋ ❋

பூர்ணமாக சரஸ்வதி கடாக்ஷத்தால் அறிவு, யதேஷ்டமான ஐசுவரியம், அபூர்வமான தேஜஸ், பரிபூர்ணமான ஞானம் எல்லாம் அம்பாளைத் தியானிப்பவர்களுக்குக் கிடைக்கும். அதனால் அஞ்ஞானம் நிவர்த்தியாகி, அகண்ட ஆனந்த ஸ்வரூபத்தை அநுபவிப்பார்கள்.

❋ ❋ ❋

Koviloor Digital Library

நாம் ஒவ்வொரு நாளும் சாப்பிடவேண்டி இருக்கிறது. அதற்காகச் சம்பாதிக்க வேண்டி இருக்கிறது. இவையெல்லாம் முக்கியமான காரியங்களே என்றாலும் அநாவசியமான காரியங்கள் எத்தனையோ செய்கிறோம். அவசியமான காரியங்களைக் காட்டிலும் அநாவசியமான காரியங்களையே அதிகமாக நினைக்கிறோம். இம்மாதிரி அநாவசியமான காரியங்களிலும் பேச்சிலும் ஈடுபடுகிற நேரத்தில் அம்பிகையை நினைத்துக் கொண்டிருந்தால் நம்முடைய அஞ்ஞானம் நிவர்த்தியாகும்.

அம்பாள் எப்போதும் ஞானப்பார்வை நம் இருதயத்துக்குள் ஊட்டிக் கொண்டிருப்பாள், நாக்குக்கு இன்பம் ஊட்டுகிற பால் அல்ல அது. இதயத்துக்கு ஆனந்தம் ஊட்டுகிற பால் அது. அந்தத் தாயார்கொடுக்கிற பால் ஞானப்பால்தான். அம்பிகையை ஸ்மரித்துக்கொண்டே இருந்தோமானால் அவள் ஞானப்பாலை ஊட்டி; அஞ்ஞானத்தைப் போக்கி ஆத்மாவினுடைய பசியைத் தீர்த்து விடுவாள். வயிற்றுப்பசி மாத்திரம் அல்ல; ஆத்மாவின் பசியும் தீர்ந்துவிடும். அதனால் நல்ல குணங்கள் உண்டாகும். ரோகம் வராது. இப்போது ஞானம் இல்லாமல் மனம் அலைவதனால்தான் பல கெட்ட காரியங்களைச் செய்கிறோம். அதனால் ரோகம் வருகிறது. மனக்கிலேசம் துக்கம் எல்லாம் உண்டாகின்றன. சாட்சாத்அம்பாளை நினைத்துக் கொண்டிருந்தால் ஞானப்பாலை ஊட்டி, நமக்குச் சதா ஆனந்தம் உண்டாகும்படியாக அநுக்கிரகம் செய்வாள்.

* * *

படைப்பு, காப்பு, அழிப்பு மூன்றுக்கும் ஆதாரமாக இருப்பது ஒரு பராசக்தி. இம்மூன்றைக் கடந்த பின் நாலாவதாக உள்ள துரீயத்தையே சதுர்த்தம் என்றும், சிவம் என்றும், அத்வைதம் என்றும், சாந்தம் என்றும் மாண்டூக்ய உபநிஷத் சொல்கிறது. அதையே பிரம்மம் என்கிறோம். அதைத் தவிர இரண்டாவதாக வேறெதுவும் இல்லாததால் அது அத்வைதம் அப்போது அதற்கு நிறமும்

Koviloor Digital Library

இல்லை. சுத்த ஸ்படிகமாக இருக்கிறது. ஸ்படிகமான இந்தச் சிவஸ்வரூபமே தான் செக்கச் சிவந்த காமேசுவரியாக காமாக்ஷியாகவும் இருக்கிறது.

ஏகமாக இருந்த ஒன்று பலவாகத் தோன்றுகிற சக்தியாகும்போது காமேசுவரியாகிறது. பலவாகத் தோன்றுவதோடு, அவற்றையெல்லாம் ரக்ஷிக்கிற பரம காருண்யமுள்ள மாதாவாகவும் அது இருக்கிறது. பலவாகத் தோன்றுகிற ஜகத்தையே ஜீவர்கள் சத்தியமாக நினைத்து மயங்க வைக்கிற மாயையும் அதுதான். இந்த மாயையிலிருந்து ஜீவர்களை விடுவித்து ஏகமான அத்வைத ஸ்வரூபத்தில் கரைக்கிற ஞானாம்பிகையாகவும் அதுவே இருக்கிறது. அதன் மகிமை இப்படி நம்மால் புரிந்துகொள்ள முடியாதபடி பல தினுசாக இருக்கிறது.

* * *

ஒன்று இருந்தால் மட்டும் பிரயோஜனமில்லை தான் இருக்கிறோம் என்று அறிந்தால்தான் பிரயோஜனமுண்டு. தான் உள்ளதாகவே உணராத ஒன்று இருந்தும் இல்லாத மாதிரிதான். ஸத்தாகிய பிரம்மத்திற்கு, தான் இருப்பதாக அறிவு இருப்பதால் தான் தன்சக்தியை இத்தனை தோற்றங்களாகக் காட்ட முடிகிறது. இப்படியாக ஸத் தன்னைத்தானே அறிந்து கொள்வதைத்தான் சித் என்கிறோம். ஞானம் என்றும் அறிவு என்றும் சொல்வது அதைத்தான்.

'ஸத்' என்பது ஈஸ்வரன் 'சித்' என்பதே அம்பிகை தன்னையே அறிந்துகொள்ளும்போதுதான் ஆனந்தம் என்கிற உணர்வு உண்டாகிறது. ஈசுவரனுக்கு அம்பாளும் காமேசுவரனுக்கும் காமாக்ஷியும் சேர்ந்து ஸத்-சித் ஆனந்த பிரம்மமாக இருக்கிறார்கள்.

* * *

காம-அன்பு; அக்ஷி-கண்; அன்பு பொங்கும் கண்களை உடையவள் காமாக்ஷி என்பதற்கு வேறு தத்துவார்த்தங்களும் சொல்வதுண்டு. அது இருக்கட்டும்.

Koviloor Digital Library
நேர் அர்த்தம் "காமக் கண்ணி" காமக்கண்ணி என்ற இந்தக் காமாக்ஷி நாமம் தமிழில் தொன்று தொட்டு இருந்து வந்திருக்கிறது. சங்க காலப் பெண் புலவர் ஒருத்திக்குக் காமக்கண்ணியார் நப்பசலையார் என்று பெயர். காமாக்ஷி வழிபாடு தமிழ் நாட்டில் ஆதி காலத்திலேயே இருந்ததால்தான் அந்தப் பெண்மணிக்கு இப்படிப் பெயர் வந்திருக்கிறது.

* * *

ஜலத்திற்கு நிறைவு சமுத்திரம், டம்ளரில், செம்பில், குடத்தில் அண்டாவில் கிணற்றில், குளத்தில் என்று ஒன்றை விட ஒன்று ஜாஸ்தியாக இருக்கிற ஜலம் கடைசியில் சமுத்திரம் என்று முடிகிறது. இப்படியே ஞானத்துக்கும், கிருபைக்கும் நிறைவான சமுத்திரம் பராசக்தி, நமக்குக் கொஞ்சம் அறிவு, கொஞ்சம் அன்பு இருக்கிறது. பிராணிகளுக்கு நம்மை விடக் குறைவு நம்மைவிட ஜாஸ்தி கிருபா சக்தியுள்ள தேவ ஜாதிகள் இருக்கின்றன. நம்மிலேயே மஹான்களானவர்கள் மகாஞானிகளாக, பரம காருண்யத்தோடு இருக்கிறார்கள். இந்தஞானம், கிருபை பூரணமாக நிறைந்த இடத்தைத் தான் ஸ்வாமி,பரமாத்மா, பராசக்தி என்று சொல்வது.

* * *

அத்வைதம் பரம ஸத்தியம், நாம் மனஸை நிறுத்தி விட்டு அந்த ஸத்தியத்தை அநுபவிக்க முடியுமானால் விசேஷம் தான். ஞானமார்க்கம் இதற்காக ஏற்பட்டது தான். ஆனால் நம்மில் பெரும்பாலோருக்கு அதில் போக முடியவில்லையே இதற்காக அழுது கொண்டேயிருக்க வேண்டியதுதானா? என்று தோன்றுகிறது. அப்புறம் அழ வேண்டாம். நம்மால் முடிந்த கர்மத்தையும் பக்தியையும் அழாமல் பண்ணிக் கொண்டிருந்தாலே போதும். ஸகலப் பிரபஞ்சங்களின் விவகாரங்களையும் நடத்திக்கொண்டிருக்கிற பராசக்தியின் சித்தப்படிதான் நமக்கு அத்வைத ஸித்தி உள்பட எந்த லக்ஷ்யமும் ஸித்திக்குமாதலால், நாம் இருக்கிற

Koviloor Digital Library

நிலையிலேயே நமக்கு ஒரு நிறையையும், இதற்கும்மேலே நிறைந்த நிறைவான அத்வைதத்தையும் கூட அந்தப் பராசக்தியின் அநுக்கிரஹத்தால் பெற்று விடலாம் என்ற தெளிவு உண்டாயிற்று அதைத்தான் இங்கே சொன்னேன்.

* * *

யாருமே இன்னொருவரிடம் தோற்றுப் போனால் அவமானம்தான் கொள்வார். ஆனால் இதற்கு ஒரு விதி விலக்கு உண்டு. சொந்தப்பிள்ளையிடம் தோற்றுப் போனால் மட்டும் அவமானத்துக்குப் பதில் பெருமையாகவே இருக்கும். புத்ராத் இச்சேத் பராஜயம் என்று இதையே சொல்வார்கள். இதற்கு அநுசரணையாக, பரமேசுவரனும் கூடத் தன்னாலேயே வதைக்கமுடியாத தாரகாதி அசுரர்களை தன் குமாரனான சுப்ரமண்யன் சம்ஹாரம் செய்ததில் பெருமையே கொண்டார். இதற்கு முன்னால் தக்ஷிணாமூர்த்தியாக மூல குரு மூர்த்தியாக இருந்த அவரே சுப்ரமண்ய ஸ்வாமியிடம் பிரணவ உபதேசம் வாங்கிக்கொண்டு, தன்னைவிட ஒருபடி பிள்ளையை உயர்த்திக் காட்டிய பெருமை அடைந்தார். இப்படியாக ஈசுவரனை ஞானம் வீரம் இரண்டிலும், தன்னை விடத் தானே அதிகப் பிரகாசமான ரூபமெடுத்துக் கொண்டு சுப்ரம்மண்யராக வந்ததற்குக் காரணம் அம்பாளின் சேர்க்கை தான். காமன் எரிந்த பின் அவள் கரும்பு வில்லும் மலர் அம்பும் தரித்துக் காமேசுவரியாக, இவரைத் தன்னிடம் அன்பு கொள்ள வைத்ததுதான் இத்தனைக்கும் காரணம்.

இந்தப் புராணக் கதைக்கு திருஷ்டாந்தமாகவே இன்றைக்கும் காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் ஆலயத்துக்கும், காமாக்ஷியம்மன் ஆலயத்துக்கும் நடுமத்தியில் குமரக் கோட்டம் என்கிற சுப்ரமண்யர் ஆலயம் இருக்கிறது. ஸோமாஸ்மந்த மூர்த்தத்தில் எப்படி ஈசுவரனுக்கும், உமாதேவிக்கும் நடுவில் ஸ்கந்தர் இருக்கிறாரோ, அப்படியே காஞ்சியில் காமாக்ஷியின் காம கோட்டம். அல்லது காமகோடிக்கும் ஏகாம்பரேசுவரரின்

Koviloor Digital Library
ஆலயமான ருத்ரகோடிக்கும் மத்தியில் குமரக் கோட்டம் இருக்கிறது.

* * *

அம்பாளுடைய கண்களிலிருந்து பொங்குகிற கடாக்ஷம் ஸ்ரீஆசார்யாளிடம், பூரணமாகப் பொலிந்து கொண்டிருந்தபோது அவரது வாக்கிலிருந்து ஒரு சுலோகம் வந்தது. இதுவும், ஸௌந்தர்ய லஹரி யில் இருக்கிறது, **த்ருசா த்ராகீயஸ்யாதரகளித நீலோத் பலருசா** என்ற சுலோகம், அவளுடைய கடாக்ஷம், இல்லாமல் அப்படிப்பட்ட அமிருதம் போன்ற சுலோகம் பிறக்க முடியாது.

ஆனால் இந்த சுலோகத்திலோ ஆசார்யாள் அம்பாளின் கடாக்ஷம் தமக்குள் கிட்ட வேண்டுமென்றே பிரார்த்திக்கிறார். நமக்குக்கூடக் கிட்ட வேண்டும். என்கிறார். பக்தியிலும் ஞானத்திலும் சிகரமாக இருந்தும் துளிக்கூட அகம்பாவமே இல்லாத நம் ஆசார்யாள்.

* * *

நீதான் பரமேசுவரனின் சரீரம் என்று ஸ்ரீசங்கர பகவத்பாதர்கள் அம்பிகையைப் பார்த்துச் சொல்கிறார். சரீரத்துக்குள் உயிர் இருக்கிறது. பல சரீரங்களுக்குள் பல உயிர்கள் இருக்கின்றன. இத்தனை உயிர்களுக்கெல்லாமும் உயிராக ஒரே மூல வஸ்துதான் இருக்கிறது. இந்த மூல வஸ்துவான பிரம்மம்தான் பரமேசுவரன் என்றால், அதன் இத்தனை தோற்றங்களுமே பராசக்தி!

இது அவ்வளவும் அதற்குச் சரீரமாகவும், அது இவற்றுக்கும் பிராணனாகவும் இருக்கிறது. பிரபஞ்சம், அதிலுள்ள ஜீவராசிகள் அவற்றின் மனசு, புத்தி, சித்தம் அகங்காரம் எல்லாம் பரமேசுவரன் என்ற உயிருக்குச் சரீரம் மாதிரி. இது அத்தனையும் ஸாக்ஷாத் அம்பாள் தான்.

* * *

Koviloor Digital Library

உடலும் உயிரும் மாதிரி பிரம்மமும் பிரம்ம சக்தியும் பிரியாமல் இருக்கின்றன. உடலில் உள்ள எல்லா இடங்களிலும் உயிர் ஓடுகிற மாதிரி பராசக்திக்குள் முழுக்க பிரம்ம தத்வமே தான் நிறைந்திருக்கிறது அந்த பிரம்மத்துக்கே ஓர் உடம்பு கொடுத்துப் பரமேசுவரன் என்று வைத்தால், அந்த உடம்புக்குச் சாத்திய கவசமாக இருக்கிறவள் அம்பாள். கர்ண கவசம் மாதிரி, பிரிக்கவே முடியாத கவசம்.

* * *

ஒன்று எங்கேயும் இருக்கிறது என்றால் அதற்கு தனி உருவம் எப்படி இருக்கமுடியும்? காற்று அநேகமாக எங்கேயும் செல்ல முடிகிறது. அதற்கு ரூபம் இருக்கிறதா? அம்பாளோ அதைவிட சூக்ஷ்மம். காற்று இல்லாத சூனியத்தை (அதாவது Vacuum வெற்றிடம்) கூட உண்டாக்குகிறார்கள். ஆனால் அவள் இல்லாத இடம் இல்லை. மனசு, எண்ணம் இதற்குள்ளும் இருக்கிறாள். அப்படியானால் அவளுக்கு எப்படி உருவம் இருக்க முடியும்?

ஆனால் இது நம் சாமானிய நிலையில் மனசுக்கு ஹிதமாக இல்லை. அவளிடமிருந்து நாம் வந்தோம் என்பதால், அவள் அம்மாவும் நாம் குழந்தைகளும் மாதிரி. அம்மா ஒருத்தி இருக்கிறாள் என்று குழந்தைக்குத் தெரிந்துவிட்டால் மட்டும் அது சந்தோஷப்படுமா? அவள் இருந்தால் மட்டும் போதாது, அவளைப் பார்க்கவேணும், பேசவேணும் என்று ஆசைப்படும், அவள் எல்லாரூபமாகவும் இருக்கிறாள் என்று நம்மால் உணர முடியவில்லை. அருவமாகவே அவளைத் தியானிக்க நமக்குப் பக்குவம் போதவில்லை. இப்படிப்பட்ட நமக்காகவே, நாம் அன்பு செய்வதற்காகவே, அவள் இப்போது காருண்யமும் லாவண்யமும் ஒரு ரூபமாகித் திவ்விய மங்கள விக்கிரமாக வருகிறாள்.

* * *

Koviloor Digital Library

அம்மா, பரமேசுவரன் உன்னை விவாகம் செய்து கொண்டது என் வெற்றிதான். ஆனால் அவர் என்னை சாம்பலாகச் சுட்டெரித்ததுதான் லோகப் பிரசித்தமா யிருக்கிறதே ஒழிய, நான் அவரை ஜயித்தது எங்குமே பிரகடனமாகவில்லை. எல்லோருக்கும் மாதாவாக இருக்கிற நீதானம்மா இந்தக் குழந்தையிடமும் கருணைகொண்டு, என்னை ஜயசாலி என்று பிரகடனப் படுத்த வேண்டும் என்று காமாட்சியைப் பிரார்த்தித்தான் மன்மதன்.

* * *

இதர க்ஷேத்திரங்களில் அம்பாள் சாந்நித்தியத்தை ஏற்படுத்திய காமாட்சி, மன்மதனின் வெற்றிற்குக் காஞ்சியில் மட்டும் சாசுவதமான அடையாளம் இருக்க வேண்டும் என்று கருணை கொண்டாள். அதனால் காஞ்சிபுரத்தில் மட்டும் எந்த சிவாலத்திலும் அம்பாள் சந்நிதி இருக்கலாகாது என்றும், மன்மதன், சிவனை ஜயித்ததற்கு அடையாளமாகக் காஞ்சிக்கு சிவஜித் க்ஷேத்திரம் என்று பெயர் வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டாள்.

இப்படிச் செய்தால் ஏன் இந்தக் காஞ்சி மண்டலத்தில் ஒரு சிவன்கோவிலில் கூட அம்பாள் சந்நிதி இல்லை? இதற்க ஏன் சிவஜித்க்ஷேத்திரம் என்று பெயர் இருக்கிறது? என்று எல்லோரும் யோசிப்பார்கள் அல்லவா? அப்போது புராணத்தை, அல்லது புராணம் பார்த்தவர்களைக் கேட்பார்கள். உடனே இது மன்மதனுக்கு அம்பாள் தந்த வரப்பிரஸாதம் என்று பதில் தெரியும். அதாவது மன்மதன் பிரார்த்தித்தபடி அவனுடைய வெற்றி என்றென்றும் லோகத்தில் விளங்கும். இப்படித் தீர்மானம் பண்ணி, அபசாரம் பண்ணின மன்மதனுக்கும் அநுக்கிரகம் செய்தாள் அம்பாள்.

இன்றைக்குக் கூட காஞ்சியில் எத்தனையோ சிவாலயங்கள் இருந்தும், காமாக்ஷி கோவிலைத் தவிர வேறு அம்பாள் சந்நிதியே கிடையாது.

* * *

Koviloor Digital Library

லோகத்தில் கணக்கு வழக்கே இல்லாமல் கஷ்டங்கள் இருக்கின்றன. எனக்குத்தான் தெரியும், ஜனங்களுக்கு எத்தனை தினுசான கஷ்டங்கள் இருக்கின்றன என்று. என்னிடம் வருபவர்களெல்லாம் ஏதாவது கஷ்டத்தைச் சொல்கிறார்கள். பூஜை, புனஸ்காரம், க்ஷேத்திராடனம், தீர்த்தாடனம் செய்கிறவர்களுக்கும் சொல்லி முடியாத கஷ்டங்கள் வருகின்றன.

இந்தச் சமயத்தில் சிலபேர் ரொம்பவும் மனசு வெதும்பி, ஐயோ! நான் இத்தனை பூஜை பண்ணினேனே! பக்தி வைத்தேனே! அம்பாள் எனக்குக் கஷ்டத்தையே தானே கொடுத்துக் கொண்டிருக்கிறாள்? கருணாமூர்த்தி கருணாமூர்த்தி என்று அவளைச் சொல்கிறார்களே, என் விஷயத்தில் அவளுக்குக் கண் இல்லையே என்று துக்கப்படுகிறார்கள். அம்பாளிடம் கோபம் கூட அடைந்து விடுகிறார்கள். ஆனால் என்னைக் கேட்டால் கஷ்டம் தருவதே அம்பாளின் கருணைதான். பார்க்கப் போனால் இது தான் பெரிய கருணை என்று தோன்றுகிறது.

* * *

நாம் இப்போது செய்கிற நல்லதை மட்டும் நினைத்துப் பார்த்து நமக்கு கஷ்டம் வருவது நியாயமா என்று பிரலாபிக்கிறோம். தெய்வத்தை நொந்து கொள்கிறோம். ஆனால் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், நாம் ஒவ்வொருத்தரும் நல்லது மட்டும்தானா செய்திருக்கிறோம்? நம்மை நாமே அலசிப் பார்த்துக்கொண்டால் நாம் எத்தனை தப்புகள் பண்ணியிருக்கிறோம், காரியத்தில் செய்யாவிட்டால் கூட மனசினால் எத்தனை மகாபாவங்களை பண்ணியிருக்கிறோம் என்று தெரியும்.

இதெல்லாம் இப்போதைய, அதாவது இந்த ஜன்மத்து விஷயம், இதற்கு முன் ஜன்மங்களில் நாம் என்ன செய்தோம் என்று நமக்கே தெரியாது. இந்த விதையைப் போட்டால் இந்தப் பயிர் வரும் என்கிறது அம்பாள்

Koviloor Digital Library

போட்ட சட்டம். பூர்வ ஜன்மங்களில் வினையை விதைத்திருக்கிறோம். அதற்கு அவள் தருகிற பலனை, கஷ்டத்தை இப்போது அறுவடை செய்கிறோம்.

வாஸ்தவத்தில் நம் தோஷங்கள், பாவங்கள் நமக்குத் தருகிற இத்தனை இத்தனை கஷ்டமும் கூடப் போதாது என்றுதான் ஆகும். அப்போது நாமே பச்சாதாபப் படுவோம். இத்தனை கஷ்டத்துக்கிடையில் அவளை நினைத்துக் கதிமோஷம் தேடிக்கொள்கிற வழி கொடுத்திருக்கிறாளே! அது அதிகப்படிகருணையல்லவா? நமக்கு லாயக்கு இல்லாவிட்டாலும் அவளர்கப் பொழியும் கருணை அல்லவா? இதைப் புரிந்து கொண்டு சந்தோஷப்படாமல், அவளையே குறை சொல்வது எத்தனை அநியாயம்? ஏற்கனவே பண்ணின தப்பெல்லாம் போதாது என்று அவளையே குறை சொல்கிற இந்தப் பெரிய தப்பையும் பண்ணுகிறோமே என்று உணருவோம்.

* * *

நம்முடைய பழைய தப்புக்கு அவள் தண்டனை தருவது நமக்குக் கஷ்டமாக இருக்கிறது. அதிலிருந்து விடுபட முடியவில்லை நமக்கு அந்தச் சக்தியும் இல்லை. கட்டிப்போட்டு விட்டாள் என்று குற்றம் சொல்கிறோம். குழந்தை மண்ணைத் தின்னப் போகிற மாதிரி நாம் அதே பழைய தப்புகளைப் பண்ணாமலிருப்பதற்காகதான் கஷ்டம் என்கிற கட்டை ஜகன் மாதா போட்டிருக்கிறாள். கஷ்டம் வந்தால் நாம் பூர்வத்தில் பண்ணின பாவத்தால இது வந்தது. ஆனபடியால் இந்த ஜன்மத்தில் தப்பு பண்ணினாலும் இது மாதிரியே கஷ்டங்கள் இனியும் வந்து கொண்டே இருக்கும்; அப்படித் தப்புப் பண்ணாமலிருக்கப் புத்தி தரவேண்டும் என்று. அம்பாளைப் பிரார்த்தித்துக் கொண்டேயிருப்பது தான் நமக்கு விமோசனம் என்று தெளிய வேண்டும்.

நாம் நல்லது என்று நினைக்கிற சௌக்கியங்களை அம்பாள் தருகிறபோது மட்டும் கருணை என்று நினைக்கிறோம். அவற்றைப் பெற நமக்கு யோக்கியதை

Koviloor Digital Library

இல்லாபோது கூட அவள் அநுக்கிரப்பதால் இதைக் காரணமில்லாத கருணை என்கிறார்கள். கஷ்டமோ ஒரு காரணத்துக்காக உண்டான கருணை. நாம் பூர்வத்தில் செய்த தப்பு அதற்குக் காரணம், இந்த மாதிரி இனி மேல் நாம் செய்யக்கூடாது என்று உணர்த்துவதற்காக, நம்மை நாமே நல்லவர்களாக்கிக் கொள்வதற்காகக் கஷ்டத்தைத் தருகிறாள்.

* * *

நல்லது என்று நாம் நினைக்கிற செளக்கியங்களால் பலவிதமான அனர்த்தங்களும் நமக்கே உண்டாகலாம். எனவே, நமக்கு செளக்கியம் தந்து நல்லதைச் செய்கிற கருணையைவிட, நம்மையே நல்லவர்களாக்கிக் கொள்ளச் செய்வதைக் காரணமாகக் கொண்டு கஷ்டத்தைத் தரும் கருணைத்தான் விசேஷமானது என்று எனக்குத் தோன்றுகிறது.

காரணமில்லாமல் நல்லதைக் கொடுப்பது அவளுடைய ஸ்வபாவமான கருணை என்றால், நம்மைச் சோதித்துத் திருத்தவேண்டும் என்ற காரணத்தோடு அவள் கஷ்டத்தைக் கொடுக்கிறாளே, இந்தக் காரணக் கருணை அதைவிட உயர்ந்தது என்று தோன்றுகிறது. நாம் கொஞ்சம் கொஞ்சம்தான் பார்க்கிறோம். இதற்கு முந்தியோ, பிந்தியோ நமக்குத் தெரியவில்லை அதனால் இந்தச் சின்ன இடைவெளிக்குள் ஏற்படுகிற கஷ்டத்தை பார்த்து நமக்குக் கெடுதல் என்று நினைத்துவிடுகிறோம். முக்காலமும் தெரிந்து பார்த்தோமானால், அவள் நமக்குக் கொஞ்சம் கூடக் கெடுதலே செய்வதில்லை என்று புரியும்.

* * *

முந்தி என்ன, பிந்தி என்ன என்று தெரியாமல் கஷ்டம் வருகிற சமயத்தை மட்டும் பார்க்கிறோம். அம்பாளுக்குக் கருணை இருந்தால் ஏன் கஷ்டம் வருகிறது என்று கேள்வி போடுகிறோம். முந்தி நாம் செய்த கர்மம் பிந்தி நமக்கு இந்தக் கஷ்டத்தாலேயே வரப்போகிற நன்மை இவை மட்டும் தெரிந்து விட்டால் நாம் இப்படிச் செய்ய மாட்டோம். அது தெரியாதபடி மனிதனை

Koviloor Digital Library

வைத்திருக்கிறாள்! அதுவும் அவள் விளையாட்டுத்தான்.

இதெல்லாம் தெரியாதபோதே மநுஷ்யனுக்கு இத்தனை ஆணவம், அகங்காரம் இருக்கிற தென்றால் திரிகாலமும் தெரிந்தால் இவனுடைய அக்ரமத்துக்கு எல்லையே இல்லாமல் போய்விடும். இவன் அடங்கிக் கிடக்க வேண்டும் என்றே இப்படி வைத்திருக்கிறாள்.

* * *

அம்பாள் நம்மைக் கஷ்டப் படுத்தி சந்தோஷப் படுபவள் அல்ல. இப்படிநாம் நினைக்கவே கூடாது. எல்லாக் காலத்திலும் நமக்குப் பந்துவாக, சகாயமாக இருப்பது தாயும் தந்தையுமாக, அம்மையப்பனாக இருக்கிற அவள் தான்.

* * *

காமேசுவரி என்றும், காமாக்ஷி என்றும் பெயர் படைத்த பராசக்தியை மனமுருகிப் பிரார்த்தித்தால் அவள் நம் காமத்தை அடியோடு துவம்ஸம் செய்து விடுகிறாள். காமேசுவரிதான் பஸ்மமாகிவிட்ட காமனை மறுபடி உண்டாக்கினவள். அதன்பின் காம தகனம் செய்த பரமேஸ்வரனுக்குக் காமம் பொங்குகிறமாதிரி தன் கண்களில் பிரேமை பொங்கப் பார்த்தவள்தான் காமாக்ஷி.

இவளுடைய அநுக்ரகத்தால் நமக்குக் காமஜெயம் ஏற்படும் என்றால் ஒன்றுக்கொன்று முரணாகத் தோன்றுகிறது. ஆனால் முரண் இல்லை. பரப்பிரம்மம் லோகப் பிரக்ஞையே இல்லாமல் இருந்து விட்டால், மாயாலோகத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறநாம் எப்படி விடுபடுவது? நம்மை விடுவிக்கவே அதற்குக் காருண்யம் உண்டாகிறது. இந்தக் கருணையைத்தான் பரமேசு வரனுக்கு உண்டான காமம் என்று சொல்கிறோம். இந்தக் கருணை உணர்வு அவருக்குப் பிறப்பதற்குக் காரணமா யிருந்த சக்தியையே காமாட்சி என்கிறோம். ஸமஸ்த ஜீவராசிகளும் க்ஷேமமாக இருக்கவேண்டும் என்ற காமம் தவிர, வேறு ஓர் ஆசையும் இல்லாத பரம அன்பு நிலை அது.

* * *

Koviloor Digital Library

சமத்துவம் சமத்துவம் என்று இந்தக் காலத்தில் வாய்ப்பேச்சில் நிறையச் சொல்கிறோம். ஆனால் ஞானமில்லாமல், வெறும் பாலிடிக்ஸாகச் சொல்கிறோம். காரியத்தில் இது முக்கால்வாசி பொய்யாகவே இருக்கிறது. காமாட்சியின் கடாட்சம் பெற்றவனுக்கோ அத்வைத ஞானமே சித்தித்து விடுகிறது. அவனுக்குப் பார்ப்பதெல்லாம் ஒரே பரம்பொருள் தான்.சத்தியமான சமதரிசனம் அவனுக்குதான் இருக்கிறது. அவனுக்கு காடும் வீடும் சமமாகிவிட்டது என்கிறார் மூகர்.

* * *

நமக்கு இருக்கிற சக்தி எல்லாம் அவளுடையது தான். ஒரே அகண்ட பராசக்திதான் கண்டம் கண்டமாக, துண்டு துண்டாகி இத்தனை ஜீவராசிகளிடமும் துளித்துளி சக்தியை வெளிப்படுத்துகிறது. நாம் சொந்த முறையில் எதையும் சாதித்ததாகப் பெருமைப்பட்டுக் கொள்ளவும், அகம்பாவம் கொள்ளவும் கொஞ்சம்கூட நியாயமே இல்லை. நாம் எதைச் செய்திருந்தாலும் எல்லாம் அவள் கொடுத்த சக்தியால்தான் நடக்கிறது இதை உணர்ந்து அகம்பாவம் சிறிதும் இல்லாமல் அவளிடம் சரணாகதி செய்தால் ஒரே அம்மாவான அவள் இகத்திலும் பரத்திலும் பரமாநுக்கிரகம் செய்வாள்.

* * *

எப்படி எதுவும் கேட்கத் தெரியாத குழந்தைக்கு வேண்டியதைத் தாய் தானே கவனித்துத் தருகிறாளோ, அப்படியே ஜகன்மாதாவாகவும், கருணாமூர்த்தியாகவும் உள்ள அம்மா, உண்மையான பக்தி வைத்தவர்கள் தன்னை எதுவும் கேட்காவிட்டாலும்கூட, தானாகவே அவர்களுக்கு இகலோகத்தில் வித்தை, செல்வம், தேககாந்தி முதலியவற்றைத் தந்து, பின்பு ஞானத்தில் பழுத்துப் பரமானந்தத்தைப் பெறும்படி அருள்புரிவாள்.

அம்பாளின் பாதத்தில் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய திரிமூர்த்திகளும் நமஸ்காரம் பண்ணிக்

Koviloor Digital Library

கொண்டிருக்கிறார்கள். அதனால் இவள் பாதத்தில் நாம் பண்ணுகிற அர்ச்சனை அவர்களுடைய சிரசுக்கும் பண்ணிய அர்ச்சனையாகிறது என்று ஆசார்யாள் சொல்கிறார். அவளுடைய பாதத்தில் விஷ்ணு, பிரம்மா, இந்திரன் முதலானவர்களின் கிரீடத்தில் உள்ள ரத்தினமணிகளிலிருந்து எழுகிற ஒளி கற்பூர ஆரத்தி செய்வதுபோல் பிரகாசிக்கிறது என்கிறார் இப்படி எல்லா தேவர்களும் அவள் பாதத்தில் கிடப்பதாகச் சொல்வற்குத் தாத்பர்யம் ஒரு தேவதை உசத்தி, இன்னொன்று, தாழ்த்தி என்பதல்ல.

எல்லா சக்திகளும், மநுஷ்யர்களின் சக்தி, மிருகங்களின் சக்தி, தேவர்களின் சக்தி, இயற்கையில் காண்கின்ற பல சக்தி, இவை எல்லாமும் மூலமான ஒரு சக்தியின் திவலைகளே என்பதுதான் தாத்பரியம். இதைத்தான் ஸயன்சிலும் ஒரே எனர்ஜி பலவிதமான அணுக்களாக, அலைகளாக ஆகியிருக்கிறது என்கிறார்கள். அந்த மூல சக்தியை அன்போடு ஆராதித்தால் அதுவும் அன்போடு அநுக்கிரகம் செய்கிறது. மற்ற தனித் தனித் தேவதைகளுக்கு இருக்கிற சக்தியெல்லாமும் இதனிடமிருந்து வந்ததுதான். எனவே அந்தசக்தியை அம்பாளாக ஆராதிக்கிறபோது எல்லா தேவதைகளின் அநுக்கிரகத்தையும் பெற்று விடலாம்.

* * *

அம்பாளின் மகிமையை செளந்தர்ய லஹரியில் ஆசார்யாள் சொல்கிறார். அம்மா! ஒன்பது சுற்றுப் பிரகாரங்களை உடைய வாஸஸ்தானத்தில் உள்ளுக்குள்ளே அந்தப்புரத்தில் பரப்பிரம்மஸ்வரூபமான பரமேசுவரனுடன் நீ சேர்ந்திருக்கிறாய். அந்த அந்தப் புரத்துக்கு அருகில் வரவே எவருக்கும் யோக்கியதை இல்லை. வெளியிலே ஒன்பது சுற்றுக்களையும் தாண்டியிருக்கிற வாசலில்தான் மகா பெரிய இந்திராதி தேவர்களும் காத்துக்கிடக்கிறார்கள். இந்த வெளி வாசலில் காவல் செய்கிற அணிமா முதலிய ஸித்திகளே இந்திராதி

Koviloor Digital Library

தேவர்களுக்கு அஷ்ட மகாஸித்திகளைக் கொடுத்து விடுகிறார்கள் என்கிறார்.

இந்த ஒன்பது கட்டு அரண்மனைதான் ஸ்ரீசக்கரம் என்கிற அம்பாள் யந்திரம். ரூபமேயில்லாத பராசக்தி திவ்விய மங்கள ஸ்வரூபத்துடன் அவயவங்களோடு காமேசுவரியாக வந்த மாதிரி, இந்த யந்திர ரூபத்திலும் இருக்கிறாள். பார்த்தால் ஏதோ கோடுகளும் கோணங் களுமாகத் தெரியும். ஆனால் இது அம்பாள்உருவமே.

சில சப்தங்களுக்குத் தெய்வீக சக்தி இருப்பதால் அவற்றை மந்திரம் என்கிறோம். இப்படியே சில விதமான கோடுகள் கோணங்களைக் கொண்ட சித்திரங்களுக்கு தெய்வீகமான சக்தி உண்டு இவற்றை யந்திரம் என்கிறோம்.

* * *

அம்பாளின் பல ரூபங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒரு மந்திரம் உண்டு. காமேசுவரி அல்லது காமாக்ஷி என்கிற லலிதையாக உள்ளபோது அவளுடைய மந்திரம் ஸ்ரீவித்யா யந்திரம் ஸ்ரீ சக்கரம், ஸ்ரீசக்கரத்தில் ஆவரணங்கள் என்கிற ஒன்பது சுற்றுக்கள்இருக்கின்றன. அவற்றின் நடு மையத்தில் திரிகோணத்தில் மத்யஸ்தானமாக உள்ள பிந்து என்கிற புள்ளி ஸாக்ஷாத் பராசக்தி. மற்ற ஆவரணங்கள் இதைச் சுற்றிச் சுற்றி உள்ள கோட்டைகள் மாதிரி.

* * *

சிருஷ்டி முழுவதும் பிறந்த மூல முக்கோணமான அந்தப்புரத்தில் பரப்பிரம்மமாகிற காமேசுவரனோடு சேர்த்து காமேசுரியாக இருக்கிறாள் பராசக்தியான காமாக்ஷி. அவளே பூரண சக்தி. வெளியில் ஒன்பது ஆவரணங்களிலும் சுற்றிச் சுற்றிப் பல்வேறு தேவதைகள் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் பராசக்தியின் அம்சங்கள். இவர்களுக்கும் ஒவ்வொரு வித சக்தி உண்டு. எல்லாவற்றுக்கும் வெளியே உள்ள ஆவரணத்தில் அணிமா முதலிய எட்டு தேவதைகள் காவல் இருக்கிறார்கள். (தன்

Koviloor Digital Library

சரீரத்தை அணுமாதிரி சின்ன தாக்கிக் கொள்கிற ஸித்தி அணிமா)

* * *

அம்பாளுடைய சிரஸில் ஒரே கறுப்பாக இருக்கும் கேசங்களுக்குமத்தியில் வெள்ளை வெளேர் என்று ஒரு கோடு போகிறதே, இதுஎன்ன கோடு? ஒஹோ? அம்பாளுடைய முகத்தில் வதனஸௌந்தர்யப் பிரவாஹம் இருக்கிறதே, அந்த லாவண்யப் பிரவாஹந்தான் இப்படி ஒரேயடியாக எதிர்த்துப் போகிறதுபோல் இருக்கிறது. வெள்ளம் அதிகமாக இருந்தால் எதிர்த்துப்போகும் அல்லவா? அப்படி அம்பாளுடைய வதன ஸௌந்தர்ய பிரவாஹந்தான் இப்படி எதிர்த்துப் போகிறதோ என்று வெள்ளைவெளேர் என்று இருக்கும் வகிட்டைப் பார்த்து சொன்னார் ஆதிசங்கரர்.

* * *

உறியடி என்று ஓர் உத்ஸவம் உண்டு. அப்போது சறுக்கு மரத்தில் பத்து இருபது பேர்கள் ஏறுகிறார்கள். எல்லோரும் ஏறிவிடமுடியாது. ஒருவன் ஏறுகிறான். சறுக்கி விழுகிறான். பலர் ஏறி ஏறிவிழுகிறார்கள். கடைசியில் ஒருவனாவது ஏறி விடுகிறான்.

அந்த ஒருவன் ஏறுவதற்கு இத்தனை பிரயாசை; பல பேர்கள் சறுக்கி விழவேண்டியிருக்கிறது, அப்படி, நம்மில் ஒருவன் பூரணத்துவம் அடைந்துவிட்டால் போதும். இத்தனை கோயில், இத்தனை மதம், பிரசாரம் எல்லாவற்றுக்கும் அது ஒன்றே லட்சியம். மனித ஜன்மா எடுப்பதன் பிரயோஜனமே அதுதான்.

* * *

, LXXX

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீ காஞ்சி மாமுனிவர் அந்தாதி

கரூர் எல்.
சுப்பிரமணியன்